# தமிழரசு

1.10.1994 ரூ.3



பூவையர் மகிழும் வண்ணம்
புதுமைகள் படைத்திடும் கதர்பட்டுப் புடவைகள்
அணியும் அழகே ஓர் ஆனந்தம்

அனைத்து
காதி கிராப்ட்
அங்காடிகளில் கிடைக்கும்



DIPR No.678/DIS/93/247

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம்
குறளகம், சென்னை - 600 108

# இந்த இதழில்...


தமிழ்நாடு முதலமைச்சரின் பதக்கம் வழங்கும் விழாவில், மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆற்றிய உரை . . . . . . 2

ஈடு இணையற்ற உயர்ந்த தலைவர் . . . . 11

நல்ல தமிழ்ச் சொற்கள் . . . . . . . . . 12

ஒப்பற்ற தலைவர் . . . . . . . . . . 13

வேலூரில் நடந்த வட ஆர்க்காடு அம்பேத்கர் மாவட்ட அரசு விழாவில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆற்றிய உரை . . . . . . . . . 14

மாமனிதர் பேரறிஞர் அண்ணா . . . . . . . 17

காந்தியடிகள் வாழ்விலே . . . . . . . . 21

அறிவொளி காண . . . . . . . . . . . 23

சமூகநீதி காத்த வீராங்கனை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கு 69 சதவிகித இட ஒதுக்கீட்டுச் சாதனைகளுக்காக மாற்றுக் கட்சியினர் அளித்த பாராட்டு விழாவில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் உரை . . . . 24

பைந்தமிழ்க் கவிஞர் பாரதி வசித்த இல்லங்கள் . 29

தமிழ் வளர்த்த பெரியார்: பேரறிஞர் அண்ணா . 38

படமும்-செய்தியும் . . . . . . . . . . 41

மாணவர் பக்கம் . . . . . . . . . . . 42

இராமநாதபுரம்: கட்டட மையம்- சீர்மிகு பணிகள் . . . . . . . . . . 43

கண்கவர் வண்ணப் பொம்மைகள் . . . . . 47




## இதழ்தோறும் ஓர் இனிய குறள்

அறவாழி அந்தணன் தாள்சேர்ந்தார்க் கல்லால்
பிறவாழி நீந்தல் அரிது (8)

* அறக்கடலாக விளங்கும் கடவுளின் திருவடிகளைப் பொருந்தி நினைக்கின்றவர்க்கு அல்லாமல், மற்றவர் பொருளும் இன்பமுமாகிய மற்ற கடல்களைக் கடக்க முடியாது.


தமிழரசு

திருவள்ளுவராண்டு: 2025

புரட்டாசித் திங்கள்: 15

மலர்:25 இதழ்:7

1.10.1994

விலை: ரூ. 3


தமிழரசு வெள்ளிவிழா ஆண்டு

# கடமையுணர்வும் துணிவுடைமையும் காவல் துறையின் இரு கண்கள்

நான்காம் அட்டை சொல்லும் செய்தி

## தமிழ்நாடு முதலமைச்சரின் பதக்கம் வழங்கும் விழாவில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆற்றிய உரை (19.9.1994)

அமிழ்தினும் இனிய அருந் தமிழையும் உயிரினும் மேலான நனி நாகரிகத்தையும், முத்தமிழ்ச் சங்கங்கள் வைத்து, முறையோடு வளர்த்த, சரித்திரச் சிறப்புப்பெற்ற முக்கூடல் திருநகர், இந்த மதுரை மாநகர். தமிழ் கூறும் நல்லுலகம் என்றென்றைக்கும் நினைவுகூரும், அருள்மிகு மீனாட்சி எழுந்தருளி இருக்கும், இந்தக் கூடல் மாநகருக்கு, இன்று வருகை தந்து, தமிழ்நாடு முதலமைச்சரின் பதக்கம் வழங்கும் விழாவில் கலந்து கொண்டு, பெருந்திரளாகக் கூடி இருக்கும் உங்கள் அனைவரையும் காண்பதில், நான் எல்லையில்லா மகிழ்ச்சி அடைகிறேன்.

ஏற்றமிகு இந்த விழாவில், பதக்கங்களையும், விருதுகளையும் பெற்ற வீரர்களுக்கும், வீராங்கனைகளுக்கும், எனது இதயம் கனிந்த பாராட்டுக்களையும், நெஞ்சம் நிறைந்த நல்வாழ்த்துக்களையும், உரித்தாக்கிக் கொள்கிறேன்.

வீர உணர்வுடனும், தியாக மனப்பான்மையுடனும், சீரிய முறையில் கடமையாற்றுபவர்களுக்கு, ஆண்டு தோறும் வழங்கப்படுகின்ற, பெருமை



வாய்ந்த இந்துப் பதக்கங்கள், ஆறு கோடி தமிழக மக்களின் பாராட்டுக்களையும், ஆசிகளையும் தன்னகத்தே கொண்டு விளங்குகிறது என்று சொன்னால், அது மிகை ஆகாது.

நாட்டு மக்களின் உயிர், உடைமை ஆகியவற்றைப் பாது காக்க, அமைதியும், ஒழுங்கும் சமுதாயத்தில் நிலவ, தங்கள் உழைப்பு, ஆற்றல், நேரம் ஆகியவற்றை அர்ப்பணிக்கும் காவல் துறையினருக்கு, மக்கள், தாங்கள் தேர்ந்தெடுத்த அரசின் வாயிலாகச் செலுத்துகின்ற நன்றிக் காணிக்கை தான், இந்த விருதுகளும், பதக்கங்களும்.

கடமை உணர்வும், துணிவுடைமையும், மக்கள் நலன் காக்கும் பணியில், ஈடுபட்டு இருக்கும் காவல் துறையினருக்கு, இரண்டு கண்கள் போன்றவை. கொடுத்த பணிகளை எப்பாடு பட்டாகிலும், நியாயமான வழியில், திறமையோடு முடிக்க வேண்டும், என்று முயற்சிப்பது தான் கடமை. தனது உயிரையும் துச்சமென மதித்து, கொடியவர்களிடமிருந்து, மக்களைக் காக்கின்ற மன உறுதி தான், துணிவுடைமை.

கடமையுணர்வுடனும், துணிவுடனும் செயலாற்றி, மற்றவர்களுக்கு ஒரு முன்னுதாரணமாக விளங்கும், நல்லவர்களை, வல்லவர்களை, பதக்கங்கள் கொடுத்து, கௌரவிப்பதன் மூலம், இந்த அரசு, கடமையுணர்வு மிக்க பணியாளர்களை, எந்த அளவிற்கு மதிக்கின்றது என்பதை, நாம் உலகிற்கு உணர்த்திக் கொண்டு இருக்கிறோம்.

இந்தியத் துணைக் கண்டத்திலேயே, காவல் துறைக்கு உரித்தான, முக்கியத்துவத்தையும், மதிப்பையும், அளித்து வருகின்ற ஒரே மாநிலம், தமிழ்நாடு தான் என்பதை என்னால் உறுதியுடன் கூற முடியும்.

சுதந்திரம் அடைந்த பின்பு, எத்தனையோ அரசாங்கங்கள், இந்த மாநிலத்தில் ஆட்சி புரிந்திருந்தாலும், நாங்கள் பதவிக்கு வந்த பின்பு தான், காவல் துறையின் முக்கியத்துவத்தை உணர்ந்து, காவல் துறையைச் சீரமைத்து, மேம்படுத்த நடவடிக்கைகள் மேற்கொண்டோம்.

இன்று தமிழகக் காவல் துறையின் Image-இல் ஒரு மாபெரும் மாறுதல் ஏற்பட்டுள்ளது. காவல் துறையின் அணுகுமுறையிலும், அடிப்படை எண்ணங்களிலும், விரும்பத் தக்க மாறுதல்கள் ஏற்பட்டுள்ளன. காவல் துறையினர், உற்சாகத்துடனும், பணி ஆர்வத்துடனும் செயல்பட, பல புதிய திட்டங்கள், செயல்படுத்தப் பட்டு வருகின்றன.

காவல் துறையை நவீனமயமாக்க வேண்டும். அதே நேரத்தில், மனிதாபிமானமிக்க இயக்கமாக மாற்ற வேண்டும் ....Modernise and Humanise the Police Force.. என்பது உங்கள் அன்புச் சகோதரியின் தலைமையில் அமைந்துள்ள, தமிழக அரசின் தாரக மந்திரம். நாம் செயல்படுத்தி வரும் திட்டங்களும், நடைமுறைப்படுத்தி வரும் நலத் திட்டங்களும் மற்ற மாநிலங்கள் கடைப்பிடிக்க வேண்டிய, முன்னோடித் திட்டங்கள் என்று, நம்மைப் பிடிக்காதவர்கள் கூடப் பாராட்டுகிறார்கள். பல மொழிப் பத்திரிகைகளும், புகழ்ந்து எழுதிக் கொண்டிருக்கின்றன.



குறை சொல்வது மிக மிக எளிது. ஆனால், ஒரு பணியைச் செய்து காட்டுவது கடினம். எதற்கு எடுத்தாலும், காவல் துறையைக் குறை கூறி, அவர்கள் மீது பழியைப் போட்டு, தங்கள் நிர்வாகத் திறமையின்மையை, மறைக்கப் பார்க்கின்ற முயற்சிகள் தான், இதுவரை ஏராளமாக நடந்து உள்ளன. ஆனால், என்னைப் பொருத்த வரையில், குறை கூறுவதைத் தவிர்த்துவிட்டு, அந்தக் குறைகளுக்கான, அடிப்படைக் காரணங்களைக் கண்டறிந்து, அவற்றைத் துணிவுடன் களைவது தான், எனக்குப் பிடிக்கும்.

காவல் துறை போன்ற ஒரு அமைப்பை நாம் எந்த அளவிற்கு உயர்வாகக் கருதி, மதிப்பளிக்கின்றோமோ, அந்த அளவிற்குத் தான் அந்த அமைப்பும், அதன் அங்கத்தினர்களும், எண்ணத்தால் உயர்ந்து, உன்னதமாகவும், உற்சாகமாகவும் செயல்படுவார்கள். ஒரு சாதாரணமான இயந்திரமாக இருந்தாலும் கூட, அதனை நன்முறையில் பராமரிக்க, பல்வேறு முயற்சிகளையும் நடவடிக்கைகளையும், நாம் மேற்கொள்ள வேண்டியிருக்கிறது. ஒரு இயந்திரத்திற்கே, இத்தனைச் சிரத்தை என்றால், காவல் துறையைப் போன்ற, ஒரு மாபெரும் அமைப்பிற்கு, அரசாங்கம் எத்தகையதொரு முக்கியத்துவத்தையும், நன்மதிப்பையும், அளிக்க வேண்டும் என்று, நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். இந்த இயக்கத்தில், தங்களை முழுமையாக அர்ப்பணித்துக் கொண்டு, ஆபத்தான பணிகளில், அனுதினமும் ஈடுபட்டு வருகின்றவர்களுக்கு, இந்த அரசு, மிகுதியான உற்



சாகத்தையும், ஆர்வத்தையும், தூண்டி விடவேண்டும் என்பது தான் எனது எண்ணம். இந்தப் புதிய சிந்தனைகளின் வெளிப் பாடாகத்தான், நான் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற பின்பு, ஒரு புதிய அணுகுமுறையுடன், காவல் துறையை நவீனமயமாக்கவும், அதே சமயத்தில், காவல் துறை யினரின் பணி ஆர்வத்தை, ஊக்குவிக்கவும், பல்வேறு திட்டங் களைத் தீட்டிச் செயல்படுத்தி வருகிறோம். காவல் துறையின் மீது படிந்துள்ள, சில அழுக்குகளை நீக்கி, இதனை ஒரு மனிதாபி மானமிக்க, மக்கள் நல இயக்கமாக, உருவாக்க வேண்டும் என்று, நான் ஏற்கெனவே உறுதி எடுத்துக் கொண்டேன்.

காவல் பணி என்பது, கடுமை யான பணி. ஆபத்துக்குறைவான பணிகளில் சேர்வதற்கு, முயற்சிகள் மேற்கொண்டு, அவற்றில் சேர வாய்ப்புகள் இல்லாத சூழ் நிலையில் தான், காவல் துறையில் வந்து சேருவார்கள். இது தான் நாங்கள் ஆட்சிக்கு வரும் வரை, இருந்து வந்த நடைமுறை. ஆனால், இன்று, அந்த நிலையை மாற்றி உள்ளோம்.

அசுர வேகத்தில் வளர்ந்து வருகின்ற, இன்றைய உலகில், காவல் துறையின்றி, ஒரு சமுதாயம் அமைதியாக இயங்க முடியாது. பொது அமைதியும், சட்ட ஒழுங் கும், சரிவரக் காக்கப்படவில்லை என்றால், அந்தச் சமுதாயத்தின் வளர்ச்சிக்கு, முட்டுக்கட்டை ஏற் பட்டு, அதன் சீரழிவிற்குக் காரணமாகிவிடும் என்று பல அறிஞர்கள் கருத்துத் தெரிவித் துள்ளார்கள். எனவேதான், தமிழகக் காவல் துறைக்கு, ஒரு புதிய முகவரியைத் தேடித் தரு வதற்காக, எங்கள் அரசு, பல்வேறு அதிரடி நடவடிக்கைகளையும், மேற்கொண்டு வருகின்றது.

திறமையுடனும், சிறப்புடனும், காவல்துறை கடமையாற்ற, தேவை யான வாகனங்கள், உபகர ணங்கள், நவீன ஆயுதங்கள், கட்ட டங்கள், தளவாடங்கள், தொலைத் தொடர்புச் சாதனங்கள், ஆகிய அனைத்தையும் வழங்கி வரு கின்றோம்.

தவறு செய்யும் காவலர்களைக் கடுமையாகத் தண்டிக்கும் அதே நேரத்தில், நல்ல முறையில், சேவை உணர்வு மனப்பான்மையுடன், பணியாற்றும் காவலர்களை, ஊக்குவிக்க வேண்டும் என்ற எனது கருத்திற்கு, மாற்றுக் கருத்து நிச்சயமாக இருக்க முடியாது என்று கருதுகிறேன். அதன் விளை வாக இன்று, தமிழகக் காவல் துறை, அனைவராலும் போற்றி, மதிக்கப்படுகின்ற ஒரு துறையாக அனைவரும் விரும்பிச் சேர்ந்து, பணியாற்றி வரும் ஒரு துறையாக விளங்குகிறது. காவல் துறையில் சேர்ந்து பணியாற்றுவதை, ஒரு கௌரவமாகக் கருதுகின்ற, ஒரு உன்னதமான சூழ்நிலை, ஏற்பட்டி ருப்பதை எண்ணி, எனது மனம் ஆனந்தம் அடைகின்றது.

நமது மாநிலத்தைப் பொருத்த வரையில், முதலமைச்சர்களே பெரும்பாலும், காவல் துறையை, நேரடியாக நிர்வகித்து வந்திருந் தாலும், இந்தத் துறை, ஒரு ஒதுக்கப்பட்ட துறையாக, கவனிப் பாரற்றுக் கிடந்தது. எங்கள் மூன்றாண்டு ஆட்சிக் கால முடி வில், காவல் துறையை இன்று, மக்கள் மதிக்கின்ற, அனைவரும் விரும்புகின்ற ஒரு துறையாக மாற்றி உள்ளோம், என்பதைச் சுட்டிக் காட்டுவதில், மகிழ்ச்சி அடைகிறேன்.

பெரிய அளவில், காவலர் பணியிடங்களுக்குத் தேர்வு செய் வது என்பது, ஒவ்வொரு அரசாங் கத்திற்கும் ஒரு சவாலாகவும் சில நேரங்களில், அந்த அரசாங் கத்திற்குச் சோதனையை உண்

டாக்குகின்ற ஒரு விஷயமாகவும், மாறிவிடுவது வழக்கம். இதை யாரும் மறுக்க முடியாது. காவலர்கள் தேர்வு செய்ய, விளம்பரங்களை வெளியிட்டு, தேர்வு செய்யும் நேரத்தில், தேர்வு நிறுத்தப்பட்டும் சில சமயங்களில், தேர்வு செய்யப்பட்ட காவலர்கள், பணியின் சேரவிடாமல் தடுக்கப்பட்ட சம்பவங்களும், நமது மாநிலத்திலேயே நிகழ்ந்துள்ளன.

இருப்பினும், கடந்த மூன்று ஆண்டுகளில், 10,000-க்கும் மேற்பட்ட காவலர்களை, நாங்கள் பதவிக்கு வந்த பின்பு தோற்றுவித்த, சீருடைப் பணியாளர்கள் தேர்வாணை வாரியத்தின் மூலமாகத் தேர்ந்தெடுத்து நியமனம் செய்துள்ளோம். இந்தப் பணியில், எவரும் நம்மைக் குறை கூற முடியாத வண்ணம், அனைவரது பாராட்டுக்களையும் பெற்று, சிறப்பான முறையில் செயலாற்றி இருக்கின்றோம். முதன் முதலில், 5000 காவலர்களை நியமனம் செய்தால் போதும், என்ற எண்ணத்துடன், எங்கள் அரசு விண்ணப்பங்களை வரவேற்றது. ஆனால், தேர்வாணைக்கு வந்து சேர்ந்த விண்ணப்பங்களின் எண்ணிக்கை, 70,000 க்கும் மேல். அதில் அதிகமான கல்வித் தகுதியைப் பெற்றவர்கள், ஏராளமாக இருந்தார்கள். எனவே, தகுதி உடையவர்கள், நிறையப் பேர் போட்டியிட்ட காரணத்தால், 10,000 காவலர்களை நியமனம் செய்ய, ஆணை பிறப்பித்தோம். எந்த விதமான பாரபட்சமுமின்றி, தகுதியுடைய 10,000 பேரை, அதாவது அப்போது உள்ள காவலர்களின் மொத்த எண்ணிக்கையில், ஆறில் ஒரு பங்கினை, கூடுதலாக நியமனம் செய்திருக்கிறோம் என்ற சாதனையை எண்ணிப் பார்க்கும் போது என் மனம் மகிழ்ச்சி அடைகின்றது.

அடுத்த கட்டமாக, 500 உதவி ஆய்வாளர்கள் தேவை என்று, நாங்கள் கொடுத்த விளம்பரத்திற்கு, 22,000 பட்டதாரிகளும், முதுநிலைப் பட்டதாரிகளும், மனு செய்துள்ளார்கள். இறுதிப் புகலிடம் தான் காவல் துறை, என்ற நிலை மாறி, இன்று காவல் துறையில் சேர்ந்து பணியாற்றுவதை, ஒரு கௌரவமாக, ஒரு மகத்தான பேறாக நினைக்கின்ற ஒரு மனப்பான்மை, இளைஞர்கள் மத்தியில் ஏற்பட்டுள்ளது என்பதைத் தான் இது காட்டுகின்றது. அந்த வகையில், காவலர்களின் பொற்காலம் தான், தமிழகத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்பதில் ஐயமில்லை.

நாங்கள் ஆட்சிப் பொறுப்பு ஏற்கும் போது, தமிழ்நாட்டிலுள்ள 1125 காவல் நிலையங்களில், 30 காவல் நிலையங்களுக்கு மட்டும் தான், ஜீப்புகள் வழங்கப்பட்டு இருந்தன. ஆனால் கடந்த மூன்றாண்டுகளில், 663 காவல் நிலையங்களுக்கு, ஜீப்புகள் வழங்கப்பட்டு விட்டன. எஞ்சியுள்ள காவல் நிலையங்களுக்கு, 1995-ஆம் ஆண்டு, மார்ச் மாத இறுதிக்குள், ஜீப்புகள் வழங்கப்பட்டு விடும். அதற்கான ஆயத்த நடவடிக்கைகள், துரிதமாக நடைபெற்று வருகின்றன.

வளர்ந்து வரும் சமுதாயத்தின் தேவைகளுக்கு ஏற்ப, காவல் துறையில் புதிய பிரிவுகளை, அதாவது Specialised Branches ஏற்படுத்தி, ஒரு சாதனையைப் படைத்துக் காட்டியதும், உங்கள் அன்புச் சகோதரியின் அரசுதான்.

நமது நாட்டின் இறையாண்மைக்கும், அமைதிக்கும், ஊறு விளைவிக்க நினைக்கும், அந்நியச் சக்திகளின் ஊடுருவலை, அடியோடு தடுக்க கடலோரப் பாதுகாப்புப் படை Coastal Security



Force; தொன்மையும், பழமையும் மிக்க, நமது கலைப் பொக்கி ஷங்களை, திருக்கோயில்களைப் பாதுகாக்க, திருக்கோயில் பாது காப்புப் படை Temple Protection Force; தனித் திறமை வாய்ந்த, கடினமான பணிகளை மேற் கொள்ள, சிறப்பு அதிரடிப் படை, Special Security Group, போன்ற பல்வேறு சிறப்புப் பிரிவுகளை ஏற்படுத்தி, மற்ற மாநிலங்களுக்கு, ஒரு முன்னோடியாக விளங்கி வருகின்றது உங்கள் அன்புச் சகோ தரியின் அரசு. இந்தப் பிரிவுகளின் செயல் திறனையும், செயல் பாட்டையும், மற்ற மாநிலத்தவர் வியந்து பாராட்டி இதுபோல அங்கும் அமைப்பதற்கு, அறிவுரை களையும், ஆலோசனைகளையும், ஏன்- பயிற்சியையும், நமது காவல் துறையினரிடம் இருந்து, பெற்றுக் கொண்டு செல்கிறார்கள் என்ப தைப் பெருமையுடன் சுட்டிக் காட்டக் கடமைப்பட்டுள்ளேன்.

தமிழகக் காவல் துறையை நவீனமயமாக்க, 80 கோடி ரூபாய் மதிப்பில், பல்வேறு புதிய திட்டங்கள், செயல்படுத்தப்பட்டு வருகின்றன. புதிய வாகனங்கள், புதிய பணியிடங்கள், அதி நவீன ஆயுதங்கள், தொலைத் தொடர்புச் சாதனங்கள், கணிப்பொறிகள் Computers, குற்றப் புலனாய்வுப் பிரிவில் விஞ்ஞான மயமான உத்திகள், புதிய சீருடைகள் இவற்றை எல்லாம் கொடுத்து, காவல் துறைக்கு ஒரு புதிய பொலிவினை, ஏற்படுத்தி வரு கின்றோம்.

நாங்கள் ஆட்சிக்கு வருவதற்கு முன்பு கலைக்கப்பட்ட, தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக் கழகத்தை, மீண்டும் உயிர் பெறச் செய்தோம். நிதி ஆதாரங்களை ஏற்படுத்தி, சுறுசுறுப்புடன் செயல்பட வைத் தோம். அதன் விளைவாக, கடந்த மூன்றாண்டுகளில் மட்டும், இந்த கழகம், 25 கோடி ரூபாய் செலவில், 2000 வீடுகளையும், குடியிருப்பு களையும் கட்டி, காவலர்களுக்கு வழங்கியுள்ளது.


பதவி உயர்வு இன்றித் தேங்கிக் கிடந்த, 12,409 பேருக்கு, அடுத்த கட்டப் பதவி உயர்வை, இந்த மூன்று ஆண்டுக் காலக் கட்டத்தில் வழங்கி, புதிய சாதனையைப் படைத்துள்ளது உங்கள் அன்புச் சகோதரியின் தலைமையின் அமைந்த, இந்த அரசு.

காவலர் முதல், ஆய்வாளர் நிலை வரை, உள்ள அனை வருக்கும், நிரந்தரமாக, 50 சதவிகித மானியத்துடன், முக்கிய உணவுப் பொருட்கள்; Kit Allownce; Maintenance Allownce; Food Allowance என்று காவலர்களின் நலன் காக்கத் தேவைப்படுகின்ற எல்லா நியாயமான படிகளையும், நாங்கள் அதிகப்படுத்தி வழங்கி இருக்கின்றோம்.

காவலரின் மருத்துவ வசதிக்கு என, தனித் திட்டம் ஒன்றைத் தீட்டி, தனியார் மருத்துவ மனைகளிலும், அவர்கள் சிகிச்சை பெற, ஏற்பாடு செய்துள்ளோம். ஊட்டி, கொடைக்கானல் போன்ற மலைப் பகுதிகளில், அமைந்துள்ள காவல் நிலையங்களுக்கு, Heater வசதிகள் செய்து கொடுக்கப்பட்டு வருகின்றன. அப்பகுதியில் பணி யாற்றும் காவலர்களுக்கு மட்டு மின்றி, ஒரு தனிப் படியை வழங்க வேண்டும் என்று, சமீபத்தில் நான் ஆணையிட்டுள்ளேன்.

எந்த ஒரு படையானாலும், தொடர்ந்து அது சிறப்புடன் பணியாற்ற, பயிற்சி அவசியம் என்பதை, எங்கள் அரசு அறிந்து வைத்துள்ளது. தற்போதுள்ள காவல் பயிற்சி நிலையங்களின், தரத்தை உயர்த்துவதற்கும், நல்ல பயிற்சியாளர்களை ஏற்பாடு செய்யவும் உங்கள் அன்புச் சகோதரியின் அரசு, நடவடிக்கை எடுத்து வருகின்றது. இவற்றிற்குச் சிகரம் வைத்தாற்போல், சென்னை ஆவடிக்கு அருகே, 170 ஏக்கர் நிலப்பரப்பில், Police Academy- காவலர் பயிற்சிக் கழகம் ஒன்று, விரைவில் உருவாக்கப்படும் என் பதை, மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

அனைத்து மகளிர் காவல் நிலையங்கள், என் சிந்தனையில் உதித்த எண்ணங்கள் ஆகும். ஆண் டாண்டுக் காலமாக, சமுதாயத்தில் பல்வேறு கொடுமைகளை அனு பவித்து வந்த, என் அன்புக்குரிய தாய்மார்களும், சகோதரிகளும், தங்களுடைய பிரச்சினைகளை, மனம் விட்டு, பகிர்ந்து கொள்ள, ஒரு அமைப்பு இல்லாத காரணத் தால், பல கொடுமைகளுக்கு ஆளாகி வந்துள்ள நிலையை,



இன்று நாம் மாற்றி அமைத்துள்ளோம். பெண்கள் நலன் காக்க, சட்ட ரீதியாக அவர்களுக்குப் பாதுகாப்பை வழங்க, இன்று ஒரு அமைப்பை அவர்களுக்கு என்று, ஏற்படுத்திக் கொடுத்துள்ளோம். இந்த அனைத்து மகளிர் காவல் நிலையங்கள், சிறப்பாகப் பணியாற்றுவதைக் கண்டு, நம்மைக் குறை கூறியவர்களே, இன்று, நம்மை வியந்து பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள் என்பது, உண்மையிலேயே மகிழ்ச்சிக்குரிய விஷயமாகும். இந்த விஷயத்தில், நாம் இந்தியத் துணைக் கண்டத்தில், மற்ற மாநிலங்களுக்கு மட்டும் அல்ல, உலக நாடுகளுக்கே, முன்னோடியாக இருந்து கொண்டிருக்கிறோம் என்பதைப் பெருமிதத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழகக் காவல் துறையை, உலகமே போற்றுகின்ற காவல் துறையாக, மக்கள் நலப் பேரியக்கமாக உருவாக்கிட, நான் உறுதி பூண்டுள்ளேன். தமிழகத்தில் பொது அமைதியையும், சட்ட ஒழுங்கையும் நிலை நாட்ட, காவல் துறையினர், நல்லவர்களுக்கு நண்பனாகவும், தீயவர்களுக்குச் சிம்ம சொப்பனமாகவும், விளங்கச் செய்ய வேண்டும் என்ற, எனது எதிர்பார்ப்புகளுக்கும், இலட்சியங்களுக்கும், ஈடு கொடுத்து காவல் துறையினர், கடமையுணர்வோடு, தொடர்ந்து செயலாற்றுவார்கள் என்ற நம்பிக்கை, எனக்குப் பரிபூரணமாக உண்டு. எனது நம்பிக்கை, இதுவரை வீண் போனது இல்லை. பொது மக்களுக்கு நண்பர்களாக விளங்கி, பொது அமைதியைக் காக்கும் புனிதப் பணியில், காவல் துறையினர், தங்களை முழுமையாக அர்ப்பணித்துக் கொள்ள வேண்டும் என்று, இந்த நல்ல நேரத்தில், மீண்டும் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். தமிழகக் காவல் துறை, தொடர்ந்து, சீரோடும் சிறப்போடும், பல புதிய சாதனைகளைப் படைக்க வேண்டும் என்று, எனது நெஞ்சத்து நல்வாழ்த்துக்களை உரித்தாக்கிக் கொள்கிறேன்.

காவல் துறையினரோடு, தீயணைப்புத் துறையினரும், சிறைத் துறையினரும், ஊர்க்காவல் படையினரும், மக்கள் நலன் காக்கும் தங்கள் கடமையை, மென்மேலும் சிறப்புடன் ஆற்ற வேண்டும் என்று, இந்த நல்ல நேரத்தில், கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். மக்கள் பணியாற்றும் நீங்கள் அனைவரும், எல்லா வளங்களும், நலன்களும் பெற்று, நல்வாழ்வு வாழ வேண்டும் என்ற, எனது நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். தமிழகக் காவல் துறையினரின், "ஆண்டுத் திரு விழா", என்று எண்ணும் அளவிற்கு, மிகப் பிரம்மாண்டமான அளவில், இந்தப் பதக்கம் அளிக்கும் விழாவை, ஏற்பாடு செய்துள்ள, காவல் துறை இயக்குநர் திரு. எஸ். ஸ்ரீபால் அவர்களுக்கும் வீர விளையாட்டுக்களைக் கண்கவர் முறையில், வடிவமைத்துக் கொடுத்த, காவல் துறை கூடுதல் இயக்குநர், திரு வால்டர் தேவாரம் அவர்களுக்கும் காவல் துறை அதிகாரிகளுக்கும், காவலர்களுக்கும், எனது பாராட்டுதல்களையும், நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

உலகத்திலேயே, இதுவரை, யாரும் செய்யாத ஒரு முயற்சியாக, யாரும் சாதிக்காத ஒரு சாதனையாக, மோட்டார் சைக்கிளில் ஏறி, வீர விளையாட்டுக்களை, வியக்கத்தக்க அளவில், நிகழ்த்திக் காட்ட உள்ள பெண் காவலர்கள், தமிழகத்துப் பெண்கள், எந்த விதத்திலும் ஆண்களுக்குச் சளைத்தவர்கள் அல்ல என்பதை எடுத்துக்காட்ட உள்ளார்கள். ஆபத்தான விளையாட்டை, அழகோடும் துணிவோடும், நடத்திக் காட்டவுள்ள அவர்கள் அனைவருக்கும், எனது மனமார்ந்த பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். மற்ற நிகழ்ச்சிகளில் பங்கு கொள்ளவிருக்கும் காவல் துறை அலுவலர்களுக்கும், எனது பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மதுரை மாநகரக் காவல் துறை ஆணையாளரின் அலுவலகம், தற்போது மக்கள் புழக்கம், மிக அதிகமாக உள்ள ஒரு பகுதியில், பல்வேறு இடர்ப்பாடுகளுடன், செயல்பட்டு வருகிறது. மதுரை நகர் வாழ் மக்களின் நலன் கருதி, அழகர் கோயில் சாலையில் அமைந்துள்ள, இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவரின் இல்லமாக, முன்பு பயன்பட்டு வந்த கட்டடம், காவல் துறை ஆணையாளர் அலுவலகம் செயல்படுவதற்காக வழங்கப்படும் என்பதை, மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். விரைவில் இந்தப் புதிய கட்டடத்தில், ஆணையர் அலுவலகம் செயல்படத் துவங்கும்.

இந்தப் பதக்கம் அளிப்பு விழாவில் கலந்துகொள்ள, இங்கே பெருமளவில் குழுமியுள்ள பொது மக்கள் அனைவருக்கும், எனது வாழ்த்துக்களை உரித்தாக்கிக் கொள்கிறேன்.



# வீரப்பதக்கம் வழங்கும் விழா

# உள்ளங் கொள்ளை கொண்ட வண்ணக்

# கலை நிகழ்ச்சிகள்

**கா**வல்துறையில் தீரச் செயல் புரிந்தவர்களுக்கும், சிறந்த சேவை செய்தவர்களுக்கும் தமிழக முதல்வர் மாண்புமிகு டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள், மதுரையில் நடைபெற்ற எழில்மிகு விழாவில் வீரப்பதக்கங்களை வழங்கினார்.

வீரப்பதக்கம் வழங்கும் விழா , மதுரையில் உள்ள எம்.ஜி.ஆர். விளையாட்டு அரங்கத்தில் *19.9.1994* அன்று நடைபெற்றது. விழா மைதானம் மிகப் பிரம்மாண்டமாக அலங்காரம் செய்யப்பட்டு, அதன் கிழக்கு வாயிலும் வடக்கு வாயிலும் கோட்டை வாசல் போல் வண்ணமுடன் வடிவமைக்கப்பட்டு இருந்தது.

மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள், விழா நடக்கும் எம்.ஜி.ஆர். விளையாட்டரங்கத்திற்கு வருகை தந்ததும், மைதான வாசலில் அவரைக் குதிரைப்படை வீரர்கள் எதிர்கொண்டு வரவேற்று அழைத்து வந்தார்கள். முன்னும் பின்னும் குதிரைப் படையினர் அணிவகுத்து வர, டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள், மைதானத்திற்குள் நுழைந்தவுடன் அங்கு கூடியிருந்த மக்கள் உற்சாகம் பொங்க "புரட்சித்தலைவி வாழ்க", "சமூக நீதிகாத்த வீராங்கனை வாழ்க" என விண்ணை முட்ட வாழ்த்துக்குரல் எழுப்பினார்கள். அரங்கில் அமைந்திருந்த 'சல்யூட்' மேடைக்கு முதலமைச்சர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் வருகையளித்து அம்மேடை மீது ஏறி நின்றார். அப்போது அரங்கில் அணிவகுத்து நின்றிருந்த நீலகிரி மாவட்டக் காவல்படை, தமிழ்நாடு சிறப்புக் காவல்படை, மதுரை மாநகரக் காவல்படை, மகளிர் காவலர்கள், முதலமைச்சரின் சிறப்புப் பாதுகாப்புப் படையினர் 'சல்யூட்' அடித்ததை ஏற்று, பதிலுக்கு டாக்டர் புரட்சித்தலைவியும் 'சல்யூட்' அடித்தார்.

தொடர்ந்து வெள்ளைநிற திறந்த ஜீப் காரில் ஏறி நின்றபடியே, போலீசாரின் அணிவகுப்பைப் பார்வையிட்ட பின், மீண்டும் 'சல்யூட்' மேடைக்கு முதலமைச்சர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் வந்ததும், அரங்கில் நின்றிருந்த *5* படையினரும் அணிவகுத்து வந்து முதலமைச்சருக்கு மரியாதை செலுத்தினார்கள்.

அணிவகுப்பு மரியாதையை மாண்புமிகு முதல்வர் ஏற்றுக்கொண்டார்.

அடுத்து இந்த ஆண்டு காவல்துறையில் வீரச் செயல் புரிந்த *6* பேருக்கும், சிறந்த சேவை புரிந்ததற்காக *59* பேருக்கும், ஊர்க்காவல் படை



5 பேருக்கும், தீயணைப்புப் படை வீரர்கள் 9 பேருக்கும், சிறைத்துறையைச் சார்ந்த 10 பேருக்குமாக- மொத்தம் 89 பேருக்கு முதலமைச்சர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் பதக்கங்களை வழங்கினார்.

இந்த நிகழ்ச்சி முடிந்ததும், அரங்கில் இருந்த 5 படையினரின் விழா நிறைவு அணிவகுப்பு நடந்தது. அவர்களுடன் குதிரைப்படையும், நாய்ப்படையும் அணிவகுத்து வந்தன. துப்பறியும் நாய்ப்படை இதுவரை எந்த அணிவகுப்பிலும் கலந்து கொண்டதில்லை. இந்த ஆண்டுதான் முதன்முறையாக நாய்ப்படை அணிவகுப்பில் கலந்துகொண்டது.

அடுத்து, காவலர்களின் திறமைகளை வெளிப்படுத்தும் சாகச நிக்ழ்ச்சிகளும், கலைநிகழ்ச்சிகளும் நடைபெற்றன.

கட்டுடல் கொண்ட காவலர் நால்வர், ரஷ்ய நாட்டு 'கொஸாக்' அழகு நடை அணிவகுப்புடன் ராட்சஸத் திறவுக்கோல் ஒன்றை ஏந்தி வந்து தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்களிடம் அளிக்க அவர்கள் அதைத் தொட்டு, குதிரை வீரர்களிடத்தில் தர- கலைநிகழ்ச்சிகள் தொடங்கலாம் என்ற கட்டளையை இதன் மூலம் பெற்று அவ்வீரர்கள் திறவுகோலால் அலங்கரிக்கப்பட்ட கோவில் வாயில் வடிவைத் திறந்தவுடன் மனம் கொள்ளை கொள்ளும் நிகழ்ச்சிகள் ஒவ்வொன்றும் அரங்கேறத் தொடங்கின.

முதல் நிகழ்ச்சி, ஒருபுறம் பார்த்தால் உடற்பயிற்சி மறுபுறம் பார்த்தால் கலைநிகழ்ச்சி; ஆம். சின்னஞ்சிறு மனிதப் புறாக்கள் கலைந்தும் இணைந்தும் நமக்குக் காட்டிய கலை வடிவங்கள் பலப்பல.

பிரமிக்கத்தக்க மனிதப் பிரமிடுகள் உருவாக்கி நமது இதயத்தை ஈர்த்துவிட்டது, இக்கலை நிகழ்ச்சி. அதிலே ஒரு வடிவம் 6 ரதங்கள் அதிலே 6 மன்னர்கள், குதிரைகள், அந்த ரதங்களை இழுத்துவர, மாண்புமிகு முதல்வர் அருகே வந்து அம்மன்னர்கள் தங்கள் வாழ்த்தையும், வரவேற்பையும் அளித்த எழில்காட்சி வெறும் மனித உடல்களே இவ்வளவு அழகு வடிவங்களை அளிக்க முடியுமா என வியப்பின் விளிம்புக்கு நம்மை விரட்டியது இந்நிகழ்ச்சி.

அடுத்து, மோட்டார் சைக்கிள் சாகசங்கள், 'ஆணுக்குப் பெண் இங்கே இளைப்பிள்ளை காண்' எனச் சொல்லி 30 பெண்கள் மோட்டார் சைக்கிளில் ஆற்றிய சாகசங்கள். அடடா! அதைக் காணக் கண் கோடி வேண்டும். புரட்சித்தலைவியின் நெருப்புக் கணைகள் - Jaya's Flaming Arrows என்னும் இந்த வீரசாகசப் பிரிவு, இந்தியாவிலேயே ஒன்றிரண்டு இராணுவப் பிரிவுகளைத் தவிர வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத ஒரு தனிச் சிறப்புப் பிரிவாகும்.

மனிதனைப் பீடிக்கும் நோய்களி லெல்லாம் மிகமிகக் கொடியது — மோச மானது அச்சம் என்னும் நோய் தான்.

— அண்ணல் காந்தியடிகள்

உலகில் சாகசம் செய்கின்ற பெண்கள் இருக்கலாம். ஆனால் ஒரு குழுவாகச் சாகசம் செய்கின்ற நிழ்ச்சி உலகிலேயே இதுவே முதன்மையானது என அடித்துக் கூறலாம். இந்தச் சாகச நிகழ்ச்சியில் பங்கேற்ற பல பெண்கள் திருமணமானவர்கள். குழந்தைகளை ஈன்றெடுத்தவர்கள். சாதனைகள் படைக்க வயதோ, திருமண நிலையோ தடையில்லை என்பதையே இந்நிகழ்ச்சி எடுத்துக்காட்டுகிறது. இவர்களில் பலர் இந்த ஆண்டே பழகி உரிமம் பெற்றுச் சாகசம் நிகழ்த்தினார்கள் என்றால்- பெண்ணின் பெருமையை என்னவென்று சொல்வது!

அடுத்து, நெருப்பு வளையங்களிடையே பாய்ந்து நுழைந்து துப்பறியும் நாய்கள் நடத்திக் காட்டிய சாகசச் செயல்களும், தொடர்ந்து குதிரைப்படை வீரர்கள், குதிரையிலிருந்தபடியே பாய்ந்து வந்து கூடார முனைக் கொம்புகளை அகற்றிய அழகிய சாகசங்களும் எனக் காவல்துறைக்கு உற்றுழி உதவும் உயிரினங்களின் சாகசச் செயல்கள் இடம்பெற்றன.

பின்னர், தமிழகம் முழுவதிலும் இருந்து வருகை தந்திருந்த கரகம், காவடி குழுவினரின் ஆட்டம் கண்களைக் கொள்ளை கொண்டது. 56 பெண்கள் உட்பட 400 பேர்கள் அரங்கம் முழு மையாக இடம்பிடித்து கரகம், காவடி, பொய்க் கால் குதிரையாட்டம் என ஆடி நமது இதயங் களையும் முழுமையாக வெற்றி கொண்டனர்.

தொடர்ந்து வெளிச்சப் புள்ளிகளால் வித்தை வடிவங்களை வகுத்துக்காட்டிய தீப்பந்த அணிவகுப்புக் காட்சி அரங்கம் முழுமையும் மிக மெல்லியதான வெளிச்சம் பரவிக் கிடக்க, தங்களது இரு கரங்களாலும் தீப்பந்தங்களை ஏந்தி, அதன்மூலம் மாண்புமிகு முதலமைச் சருக்கு வரவேற்பு, நீடூழி வாழ்க என வாழ்த்தி பல்வேறு வடிவங்களால் படைத்தது எல்லோரை யும் பரவசப்படுத்தியது.

இறுதியாக, வானவெளியில் வண்ணங்களை இறைத்துக் கொட்டியது போல வாணவெடி வேடிக்கை நிகழ்ச்சிகளுடன் கலைநிகழ்ச்சிகள் நிறைவுபெற்றன.

அனைத்து நிகழ்ச்சிகளையும், ஆர்வத்துடன், மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் கண்டு ரசித்தார்கள் என்பதே இந்நிகழ்ச்சிகளின் சிறப்புக்கு மேலும் சிறப்புச் சேர்க்கும் அல்லவா!

- ஸாரதி



# ஆதி திராவிடர் மேம்பாடு: அரசு நிதி ஒதுக்கீடு

தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் மொத்தம் 13,172 ஆதி திராவிடப் பெருங்குடி மக்கள் பயன்பெறும் வகையில் இந்த ஆண்டு (1994-95) மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள், மொத்தம் 36.55 கோடி ரூபாய் நிதியினை ஒதுக்கி ஆணை பிறப்பித்துள்ளார். மேலும் இந்த நிதி ஒதுக்கீட்டினை 'தாட்கோ' TADHCO நிறுவனம் மூலமாகச் சிறப்பு மைய நிதி உதவியுடன் Special Component Plan செயல்படுத்தவும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்.

இதன் வாயிலாக, சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் 3,000 ஆதி திராவிடர்கள் 3 கோடி ரூபாய் நிதி உதவியினையும் 5,872 ஆதி திராவிடர்கள பல்வேறு விவசாயக் கருவிகளான மின் விசைப் பம்பு. பம்ப்செட், டீசல் பம்பு செட், விவசாயக் கிணறு, உழவு மாடு, டயர் வண்டி மற்றும் இரண்டு வண்டி மாடுகள் ஆகியவற்றை, 6.05 கோடி ரூபாய் அளவிலும் பெறுவார்கள். மேலும் ஆதி திராவிட இன மக்களிடையே இருக்கும் படித்த வேலையில்லாத இளைஞர்களும், தொழில்முறைக் கல்வி கற்றவர்களும் பயன்பெறும் வகையில், சிறு தொழில்கள் முதலியவற்றை நடத்த ஏதுவாக, மொத்தம் 1,500 பேருக்கு வங்கிக் கடன் உட்பட 26.5 கோடி ரூபாய் நிதி உதவியும் வழங்கப்படும். இவை மட்டுமன்றி, 2,800 ஆதி திராவிட இளைஞர்கள் மற்றும் இளம்பெண்கள் ஆகியோருக்குத் தொழிற்பயிற்சி (TRYSEM) ஒரு கோடி ரூபாய் செலவில் வழங்கவும் இத்திட்டம் வழிவகை செய்யும். இந்தத் தொழிற்பயிற்சி பெறுபவர்களுக்கு மாதம் ஒன்றுக்கு 300 ரூபாய் பயிற்சி உதவித் தொகையும், பயிற்சி முடிவில் 600 ரூபாய் மதிப்புள்ள கருவிகளும் வழங்கப்படும்.

ஆதி திராவிட இன மக்களின் விரைந்த முன்னேற்றத்திற்காக வகுக்கப்பட்டுள்ள இந்தத் திட்டங்கள் அனைத்தும் விரைவில் செயல்படுத்தப்பட வேண்டும் எனவும் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்.

## வ.உ.சிதம்பரனார்



¤ சீர்மிகு நெல்லைப் பூமி
சிறப்பினை எய்து தற்கே
பேர்மிகத் தந்தார் நாட்டில்
பெருமையை நாளும் சேர்த்தார்
வேர்என விளங்கி நின்றார்
வேளிரின் குலத்தைச் சார்ந்தார்
ஊர்எலாம் போற்று கின்ற
உயர்சிதம் பரனார் ஆவார்!

—புலவர் தமிழ்ப்பித்தன்



# ஈடு இணையற்ற உயர்ந்த தலைவர்

'மகாத்மா காந்தி' என்கிற மந்திரச் சொல், சாதாரண இந்தியனை உலக சரித்திரத்தில் சுயமரியாதையோடும், பெருமையோடும் அறிமுகப்படுத்தி வைத்த பெயர்; இந்தியாவைக் 'காந்தி தேசம்' என்று அழைக்க வேண்டுமெனத் தந்தை பெரியார் கேட்டுக்கொண்டாரென்றால், அண்ணல் காந்தியின் பெருமைகளை விளக்கிச் சொல்ல வேறு எவரும் நமக்குத் தேவையில்லை.

காந்திஜி சாமானிய மனிதனின் கண்ணோட்டத்திலும், பெரிய பிரச்சினைகளை அணுகத் தெரிந்து வைத்திருந்த சீர்திருத்தச் செம்மல். சுருக்கமாகச் சொன்னால், இந்த நாட்டில் எவரோடும் ஒப்பிடமுடியாத ஈடுஇணையற்ற உயர்ந்த தலைவர், காந்திஜி.

'பிறப்பிலேயே நானொரு ஜனநாயகவாதி' என்று தன்னை அழைத்துக்கொண்ட மகாத்மா காந்திதான், எதற்கும் பயப்படுகிற இந்தியனை வலிமையோடு நிமிர்ந்து நிற்கச் செய்தவர், வெறும் கோரிக்கை மனுக்களைச் சமர்ப்பித்துச் சுதந்திரம் பெற முடியாது என்பதால், தன்னலமற்ற வழியில், பொதுநலச் சேவைக்காகச் சத்தியாக்கிரகத்தையும், ஒத்துழையாமையையும், நமது சுதந்திரப் போராட்டத்தில் புகுத்தி வெற்றி கண்டவர்.

'சத்தியாக்கிரகம்'என்பது இரண்டு நபர்களுக்குள்ளோ, அல்லது இரண்டு பிரிவினருக்கு இடையேயோ ஏற்படும் முரண்பாடல்ல, அது உண்மைக்கும் - பொய்மைக்கும், நல்லவைகளுக்கும் - கெட்டவைகளுக்கும் இடையே நடக்கும் போராட்டம், என்ற உண்மையை உலகிற்கு உணர்த்தியவர் அண்ணல் காந்தி.

*'புரட்சித்தலைவியின் முழக்கம்' - தொகுதி-1-லிருந்து.*

# நல்ல தமிழ்ச் சொற்கள்

—கோ. முத்துப்பிள்ளை

Main Road - தலைமைச் சாலை

Margin Money - விளிம்புத் தொகை

Master Plan - முழுமைத் திட்டம்

Matriculation School - பதின்நிலைப் பள்ளி

Mechanic - எந்திரர்

Merit - தகுதிப்பாடு

Metal detector - உலோக உணர்வி

Method - வகைப்பாட்டு முறை

Mixie - கலவைக் கருவி

Mood - மனவோட்டம்

Mortality of livestock - கால்நடைகளின் இறப்புக் கணக்கு

Motel - உந்துணவகம்

Moving Space - நடவை

Mudguard - மட்காப்பு

Multiple Choice Question - பன்முகத் தெரிவு வினா

Network Programme - நிலையப் பிணைப்பு நிகழ்ச்சி

Non Committal reply - பிடி கொடுக்கா விடை

Non-recurring expenditure - தொடராச் செலவினம்

Numerology - எண் கணியம்

Nuisance - தொல்லை

Nursery School - மழலையர் பள்ளி

Office-bearers - அலுவல் பொறுப்பாளர்கள்

Officers' Colony - ஆளர் குடியிருப்பு

Omission - செய்வன செய்யாமை

Opthalmic Ward - கண்ணியல் பகுதி

Optimism - ஆர்வ மனப்பான்மை

Orphange - இலியர் இல்லம்

Outright sale - அற விலை

Paper weight - காகிதக் காப்பு

Passage - உரைப்பகுதி

Pass Book - கைச்சிட்டை

Ledger - பேரேடு

Perfect market - நிறைசீர் அங்காடி

Pessimism - சோர்வு மனப்பான்மை

Photographer - ஒளிப்படக் கலைஞர்

Photostat Centre - ஒளி நகலகம்

Pilgrim - சமயப்பணி

Pilot - வலவன்

Plot - மனை, மனைக்கட்டு

Plus point - இனிமைக் கூறு

Podium - உரைமேசை

Port of call - கலந்தொடு துறை

Postal Index Number - அஞ்சல் குறியீட்டு எண் (அ.கு.எண்)

Preamble - முகப்புரை

Preface - முகவுரை

Preference - முன்னுரிமை

Priority - முந்துரிமை

Prefix - முன்னொட்டு

Suffix - பின்னொட்டு

Prestige - பீடுணர்வு

Probation Officer - நன்னடை நல்குநர்

Profession - செய்தொழில்

Proficiency Certificate - வல்லமைச் சான்றிதழ்



# ஒப்பற்ற தலைவர்

தந்தை பெரியாரது வாழ்க்கை வரலாறு ஒரு பயன் மரம். பலரும் படித்துத் தெரிந்துகொள்ள வேண்டிய அனுபவச் சுரங்கம். இறக்கும்வரை சமூக மேம்பாட்டிற்காக உழைத்த ஒரு பெரிய தலைவர் நம்மிடம் உண்டென்றால் அது தந்தை பெரியார் தான்.

பெண்கள் முன்னேற்றத்தைப் பற்றிப் பேசி அதற்காக உழைத்த உலகத் தலைவர்களின் வரிசையில் தந்தை பெரியார் அவர்களுக்கு முதலிடம் என்றைக்குமே உண்டு என்பது நாம் அனைவரும் அறிந்த உண்மையாகும்.

நமக்கெல்லாம் மகிழ்ச்சி தருகிற மற்றொரு செய்தி, பெரியார் என்கிற சிறப்புப் பட்டம் 1938-இல் சென்னையில் நடத்தப்பட்ட தமிழ்நாட்டுப் பெண்கள் மாநாட்டில்தான் அவருக்கு வழங்கப்பட்டது.


ஒரு பெரியாரைக் கண்டுபிடிப்பதில் ஆண்களைவிடப் பெண்களுக்கு எப்படிப்பட்ட தொலைநோக்கு எண்ணம் இருந்திருக்கிறது என்பதை எண்ணிப் பார்க்கும்போது இன்றும் மகிழ்ச்சியாகவும், பெருமையாகவும் இருக்கிறது! அதுவும் தமிழ்நாட்டுப் பெண்களுக்குத் தலைவர்களைத் தேர்ந்தெடுப்பதில் இருக்கிற சாதுரியம், வேறு எந்த மாநிலப் பெண்களுக்கும் இல்லை என்றே கூற வேண்டும்.

கருத்து வேற்றுமைகளுக்கு மதிப்பு அளிப்பது சாதாரண மனிதர்களுக்கு இயல்பாகவே வராது; சரித்திரப் புருஷர்களுக்கு மட்டும் அது சாத்தியம். அந்த வகையில் தந்தை பெரியார் அவர்களை அணுகி ஆராய்ந்தோமானால் நமக்குக் கிடைக்கிற அனுபவங்கள் ஏராளம்.

தேசிய கீதம் இசைக்கப்படுகிறபோது தள்ளாத வயதிலும் அவர் எழுந்து நிற்கிற பாங்கும், குறைந்த வயதுடையவர்களையும் 'வாங்கய்யா' என்று அவர் கூப்பிடுகிற நேசமும், தந்தை பெரியார் அவர்களுக்கு மட்டுமே கைவரப்பெற்ற கலையாகும்.

***'புரட்சித்தலைவியின் முழக்கம்' - தொகுதி-1-லிருந்து.***





# "சமூக நீதி காக்கும் போராட்டத்தில் பெற்ற வெற்றியைத் தமிழக மக்களுக்கே காணிக்கையாக்கி மகிழ்கிறேன்!"

## 10.9.1994 அன்று வேலூரில் நடந்த வட ஆர்க்காடு அம்பேத்கர் மாவட்ட அரசு விழாவில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆற்றிய உரை

தமிழகத்து வரலாற்றில் தனக்கென ஒரு தனி இடத்தைத் தக்க வைத்துக் கொண்டிருக்கின்ற, வரலாற்றுத் தொன்மையும், சிறப்பும் மிக்க, இந்த வட ஆர்க்காடு-அம்பேத்கர் மாவட்டத்திற்கு வருகை தந்து, ஒரு புதிய எழுச்சியோடும், புத்துணர்ச்சியோடும், காட்சி அளிக்கின்ற, இலட்சக்கணக்கான அன்பு நெஞ்சங்களைச் சந்திப்பதில், நான் பேருவகையும், பெரு மகிழ்ச்சியும் அடைகின்றேன்.

எனது அன்பிற்குரிய தமிழகத்து மக்களின் வாழ்க்கை, மேம்பாடு அடையவும் தமிழகம் மேலும் பல சிறப்புக்களை எய்தவும் நான் ஆற்றி வருகின்ற மக்கள் பணிக்கு, நீங்கள் எத்தகையதொரு ஆதரவையும், ஒத்துழைப்பையும், கொடுத்து வருகின்றீர்கள் என்பதை, நான் செல்லுகின்ற எல்லா மாவட்டங்களிலும், கண்கூடாகக் கண்டு வருகிறேன். நான் செல்லும் இடமெல்லாம், தமிழகத்து மக்கள், என் மீது காட்டி வருகின்ற அன்பையும், பாசத்தையும் கண்டு, நான் உண்மையிலேயே நெகிழ்ந்து போகின்றேன். இந்த மாபெரும் மக்கள் சக்தி, எனக்கு உறுதுணையாக, பக்க பலமாக இருப்பதால் தான், எத்தனை இடர்ப்பாடுகள், இன்னல்கள் வந்தாலும், அவற்றையெல்லாம் எதிர்கொண்டு, வெற்றி பெறுகின்ற ஒரு புதிய ஆற்றலை, நான் நாளும் பெற்று வருகின்றேன்.

தமிழகத்து மக்கள் எந்த எதிர்




பார்ப்புகளுடன், 1991 ஆம் ஆண்டு, தமிழகத்தின் ஆட்சிப் பொறுப்பை என்னிடம் ஒப்படைத்தார்களோ, அந்த எதிர்பார்ப்புகளை, அவர்களின் கனவுகளை, நனவாக்கிக் கொண்டு வருவதையே, எனது முழு மூச்சாகக் கொண்டு, செயல்பட்டு வருகிறேன்.

தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். ஆகியோர், எத்தகைய ஜாதி, சமய பேதமற்ற, சமதர்ம சமத்துவச் சமுதாயத்தைப் படைக்க வேண்டும் என்று, தங்கள் வாழ் நாள் முழுவதும் பாடுபட்டார்களோ, அந்த இலட்சியங்களை, உங்கள் அன்புச் சகோதரியின் அரசு, உங்கள் அரசு செயல்படுத்தி வருகிறது. ஜனநாயகம் என்பது, ஏதோ ஒரு அரசியலமைப்புத் திட்டம், என்று மட்டும் கருதாமல் நாட்டு மக்கள் ஒவ்வொருவரும், ஒருவர் மீது மற்றொருவர், அன்பு செலுத்தி வாழ்கின்ற, ஒரு சமுதாய வாழ்வு, என்ற எண்ணத்தின் அடிப்படையில்தான், ஆட்சி செய்து வருகின்றோம். அந்த எண்ணத்தின் வெளிப்பாடாகத் தான், தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்கள், இதுவரை பெற்று வந்த, இட ஒதுக்கீட்டு உரிமைக்குக் குந்தகம் ஏற்பட்டபோது, மக்களின் பேராதரவுடன், இந்தப் பிரச்சினையை எதிர்கொண்டேன்.

சமூக நீதி காக்கின்ற இந்தப் போராட்டத்தில், எனக்கு இரண்டு சக்திகள் துணையாக இருந்தன. ஒன்று, திராவிடத் தலைவர்களின் இலட்சியங்கள், மற்றும் அவர்களின் ஆசிகள். இரண்டு, என் உயிரினும் மேலான, எனது அன்பிற்குரிய தமிழக மக்களின், பேராதரவும் பேரன்பும் தான். இந்த இரண்டு சக்திகளும், இணைந்திருந்ததால், தான், இந்த மாபெரும் இமாலய வெற்றியை, நாம் பெற முடிந்தது. எனவே தான், அந்த வெற்றியைத் தமிழக மக்களுக்கே காணிக்கையாக்கி, மகிழ்ச்சி அடைகின்றேன்.

வட ஆர்க்காடு அம்பேத்கர் மாவட்டத்தின் வரலாற்றைச் சற்றுப் பின்னோக்கிப் பார்க்கும் போது, சங்க காலத்திலே, ஜவ்வாது மலைப் பகுதிகளில், மன்னன் நன்னன் என்பவர், நல்லாட்சி புரிந்து வந்ததை, அறிய முடிகிறது. 13 ஆம் நூற்றாண்டு முதல், ஆங்கிலேயர்களின் ஏகாதிபத்தியம், இந்தியத் துணைக் கண்டம் முழுவதும், வியாபித்து இருந்த காலம் வரை, வேலூர் பகுதி, ஒரு நிரந்தர குருஷேத்திரமாக, போர்க்களமாக அமைந்து இருந்ததை, வரலாறு இன்றும் எடுத்துக்காட்டிக் கொண்டிருக்கிறது. களங்கள் பல கண்ட இடம் தான், இன்று நாம் விழா நடத்திக் கொண்டிருக்கின்ற, இந்த வேலூர்க் கோட்டை.



20-க்கும் மேற்பட்ட கோட்டைகள் இந்த மாவட்டத்தில் இருந்தாலும், அந்தக் கோட்டைகளுக்கு எல்லாம் சிறந்தவையாக, வற்றாத அகழியுடன், தமிழகத்திலேயே தலை சிறந்த தலைக் கோட்டையாக, இன்று வேலூர்க் கோட்டை விளங்கிக் கொண்டிருக்கிறது.

இந்திய விடுதலைப் போரில், 1857 இல் நடைபெற்ற சிப்பாய்க் கலகம், முதல் சுதந்திரப் போர் என்று, சரித்திர ஆசிரியர்களால் குறிப்பிடப்பட்டாலும் 1806 ஆம் ஆண்டிலேயே, இதே கோட்டை வளாகத்தில் நடைபெற்ற, சிப்பாய்க் கலகம் தான், ஆங்கிலேயர்களின் ஆதிக்கத்திற்கும், ஏகாதிபத்தியத்திற்கும் எதிராக எழுப்பப்பட்ட, முதல் உரிமைக் குரல்; இந்தியரின் முதல் போர்க் கொடி.

இந்திய இராணுவ வீரர்கள், தங்கள் வழக்கப்படி, நெற்றியில் நீறும் குங்குமமும் இட்டு, காதணி அணிவதை, ஆங்கிலேயர்கள் தடுத்து ஆணையிட்டார்கள். முதல் முறையாகக் கொதித்து எழுந்து- இந்தியர்கள் பொறுமைசாலிகள் தான், ஆனால் பொம்மைகள் அல்ல; கொதித்து எழுந்தால், யாராலும் அடக்க முடியாத எரிமலை என்பதை, 1806 இல் நடைபெற்ற, சிப்பாய்க் கலகத்தின் மூலம், ஆங்கில ஏகாதிபத்தியத்திற்கு எடுத்துக்காட்டியவர்கள், இந்தப் பகுதி வாழ் மக்கள்.

எத்தனை எத்தனைப் போராட்டங்கள், ஆதிக்கப் போர்கள் போர்க் களங்கள் ஆகியவற்றைக் கண்ட பூமி இது, என்பதை எண்ணிப் பார்க்கும்போது, நமக்குள் ஒரு வீர உணர்வு, தன்னிச்சையாக உண்டாகின்றது. அந்த வீரம், இந்த மாவட்டத்தில் இன்றும் குறையவில்லை என்பதற்கு, இந்த மாவட்டத்தில் இருந்து, இராணுவத்தில் சேர்ந்தவர்களின் எண்ணிக்கை, மற்ற மாவட்டங்களை விட, அதிகமாக இருப்பதே, சாட்சியாகும். பணி ஓய்வு பெற்ற இராணுவ வீரர்கள், அதிகம் வாழ்கின்ற ஒரே மாவட்டம், தமிழ்நாட்டில் இந்த மாவட்டம் தான் என்பதையும், பெருமிதத்துடன் குறிப்பிட விரும்புகிறேன்.

பாரதத்தின் எல்லைகளைக் காக்கின்ற புனிதப் பணியில், தங்கள் இன்னுயிரை ஈந்த, தியாக சீலர்களின் தியாகங்களை எண்ணி, நமது மனம் அவர்களுக்குத் தலை வணங்குகிறது.

ஜாதி, சமயம், மொழி இவற்றையெல்லாம் கடந்து, ஆங்கிலேயரின் ஏகாதிபத்தியத்திற்கு எதிராக மக்களை ஒன்று திரட்டிய, திப்பு சுல்தானும், ஹைதர் அலியும் வீரச் செயல்கள் புரிந்த பகுதி இது. பல நூற்றாண்டுகளாக இந்துக்களும், முஸ்லீம்களும் ஒற்றுமை உணர்வினால் வாழ்ந்து, இந்தியாவிலுள்ள மற்ற மாநிலங்களுக்கு முன்னுதாரணமாகத் திகழ்ந்து வரும் பெருமையையும் படைத்தது இந்தப் பூமி. புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆரின் இலட்சியங்களைச் செயல்படுத்தி வரும் உங்கள் அன்புச் சகோதரியின் அரசு, உங்கள் அரசு; முகம்மதிய பெருமக்களின் வாழ்க்கை மேம்பாட்டிற்குப் பல்வேறு நலத் திட்டங்களைத் தீட்டி, முனைப்புடன் செயல்படுத்தி வருகிறது. அனைத்துத் தரப்பு மக்களும், சகோதர மனப்பான்மையுடன் நல்வாழ்வு வாழ வேண்டும் என்பதே, எங்கள் அரசின் குறிக்கோள் ஆகும்.

தமிழகத்தின் ஆன்மீக வளர்ச்சியிலும், தனக்குரிய பங்கை, இந்த மாவட்டம் ஆற்றியிருக்கிறது என்பதை நிரூபித்துக் காட்டியவர்கள், அப்பய்ய தீட்சிதரும், அருணகிரி நாதரும், நாம் வாழ்கின்ற காலத்திலே நம்மோடு வாழ்ந்து, இறைத் தொண்டாற்றி மறைந்த திருமுருக கிருபானந்த வாரியார் பிறந்த காங்கேயநல்லூர் இம்மாவட்டத்தில் தான் உள்ளது. தமிழ்த்தாய்க்கு, தனது இலக்கியங்களால் ஆராதனை செய்த, மு. வரதராசனார் அவர்களும், இந்த மாவட்டத்தைச் சேர்ந்தவர் என்பதைச் சுட்டிக் காட்டுவதில், மகிழ்ச்சி அடைகின்றேன்.

பல்வேறு புராதனச் சிறப்புகள் பெற்ற திருக்கோயில்களையும் ஆசியாவிலேயே மிகப் பெரிய தொலைநோக்கி Telescope ஐயும் அன்னியச் செலாவணியைப் பெருமளவிற்கு ஈட்டித் தருகின்ற, தோல் தொழிற்சாலைகளையும் கொண்ட மாவட்டம் இது. 'தொண்டை மண்டலம் சான்றோருடைத்து',

**(தொடர்ச்சி. 33 ஆம் பக்கம் பார்க்க)**





# மாமனிதர் பேரறிஞர் அண்ணா

சிலர் - பிறந்த தாயகத்துக்காக மட்டும் போராடுவார்கள்.
சிலர் - பேசும் தாய்மொழிக்காக மட்டும் போராடுவார்கள்.

ஆனால், தாயகத்துக்காகவும், தாய்மொழிக்காகவும், காலமெல்லாம் போராடி, வெற்றிமேல் வெற்றி கண்ட தலைவர்களில், முன்வரிசையில் முன்னணித் தளபதியாய், தளநாயகராய்த் திகழ்பவர், நம் பேரறிஞர் அண்ணா அவர்கள் ஆவார்.

'வீழ்ச்சியுற்ற தமிழகத்தில் எழுச்சி வேண்டும்' என்று பாவேந்தர் பாரதிதாசன் பாடினார். அந்த எழுச்சியைத் தமிழகத்துக்கு மட்டுமல்ல; தமிழுக்கும் உருவாக்கித் தந்தவர் பேரறிஞர் அண்ணா.

'போர் வீரர்கள் செல்வதற்கு முன் பாதை போடுவோர், கரடுமுரடான பாதைகளைச் செப்பனிட்டு, முன்னே செல்வது போல, நம்முடைய எதிர்காலச் சந்ததிகளுக்கு நாம், முள்ளும் கல்லும் புதரும் போல, நம் சமுதாயத்தில் அடைந்துள்ள ஆபாசங்களையும், ஊழல்களையும் அறவே ஒழித்து, நல்லதொரு சமுதாயத்தை உருவாக்கிக் கொடுத்துவிட்டுச் செல்வது, நம்முடைய தலையாய கடமைகளில் ஒன்றாகும்', - என ஒரு முறை அண்ணா அவர்கள் சொன்னார்கள்.

சமுதாயச் சாலையைச் செப்பனிடுவது ஒன்று; அந்தச் சாலையில் நடைபோடும் போர் வீரனாக விளங்குவது, வேறொன்று. ஆனால், இந்த இரண்டு சாதனைகளின் அருமையான தொகுப்புதான், பேரறிஞர் அண்ணா.

*'புரட்சித்தலைவியின் முழக்கம்' - தொகுதி-2-லிருந்து.*

சிறு சேமிப்பு - உங்கள் குடும்பத்தின் முதல் செல்வாக இருக்கட்டும்

# செழிப்பான வாழ்விற்கு இன்றே முதலீடு செய்வீர்

# கிசான் விகாஸ் பத்திரம்

## உங்கள் முதலீடு 5½ ஆண்டுகளில் இருமடங்கு வளர்கிறது.

### சிறப்பு அம்சங்கள்

- ஐந்தரை ஆண்டுகளில் முதலீடு இரட்டிப்பாகிறது.
- 18.18% சாதாரண வட்டி.
- பத்திரங்கள் ரூ.100/-, ரூ.500/-, ரூ.1,000/-, ரூ.5,000/-, ரூ.10,000/- மதிப்புகளில் கிடைக்கின்றன.
- அவசரத் தேவைக்கு 2½ ஆண்டுகளில் வட்டியுடன் பணம் திரும்பப்பெற வசதி.

ரூ.1000/- முதலீட்டிற்கு கிடைக்கும் தொகை

| ஆண்டுகள் | தொகை |
|---|---|
| 2½ ஆண்டுகளில் | ரூ.1,310/- |
| 3 ஆண்டுகளில் | ரூ.1,420/- |
| 3½ ஆண்டுகளில் | ரூ.1,500/- |
| 4 ஆண்டுகளில் | ரூ.1,620/- |
| 4½ ஆண்டுகளில் | ரூ.1,730/- |
| 5 ஆண்டுகளில் | ரூ.1,860/- |
| 5½ ஆண்டுகளில் | ரூ.2000/- |

1.4.1994 முதல் தமிழ்நாட்டில் செய்யப்படும் முதலீட்டிற்கு

## 2%

சிறப்பு ஊக்கத்தொகை.





தமிழ்நாட்டில் செய்யப்படும் ஒவ்வொரு ரூ.500/- முதலீட்டிற்கு ஒரு இலவச பரிசுக் கூப்பன் பெற்று, கவர்ச்சிகரமான மாருதி ஆம்னிவேன் அல்லது டிராக்டர் (இயந்திரக் கலப்பையுடன்) உட்பட 619 பரிசுகளை வெல்ல வாய்ப்பு.

மேலும் விவரங்களுக்கு

**ஆணையர்,**

சென்னை மாநகராட்சி (சி.சே.பரிவு), சென்னை-3,
தொலைபேசி: 584440.

மண்டல இயக்குநர், தேசிய சேமிப்பு நிறுவனம்,
92, அண்ணா சாலை, சென்னை-2.,
தொலைபேசி: 849962

மாவட்ட ஆட்சியாளர்கள், வட்டாட்சியர்கள், வட்டார வளர்ச்சி அலுவலர்கள், அஞ்சலக அதிகாரிகள் மற்றும் சிறுசேமிப்பு முகவர்கள்.

***இயக்குநர், சிறு சேமிப்புத் துறை***

*சயர் மேன்ஷன், 621, அண்ணா சாலை,*
*சென்னை - 600 006.*
*தொலைபேசி: 8251784/8251685.*

DIPR/519/DIS/94

*சிறு குடும்பம் செல்வக் குடும்பம்*

இன்றைய சேமிப்பு நாளைய பாதுகாப்பு

# தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம்

# அஞ்சல்வழிப் பாடம்

கோவை தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக தகவல் தொடர்பு நிலையத்திலிருந்து ஆகஸ்டு '94 முதல் அக்டோபர் '94 வரை கீழ்க் கண்ட அஞ்சல்வழிப் பாடங்கள் நடத்தப்பட உள்ளன.

**பழக்கன்றுகள் உற்பத்தி முறைகள்:**

இப்பாடத்தில் பழ மரங்கள் பயிர் செய்வதற்குண்டான தரமான செடிகளை விதைமூலமாகவும் ஒட்டுக் கட்டுதல், பதியம் போடுதல், மொட்டுக்கட்டுதல் மற்றும் குச்சிகள் மூலமாகச் செடிகள் தயாரிப்பதும் எவ்வாறு என விவசாயிகள் மட்டும் அல்லாமல் படித்த இளைஞர்களும் விரிவாகத் தெரிந்து கொள்ள வாய்ப்பு உள்ளது. மேலும் தங்களுக்குத் தேவையான பழமரக்கன்றுகளைத் தாங்களே தயார் செய்து கொள்வதோடு மட்டுமல்லாமல், கன்றுகள் உற்பத்தி செய்த சுயவேலைவாய்ப்பை அதிகரித்துக்கொள்ள வாய்ப்புள்ளது. ஆகவே, விவசாயிகள் இப் பாடத்தில் சேர்ந்த நல்ல பயன் பெறலாம்.

**பண்ணைக்கழிவு உரம் தயாரித்தல் ஆகஸ்டு அக்டோபர் '94:**

இப்பாடத்தின் மூலம், எந்தப் பயனும் இல்லாமல் வீணாக்கப் படும் பண்ணைக்கழிவுகளை எவ்வாறு ஒரு சிறந்த பயனுள்ள இயற்கை உரமாக மாற்றலாம் என்பதை அனைத்து விவசாயிகளும், படித்து வேலையற்ற இளைஞர்களும் தெரிந்து கொள்ளலாம். தென்னை நார் பிரித்து எடுக்கும் ஆலைகளில் இருந்து கிடைக்கும் தென்னை நார்க் கழிவை வியாபார ரீதியில் ஒரு சிறந்த இயற்கை உரமாகத் தயாரிக்கலாம். வீணாக, தீ வைத்து எரிக்கப்படும் கரும்புத் தோகையையும் ஒரு பயனுள்ள இயற்கை உரமாகத் தயாரிக்கலாம். மண்புழுவைக் கொண்டு குப்பைக்கூளங்களையும், பண்ணைக்கழிவுகளையும் ஒரு சிறந்த இயற்கை உரமாகத் தயாரிக்கலாம். பச்சைத் தாவர இலைகளையும் ஒரு சிறந்த உரமாகத் தயாரிக்கலாம். தொழு உரத்தை ஊட்டமேற்றிய தொழு உரமாக மாற்றலாம்.

எனவே விவசாயிகளும், வேலையற்ற இளைஞர்களும் இப்பாடத்தில் சேர்ந்து பயன் பெறலாம். இவ்வாறு தயாரிக்கப்பட்ட இயற்கை உரங்களை நிலத்தில் இட்டு மண்ணின் வளத்தையும் அதிகரிக்கலாம்.

# சோயா மொச்சை கோ. 1 இரகம்

**தரமான விதைகளைப் பெற, சில வழி முறைகள்**

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக விதை நுட்பவியல் துறையில் சோயா மொச்சைப் பயிரில் விதை உற்பத்தித் தொழில் நுட்பத்திற்கான ஆராய்ச்சிப் பணிகள் மேற் கொள்ளப்பட்டு, கீழ்க்கண்ட முடிவுகள் பரிந்துரைக்கப்படுகின்றன.

* கோவை மாவட்டத்தில் பெங்களூர் மற்றும் உடுமலைப்பேட்டை ஆகிய இடங்கள் தரமான சோயா விதைகளை உற்பத்தி செய்ய ஏற்றவை.

* ஒரு காயில் உள்ள விதைகளை ஆராய்ந்ததில் இரண்டு விதைகளைக் கொண்ட காயில் கணுவிற்கு அருகில் உள்ள விதையும், மூன்று விதைகளைக் கொண்ட காயில் நடுவில் உள்ள விதையும் தரமானதாக உள்ளன.

* கோயம்புத்தூர் சோயா விதைகள் அதிக நாட்கள் சேமித்து வைக்க ஏற்றது.

* குறைந்த அளவு நீர்ப்பாசனத்துடன் (0.04 டபிள்யுசி.பி.யி. விகிதம், தொழு உரத்தை உபயோகிக்கும் போதும் அதிக அளவு நீர்ப் பாசனத்துடன் 0.6 ஐ டபிள்யுசி.பி.யு விகிதம் தேங்காய் நார் அல்லது மக்கிய தேங்காய் நார் போன்றவைகளை உயோகிக்கும் போதும் தரமான விதைகளை உருவாக்குகின்றன.

* ஈரமேற்றிய மணல் கொண்டு நீரேற்றம் செய்யும் முறையே சிறந்தது.

## சோயா மொச்சையின் முதல் எதிரி சுருள் பூச்சி

மிகச் சிறந்த எண்ணெய்வித்தாகவும் புரதச்சத்து மிகுந்த பயிராகவும் கருதப்படும் சோயா மொச்சை தமிழகத்தின் பல மாவட்டங்களிலும் பெருமளவில் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது.

சோயா மொச்சையைத் தாக்கும் பூச்சிகளுள் இலைகளைத் தாக்கும் சுருள் பூச்சி முக்கிய மானது. இது நிலக்கடலையிலும் பெருத்த சேதத்தை விளைவிக்கின்றது. இதன் தாய் அந்துப்பூச்சி சாம்பல் நிறத்துடன் முன்னிறக் கையில் ஓர் வெண்ணிறப் புள்ளியுடன் இருக்கும். தாய் அந்துப்பூச்சி இளந்தளிர்களின் மீது அழகிய வேலைப் பாடுடன் கூடிய பளபளப்பான முட்டைகளைத் தனித் தனியே இடுகின்றது. முட்டையிலிருந்து வெளிவரும் சாம்பல் நிறப்புழுக்கள் இரண்டு மூன்று இலைகளை ஒன்றாகப் பிணைத்தோ, அல்லது ஒரே இலையை நீளவாக்கில் மடித்தோ சேதம் விளைவிக்கின்றன. புழுக்கள் இலைத் திசுக் களிடையே ஊடுருவிச் சென்று உள்ளிருந்து கொண்டு பச்சையத்தைச் சுரண்டித்தின்னும். சுருள் பூச்சியின் தாக்குதலால் இலைகள் காய்ந்துவிடும். அதிகமாகத் தாக்கப்பட்ட பயிர் தீயினால் எரிக்கப்பட்டது போல் காணப்படும். முழுவளர்ச்சியடைந்த புழுக்கள் இலைச் சுருள்களுக்குள்ளேயே கூட்டுப்புழுவாக மாறு கின்றன.

### கட்டுப்படுத்தும் முறைகள்:

1. இறவைப் பயிரில் தண்ணீர் தட்டுப்பாடு இல்லாமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.

2. சுருள் பூச்சி தாக்கப்பட்டுள்ள பயிரில் தரை மட்டத்தில் விளக்குப்பொறிகளை வைப்பதன் மூலம் தாய் அந்துப்பூச்சிகள் கவரப்பட்டு அழிக்கப்படும். அந்துப்பூச்சிகள் எல்லாவித விளக்குப்பொறிகளினாலும் கவரப்பட்டாலும் தரைமட்டத்தில் வைக்கப்பட்டுள்ள பொறிகளில் அதிக அளவில் கவரப்படுவது கண்டறியப் பட்டுள்ளது. எனவே இம்முறையினை விவ சாயிகள் பின்பற்றலாம்.

3. தாக்கப்பட்டுள்ள பயிரில் உடனடியாக டைக்குளோரோ மருந்தினை ஏக்கருக்கு 250 மில்லி அளவில் பயிர் நன்கு நனையும்படி தெளிக்க வேண்டும். இம்மருந்து தொடு, குடல் மற்றும் வாயு நஞ்சாகச் செயல்படுவதால் உடனடியாகச் சுருள்பூச்சிகள் கொல்லப்படும். பின்னர் ஒரு வாரம் கழித்து பூச்சிப்பெருக்கத்தை மேலும் குறைக்க கீழ்க்காணும் மருந்துகளில் ஏதேனும் ஒன்றைத் தெளித்துக் கட்டுப் படுத்தலாம்.

| | | | |
|---|---|---|---|
| 1. மோனோகுரோட்டோபாஸ் | 36 சதம் | 300 மில்லி/ ஏக்கருக்கு | |
| 2. பாஸ்பாமிடான் | 85 | " 150 | " |
| 3. பாசலோன் | 35 | " 300 | " |
| 4. எண்டோசல்பான் | 35 | " 300 | " |

விவசாயிகள் மேற்கூறிய முறைகளில் பயிர் பாதுகாப்புச் செய்து சுருள் பூச்சிகளினால் ஏற்படும் சேதத்தைக் குறைக்கலாம்


**—வேளாண் தகவல் மையம்**
**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
**கோவை-3.**

# பழவேற்காடு படகுக் குழாமை முக்கிய சுற்றுலாத் தலமாக்க அரசு முடிவு

**மா**ண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் அறிவித்த சுற்றுலா அபிவிருத்தி கொள்கைக்கு ஏற்ப, பழவேற்காடு படகுக் குழாமை முக்கியச் சுற்றுலாத் தலமாக அபிவிருத்தி செய்வது குறித்து மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் திரு எஸ். நாகூர் மீரான் அவர்கள் செய்தி மற்றும் சுற்றுலாத் துறைச் செயலர், சுற்றுலாத் துறை இயக்குநர், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக நிர்வாக இயக்குநர் மற்றும் வனத்துறையின் உயர்அதிகாரிகளுடன் 19.7.1994 அன்று அவ்விடத்தைப் பார்வையிட்டார்கள்.

பார்வையிட்ட பின்னர் அந்த மையத்தை முக்கியச் சுற்றுலா மையமாக மாற்றுவதற்கான அடிப்படை வசதிகளை உடனடியாகச் செய்ய வேண்டுமென்றும், இதை ஒரு சுற்றுலா மையமாக ஆக்குவதற்காகப் படகுக் குழாம், சிற்றூண்டி விடுதி ஆகிய அடிப்படை வசதிகளைக் கொண்ட பெருந்திட்டம் ஒன்று தயாரிக்க வேண்டுமென்றும், அந்த மையத்தில் பாதுகாப்பாகப் படகுச் சவாரி செய்வதற்குத் தேவையான வசதிகளைச் செய்ய வேண்டு மென்றும் வனத்துறையும், சுற்றுலாத் துறையும் சேர்ந்து உடனடியாக ரூ.10 இலட்சம் மதிப்பீட்டில் படகுச் சவாரி, படகுக் குழாம், தங்குமிடம் போன்றவற்றை, ஏற்படுத்த வேண்டுமென்றும் உத்தரவிட்டார்.

# காந்தியடிகள் வாழ்விலே...



## ஏழைகள் வசிக்கும் இடம்தான் எனக்கும் தேவை!

1931-ஆம் ஆண்டு செப்டம்பரில் காந்தி அடிகள் இலண்டனுக்குச் சென்றிருந்தார். அங்கு காந்திஜி தங்குவதற்காகப் பல பிரமுகர்கள் சகல வசதிகளுடன் கூடிய தங்கள் தங்கள் பங்களாக்களை அவருக்குத் தங்கும் இருப்பிடங்களாகத் தர முன் வந்தனர். ஆனால் அவர் எங்கு தங்கப் போகிறாரோ? என்பதே பலருக்கு வியப்பான கேள்விக்குறியாகவே இருந்தது. ஆனால் கிழக்கு இலண்டன் பகுதியில் ஏழைகள் வசிக்கும் இடத்தில் மிஸ். முரியல் லெஸ்ட்டர் என்பவர் சுமார் 30 ஆண்டுகளாக வசித்து வருவதோடு, சமூக ஊழியராகப் பொதுப் பணி வேலையும் செய்து வருபவராவார். எளிமையான வாழ்க்கையில் இலண்டனிலுள்ள "கிங்ஸ்லி ஹால்" சமூக நல ஸ்தாபனத்தின் தலைவியாக இருந்தவர்.

1925-இல் காந்தியடிகளை நேரில் சந்தித்ததிலிருந்து மிஸ். லெஸ்ட்டர் அவருடைய சிறந்த சிநேகிதியாக இருக்கிறார். இலண்டனுக்கு வருகை தரும் காந்தியடிகளை மிஸ். லெஸ்ட்டர் தமது இருக்கையில் தங்கி விருந்தாளியாக இருக்கும்படி கேட்டு அவர் பெயருக்கு எழுதிய ஓர் கடிதத்திற்கு, காந்தியடிகளே தன் கைப்பட எழுதிய பதிலில்... "மற்ற இடங்களில் தங்குவதைவிட தங்கள் விடுதியில் தங்குவதையே நான் அதிகமாக விரும்புகிறேன். ஏனெனில் என் வாழ்நாள் முழுவதும் எந்த ஒரு வகுப்பு ஜனங்களுக்காக நான் உழைத்திருக்கிறேனோ அவர்கள் போன்றவர்களிடையே தங்க எனக்கு அதன் மூலம் சந்தர்ப்பமேற்படக்கூடும். அவசியம் உங்கள் விடுதியிலும் தவறாமல் தங்குவேன்!" எனக் குறிப்பிட்டிருந்தார்.

## காந்தியடிகளுக்கு மரியாதை

ரிச்சர்டு ஆடன்பரோவின் மகத்தான தயாரிப்பான 'காந்தி' திரைப்படத்தில் காந்தியடிகளாக நடித்தவர் 'பென் கிங்ஸ்லி'. இவர் பார்வைக்குக் காந்தியடிகளைப் போல இருக்கவே, அவரைப் போல் தத்ரூபமாகவும் நடித்தார். சுமார் 43 வயதான 'பென்கிங்ஸ்லி' பிறப்பதற்கு முன்னரே இங்கிலாந்திலே

மகாத்மா காந்தியைப் போலவே, மற்றொரு நபரும் பிறந்திருந்தார். அவர் பெயர் 'மெக்ளீன்'. 1893-ஆம் ஆண்டு பிறந்த இவரின் முழுப் பெயர் "மிஸ்டர் ஜிம் மெக்ளின்" எனப்படும். இவர் எடின்பரோவுக்கு அருகில் 'க்வின்பெரி'யில் மிக்க எளிமையாகவே வாழ்ந்து வந்தார். மெக்ளினும் பார்வைக்குக்

காந்தியடிகளைப் போலவே எடுப்பான மூக்கு, கண் அசைவு, வாய், உதடு, சிரிப்பு, மீசை, நடை, கையசைப்பு அத்தனையுமே அப்படியே இருந்தது. இதனால் இவரது நண்பர்கள் இவரைச் சந்திக்கும்போதெல் லாம் "காந்தி! அதோ காந்தி வருகிறார்" என்றழைத்து அவரை "மெக்ளீன் காந்தி" என்றனர்; அப்பெயரே அவருக்கு நிலைத்துவிட்டது.

*1931*-ஆம் ஆண்டு இறுதியில் காந்தியடிகள் வட்டமேசை மாநாட்டிற்காக இலண்டனுக் குச் சென்றிருந்தார். அப்போது பக்கிங்காம் அரண்மனையில் ஐந்தாம் ஜார்ஜ் மன்ன ரால் ஓர் விருந்து காந்திஜிக்கு அளிக்க ஏற் பாடாகியிருந்தது. காந்தியடிகள் தனது செயலாளர் மகாதேவதேசாய், சரோஜினி நாயுடு ஆகியோருடன் மன்னரின் அரண் மனைக்குச் சென்றார். மிகுந்த மரியாதை களோடு அவரை அங்கு வரவேற்றதோடு, காந்தியடிகள் மட்டும் தனியாகப் பல கோணங்களில் புகைப்படமும் எடுத்தனர். அதில் மன்னருக்கு மிகவும் பிடித்தமான காந்தியடிகள் புகைப்படமொன்றை ஆள் உயரத்திற்குப் பெரியதாக்கி அரண்மனைக் குள் ஓர் பிரதான இடத்தில் பார்வைக்காக வைத்திருந்தனர்.

அன்று பார்வையாளரோடு பார்வையாள ராக மன்னரின் அரண்மனைக்கு வந்திருந்த 'மெக்ளின்' அங்குள்ள காந்தியடிகளின் புகைப்படத்தைக் கண்டதுமே, 'சட்டென்று' அதன் பக்கத்திலேயே சாதாரண தோற்றத் தில் வெள்ளைக் கதராடையை காந்திஜி அணியும் பாணியிலேயே அணிந்து வெறும் பாதங்களோடு வந்து நின்றார்.

அங்கு வந்திருந்தவர்கள் அனைவருமே இக்காட்சியினைக் கண்டதுமே இவர்களில் காந்தி யார்? என வியப்படைந்தபோது 'மெக்ளின்' கண் அசைவிலிருந்து அவரைக் கண்டுபிடித்து அவரிடமே, "மிஸ்டர் மெக்ளீன்! இப்போது நீங்கள் காந்தியைப் போலவே இருக்கிறீர்கள். சந்தேகமேயில்லை. ஆனால் காந்தியடிகளைப் போலப் பாதங் களில் காலணிகளை அணியாததுதான் ஒரே ஒரு குறை! இதனை எப்படி மறந்தீர்கள்?" என்று கேட்டதற்கு மெக்ளீன் "பெரும் புகழும் பெருமையும் கொண்ட மகாத்மா காந்தியடிகளின் உருவப் படத்திற்கு பக்கத் திலேயே நானும் காலணிகளை அணிந்து நிற்க என் மனம் இடம் தரவில்லையே? அவருக்கு மரியாதை செய்ய வேண்டாமா?" என்றது வந்திருந்த அனைவரையுமே வியப்பில் ஆழ்த்தியது!


# காந்தியடிகளின் தமிழ்நாட்டு நினைவு!

*1933*-ஆம் ஆண்டு மகாத்மா காந்தியடிகள் ரெய்ப்பூருக்கு வந்திருந்தார். வழக்கம்போல அவர் கதர்த்துண்டுகளை ஏலத்தில் விட்டு, அதனால் வரும் தொகையை "ஹரிஜன நல நிதி"யில் சேர்ப்பதற்காக இங்கும் அவர் ஒரு கதர்த்துண்டைஎடுத்து ஏலம் கூவினார். ஆனால் அந்தத் துண்டு *30* ரூபாய்க்கு மேல் ஏலம் உயரவில்லை. அத்துண்டை அந்த விலைக்கு விற்க மனமில்லாதவராய் ஏதோ ஆழ்ந்த யோசனையிலிருந்துவிட்டு, "இதே கதர்த்துண்டை நான் தமிழ்நாட்டில் ரூ.*1,000*க்கு விற்றிருக்கிறேன். கதர்களுக்குத் தமிழ்நாட்டில்தான் மதிப்பு அதிகம். ஆனால் அவ்வளவு பெரிய தொகையை நான் இங்கு எதிர்பார்க்கவில்லை. இருந்தாலும் ரூ.30க்கு இதனை விற்க எனக்குச் சம்மதமில்லை!" எனக்கூறி அத்துண்டை மடித்து வைத்தது தான் தாமதம். உடனே கூட்டத்தில் அதே கதர்த்துண்டின் விலை 'மளமள'வென்று ஏலம் உயர்ந்துவிட்டது!




–டி.வி.ஆர்.

# அறிவொளி காண...




கேரளத்தின் எர்ணாகுளம் மாவட்டம் எழுத்தறிவு இயக்கத்திற்குத் தொட்டிலாக இருந்தது என்றால், தமிழ்நாட்டின் புதுக்கோட்டை மாவட்டம் அறிவொளி இயக்கத்திற்கு ஒரு சாதனைக் களமாகவே அமைந்து விட்டது. புதுக்கோட்டை அறிவொளி இயக்கம் ஒரு இலட்சத்து எண்பதாயிரம் பேருக்கு எழுத்தறிவு வழங்கியது என்றாலும், இந்த இயக்கத்தால் ஏற்பட்ட மக்கள் விழிப்புணர்வு இருக்கிறதே அதுதான் மிக முக்கியத்துவம் வாய்ந்தது.

**அறிவொளி**

இந்த மாவட்ட எழுத்தறிவு இயக்கத்திற்கு "அறிவொளி" என்று பெயரிடப்பட்டது. இது வழக்கமான சமூக மேம்பாட்டுத் திட்டம் இல்லை என்பதை மக்கள் உடனே உணர்ந்தனர். எழுத்தறிவு வேண்டும் என்று அடிமன உறுத்தல் உடைய மக்களுக்கு, இது ஒரு வாய்ப்பாக அமைந்தது. மக்களும் சரியான பாதையை மேற்கொண்டார்கள்.

**எழுத்தறிவு மையங்கள்**

எங்கும் எழுத்தறிவு மையங்கள் தோன்றின. குடிசைகளில் ஆல மரத்தடிகளில், கிராமச் சதுக்கங்களில், அரசு அலுவலகங்களின் முன் பகுதித் தாழ்வாரங்களில், திருக்கோவில்களில் இந்த மையங்கள் எழுந்தன. சிலேட்டூர் ஸ்ரீனிவாசப் பெருமாள் கோவிலில் எழுந்த எழுத்தறிவு மையம் இதற்கோர் எடுத்துக்காட்டு.

கிராமப்புறங்களில், வயல்வெளிகளில், எழுத்தறிவு மையங்களில் பாடல்களைப் பாடினார்கள். அவையெல்லாம் விழிப்புணர்வை ஏற்படுத்தும் பாடல்களாகும். "நிலவில் கால் பதித்தான் ஒரு மனிதன். நாமோ கட்டைவிரல் பதிக்கிறோம்" என்று எழுத்தறிவின்மையை ஏளனம் செய்யும் பாடல்களும் உண்டு.

புதிதாகக் கல்வி பெறும் பெண்களுக்கு வர்த்தக வங்கிகள் எளிதாகக் கடன் கிடைக்க உதவின. ஒரு வங்கியின் ஊழியர்கள் ஒரு கிராமத்தைத் தத்து எடுத்துக்கொண்டு, அதற்குக் கரும்பலகைகளும் விளக்குகளும் வாங்கிக் கொடுத்தார்கள். உதவி சிறிதாக இருந்தாலும், காலத்தால் செய்ததால் ஞாலத்தைவிட மிகப் பெரிதாக அமைந்து விட்டதை யாரும் புறக்கணிக்க முடியாது.

**இயக்கத்தின் விரிவாக்கம்**

மாவட்ட அதிகாரிகள் இந்த இயக்கத்தின் வரம்பைக் கல்விக்கு அப்பாலும் விரிவாக்கினர். மாவட்டக் கிராம வளர்ச்சி முகமையும் ஒரு வங்கியும் சேர்ந்து வைரம் பட்டை தீட்டுதல், அழகுப் பொருள்களான பாய்கள், கூடைகள் போன்ற பொருள்களைத் தயாரித்தல், பனை ஓலைக் கலைப்பொருள்கள் உற்பத்தி செய்தல் போன்ற சுய வேலைவாய்ப்புத் தொழில்களில் மகளிருக்குப் பயிற்சி அளித்ததை முக்கியமாகக் குறிப்பிட வேண்டும்.

**முழுமையான எழுத்தறிவு பெற...**

15 வயது முதல் 35 வயது வரையான பிரிவில் 10 கோடி பேருக்குச் செயல்முறைக் கல்வி அளிக்கும் தேசிய கல்விப் பணியில் முழுமையான எழுத்தறிவு முக்கியமானது ஆகும். 1993ஆம் ஆண்டு நவம்பர் வரை, 240 மாவட்டங்களில் முழுமையாகவோ அல்லது சில பகுதிகளிலோ இந்தத் திட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்த அறிவொளி இயக்கம், வரையறுக்கப்பட்ட ஒரு பகுதிக்குள் நடைபெறுவது கால அட்டவணை கொண்டது மக்கள் ஈடுபாடும் தாமாக முன்வரும் தன்மையும் உடையது. சிக்கனமானது என்றாலும் பயனோ பெரிது. வேறு சமுதாயப் பணிகளும் இத்துடன் மேற்கொள்ளப்படுகின்றன. எல்லோரையும் பள்ளிகளில் சேர்க்கும் முயற்சி, முறைசாராக் கல்வி இல்லாத இடங்களில் 9 - 14 வயதுப் பிரிவு சிறுவர்களுக்குக் கல்வி, முத்தடுப்பு ஊசி இயக்கம், சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்பு, சிறு குடும்ப நெறி, மகளிர்க்கு அதிகாரம் போன்ற பணிகளும் இதில் அடங்கும்.

12 மாதக் காலத்தில் நடைபெறும் இந்த இயக்கத்தில் ஆயத்தத்திற்குப் பாதியும் அறிவொளி தருவதற்குப் பாதியும் செலவிடப்படும். சிரமமான பகுதிகளில் கால அவகாசம் கூடும். இருவகைப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

வீடுதோறும் சென்று, எழுத்தறிவு வேண்டுவோரையும் எழுத்தறிவு தரக்கூடியவர்களையும் கண்டறிந்து இப்பணியில் சேர்ப்பது ஒரு நடவடிக்கை. மாநிலக் கருவூல மையங்கள் தயாரித்த பாடத் திட்டங்கள் இதற்குப் பயன்படுத்தப்படுகின்றன. போதனை துவங்குவதற்கு முன்னர், உயர் நிபுணர்கள், போதகர்கள், தொண்டுள்ளம் கொண்ட ஆசிரியர்களுக்கும் பயிற்சி தரப்படுகிறது.

அறிவொளி இயக்கம் நடந்த இடங்களில் இரண்டு ஆண்டுகளுக்குத் தொடர் இயக்கம் நடைபெறுகிறது. கற்றுத் தரும் நிலையில் உள்ள பயிற்சியாளர்கள், தாங்களே கற்றுக் கொள்ள இந்தத் தொடர் இயக்கம் உதவுகிறது.




# சமூக நீதிக்காகப் பாடுபட்டவர்களுக்குப் பெரியார் விருது!

## சமூக நீதி காத்த வீராங்கனை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கு 69 சதவிகித இட ஒதுக்கீட்டுச் சாதனைகளுக்காக மாற்றுக் கட்சியினர் அளித்த பாராட்டு விழாவில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவிப்பு (8.9.1994)

**த**மிழகத்தின் சமூக நீதி வரலாற்றில், ஒரு சரித்திரச் சாதனையை நிகழ்த்திக் காட்டியதாகவும், சமூக நீதியைக் காப்பாற்றுவதில், நாம் அனைவரும் அடைந்த மாபெரும் இமாலய வெற்றியை மனம் திறந்து பாராட்டி மகிழ்வதற்காகவும் குழுமியுள்ள உங்கள் அனைவருக்கும் முதற்கண் எனது அன்பான வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சமூக நீதி காக்கும் போராட்டத்தில், நாம் அடைந்த வெற்றிக்காக, என்னை மனம் திறந்து பாராட்டிய உங்கள் அனைவருக்கும் எனது இதயம் கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த வெற்றியைப் பெறுவதற்காக, நான் எடுத்துக்கொண்ட முயற்சிகளுக்குத் தாங்கள் சார்ந்துள்ள அரசியல் கட்சி மற்றும் இயக்கத்தின் சார்பில் மனம் திறந்து பாராட்டுக்களை வழங்கிய உங்களது பண்பையும், மாண்பையும் பார்க்கும்போது எனக்கு ஒரு மன நிறைவு ஏற்படுகின்றது.


நான் மேற்கொண்ட முயற்சிகளையும், அதில் வெற்றி கண்ட விதத்தையும், அதனால் தமிழகத்திற்கு ஏற்பட்ட உயர்வையும், எடுத்துரைத்த உங்கள் அனைவர்க்கும் எனது மனமார்ந்த நன்றியை மீண்டும் உரித்தாக்குகிறேன். உதட்டளவில் இன்றி, உள்ளத்தின் அடித்தளத்தில் இருந்து எழுந்து உங்கள் பாராட்டு மொழிகள், நான் மக்கள் பணியை, மேலும் உற்சாகத்துடன் மேற்கொள்ள, ஒரு தூண்டுகோலாக விளங்கும் பாராட்டுகின்ற பரந்த மனம் படைத்த நீங்கள் அனைவரும், இந்த மகத்தான பணியில், எனக்குக் கொடுத்த ஒத்துழைப்பையும், ஆதரவையும் நினைவுகூர்ந்து எனது நெஞ்சார்ந்த நன்றியை மீண்டும் காணிக்கையாக்குகின்றேன்.

முதல் அட்டை சொல்லும் செய்தி

இதுவரை அரசாணையால் மட்டுமே, நடைமுறைப்படுத்தப்பட்ட இட ஒதுக்கீட்டு முறைக்கு, முதன் முதலில், ஒரு சட்டத்தை இயற்றிய ஒரே மாநிலம் இந்தியத் துணைக் கண்டத்தில், தமிழ்நாடு மட்டும் தான். அது மட்டுமன்றி, அந்தச் சட்டத்திற்கு அரசியல் அமைப்புச் சட்டத்தின் நிரந்தரப் பாதுகாப்பைப் பெற, அரசியலமைப்புச் சட்டத் திருத்தத்தை மத்திய அரசை மேற்கொள்ளச் செய்த ஒரே மாநிலமும், தமிழ்நாடு தான்.

"மாற்றான் தோட்டத்து மல்லிகைக்கும் மணம் உண்டு", என்ற தூய அரசியல் பாரம்பரியத்தைக் கற்றுத் தந்த அரசியல் ஆசான், பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்கள், அன்று கூறியதைப் போல, அரசியல் மனமாச்சர்யங்களைக் கடந்து, அடுத்தவர்களின் நற்செயல்களைப் பாராட்டுகின்ற பாரம்பரியம், இன்னும் தமிழகத்தில் குடி கொண்டுள்ளது என்பதை நிரூபிக்கின்ற வண்ணம், இந்தப் பாராட்டு விழாவை ஏற்பாடு செய்து இருக்கின்ற, எனது அன்பிற்குரிய அன்புச் சகோதரர்கள் அனைவருக்கும், எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

தூய அரசியலிலும், பொது வாழ்க்கையிலும், கருத்து வேறுபாடுகள் காணப்பட



லாம். இருப்பினும், ஒவ்வொரு மனிதனிடமும், ஒவ்வொரு இயக்கத்திடமும், காணப்படுகின்ற நற்பண்புகளைச் சுட்டிக் காட்டி, அவற்றைப் பெருமைப்படுத்துகின்ற அரசியல் நாகரிகம், இந்த மண்ணுக்கே உரித்தான, ஒரு மரபு ஆகும். அந்த மரபும், இந்த மண்ணின் வாசனையும், இன்னும் மாறவில்லை என்பதை, இன்று நடைபெற்றுக் கொண்டிருக்கும் இந்த நிகழ்ச்சி உலகத்திற்கு நிரூபித்துக் கொண்டிருக்கிறது என்றால், அது மிகையாகாது.

பேதங்கள் ஆயிரம் இருக்கலாம்; கருத்து வேறுபாடுகள் ஆயிரம் இருக்கலாம்; இயக்கத்தின் நடைமுறைத் தத்துவங்கள் வேறுபடலாம். ஆனால், மாற்றானின் நற்செயல்களையும், நற்பண்புகளையும் மதிக்கின்ற, நல்லதொரு கலாச்சாரத்தை, இந்த நாடு, என்றென்றைக்கும் மறந்து விடக் கூடாது என்பதில், எனக்கு ஒரு உறுதியான ஈடுபாடு உண்டு. அந்த அரசியல் நாகரிகத்தை, உலகிற்கு நாம் உணர்த்திக் கொண்டிருக்கிறோம், என்பதை எண்ணும்போது, என் மனம் மகிழ்ச்சி அடைகின்றது.

தமிழகத்தின் உயிர்மூச்சுப் பிரச்சினையான, இந்தச் சமூக நீதி காக்கின்ற பிரச்சினையை ஒரு சத்திய வேள்வியாகக் கருதி, நான் ஆரம்பத்திலிருந்தே, ஒரு ஆத்மார்த்த ஈடுபாட்டுடன் செயல்பட்டு வந்தேன். தமிழகத்தில் காலம் காலமாகத் தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட, மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களின் நலனைக் காத்து வந்த ஒதுக்கீட்டு முறைக்கு, ஊறு விளைந்த போது எத்தகைய இன்னல்கள் இடர்ப்பாடுகள் வந்தாலும், அவற்றை எதிர்கொண்டு, அந்த மக்களின் வாழ்க்கைத் தரத்தின் மேம்பாட்டிற்கும், உயர்விற்கும், வழி வகுக்க வேண்டும், என்ற சபதத்தை மேற்கொண்டேன்.

மக்கள் சக்தி, என்கின்ற மாபெரும் சக்தி ஒன்றை மட்டுமே, ஆதாரமாகக் கொண்டு, இந்த விழா மேடையில் அமர்ந்திருக்கின்ற பல தலைவர்களின் துணையோடு, தமிழகத்திற்குச் சமூக நீதியைப் பெற்றுத் தரும் முயற்சிகளில் ஈடுபட்டேன்.

இந்தியாவில் வேறு எந்தப் பிரச்சினையும் இந்த அளவிற்குக் குறுகிய கால அளவிற்குள், தீர்த்து வைக்கப்படவில்லை என்ற பெருமை, தமிழ்நாட்டு மக்களுக்கு உரித்தாகும் வண்ணம், நிகழ்ச்சிகள் ஒன்றன்பின் ஒன்றாக நடைபெற்றன. நமது உள்ளங்களில், பொது நலன் மட்டுமே ஓங்கியிருந்ததால், நாம் மேற்கொண்ட சத்திய வேள்வியில், முழுமையான வெற்றியைக் கண்டோம்.

அடுக்கடுக்கான வக்கணை பேசியவர்கள், வாய் வலிக்காமல் நம்மைக் குறை கூறியவர்கள், நாம் செய்தவற்றை எல்லாம் கண்டு, எள்ளி நகையாடியவர்கள், நான் குடியரசுத்

தலைவரின் அங்கீகாரத்தைப் பெற்ற பிறகாவது, தமிழக மக்களின் நலனில், ஒரு துளியேனும் அக்கறை கொண்டு இருந்தால், அதைப் பாராட்டி, அந்தச் சட்டத்தை 9வது அட்டவணையில் சேர்த்து, முழுச் சட்டப் பாதுகாப்புப் பெற்றுத் தர, ஒன்றாகக் கூடி ஓரணியில் திரண்டு செயல்படுவோம் என்று முன்வந்தார்களா? என்றால், அதுவும் இல்லை. இவர்களால் ஆனதெல்லாம், குறை கூறுவதும் புறங்கூறுவதும் தான்.

"குடியரசுத் தலைவரின் ஒப்புதல் கிடைத்து விட்டாலும், அரசியலமைப்புச் சட்டப் பாதுகாப்பு கிடைக்காதே'' என்றும், "யாராவது நீதிமன்றத்திற்குச் சென்று, தடை ஆணை பெற்றுவிட்டால், என்ன செய்வது" என்றும் அழிவுப் பாதையின் தீர்க்கதரிசி களாகச் சிலர் புலம்பினார்கள். இந்தப் பாராளுமன்றக் கூட்டத் தொடரிலேயே, இந்த அரசியல் சட்டத் திருத்தத்தைக் கொண்டு வந்து, நமது சட்டத்தை 9வது அட்டவணையில் சேர்க்க வேண்டும் என்று, நான் கோரிக்கை விடுத்தபோது, அதற்கும் எதிர்ப்பாட்டுப் பாடினார்கள், ஆனால், அந்தச் சாதனையை நிகழ்த்திக் காட்டி யுள்ளதை, உங்களைப் போன்ற நல்ல மனம் படைத்தவர்கள், பாராட்டுகின்றனர். என்னைப் பொருத்த வரையில், இதில் எனக்கு அரசியல் உணர்வைவிட, தமிழ் மக்களின் வளமார்ந்த எதிர்காலம் தான், கண்ணுக்குப் படுகின்றது. இந்த நேரத்தில், இத்தகைய ஒரு சட்டத்தை இயற்றி, அதற்கு அரசியல் சட்டப் பாதுகாப்பையும் பெற்றுத் தர, நம்மால் முடியாத ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருந்தால், என்ன ஆகும் என்பதை, நம்மை வஞ்சகம் பேசுபவர்கள், குறை கூறுபவர்கள், ஒரு நிமிடம் எண்ணிப் பார்க்க வேண்டும். தமிழக வரலாற்றில் என்றென் றைக்கும், நமக்கெல்லாம் ஒரு அவப் பெயர் ஏற்பட்டிருக்கும் என்பதை, நாம் மறந்துவிடக் கூடாது. எதிர்காலச் சந்ததியினர், நம்மை வசைபாடி இருப்பார்கள். இந்த மாபெரும் வெற்றி, நமக்குக் கிடைத்ததால் தான், எதிர்காலச் சந்ததியினர், நம்மைத் தூற்றாமல், மாறாக, நம்மை எல்லாம் நெஞ்சார வாழ்த்துகின்ற ஒரு சூழ்நிலையை, இன்று நாம் உருவாக்கி இருக்கிறோம். எனவே தான், தமிழகத்து மக்கள் சக்தியின் துணையோடு, நாம் பெற்றுள்ள இந்த மாபெரும் வெற்றியை, அதே தமிழக மக் களுக்குக் காணிக்கையாக்கி, மகிழ்ச்சி அடைகிறேன்.

இந்த மகிழ்ச்சியை இங்கே மீண்டும், உங்களுடன் பகிர்ந்து கொள்வதில், நான் பேருவகை அடைகின்றேன். என்னைப் பொருத்த வரையில், தமிழக மக்களின் பேராதரவும், பேரன்பும் தான், இந்த மகத்தான வெற்றிக்கு முக்கியக் காரணம்.

## ஆசிரியர் மாணாக்கர் விடுதி, வீட்டு வசதி

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் கீழ் இயங்கிவரும் கோயம்புத்தூர் மற்றும் திருச்சி ஆகிய 2 இடங்களிலும் வேளாண் கல்லூரிகளில் பணிபுரியும் மாணவ மாணவியர், ஆசிரியர்கள் மற்றும் ஆசிரியர் அல்லாத பணியாளர்கள் ஆகியோருக்குத் தங்கும் விடுதி மற்றும் வீட்டு வசதி ஆகியவற்றை 6.3 கோடி ரூபாய் செலவில் அமைக்க மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் ஆணையிட்டுள்ளார். இரண்டு ஆண்டுகளுக்குள் இவ்வசதிகள் அனைத்தும் செய்து முடிக்கப்படவேண்டும் எனவும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார். இவற்றில் திருச்சி வேளாண் கல்லூரியில் 90 இலட்சம் ரூபாய் மதிப்பில் அமையவிருக்கும் மாணவர் தங்கும் விடுதியும் 5.4 கோடி ரூபாய் செலவில் திருச்சி மற்றும் கோவை ஆகிய இரு வேளாண் கல்லூரி வளாகங்களிலும் அமையவிருக்கும்

ஆசிரியர்களுக்கான வீட்டு வசதியும் அடங்கும்.

வன்னியக்குல சத்திரிய நலச் சங்கங்களின் மத்திய மையத்தின் தலைவர் திரு. குலசேகரன் அவர்கள் பேசும்பொழுது, 1964 ஆம் ஆண்டிலிருந்து மாநில அரசு மூலமாக மத்திய அரசு செயல்படுத்தி வந்த தேசியக் கடன் படிப்பு உதவித் தொகைத் திட்டத் தைக் கடந்த 2 ஆண்டுகளாகக் கைவிட்டு விட்டது என்றும், அந்தத் திட்டத்தை மாநில அரசே ஆண்டொன்றிற்கு 25 இலட்சம் ரூபாய் செலவு செய்து நிறைவேற்ற வேண்டும் என்றும் மாணவ மாணவிகளின் சார்பில் கேட்டுக் கொண்டார்கள். இத் திட்டம் கைவிடப்பட்டதால், மாணவ மாணவியர்கள் பாதிக்கப்படக் கூடாது என்ற எண்ணத்தில், இந்த ஆண்டு முதல்

# நூல் நயம்

**சத்திய சோதனை சுருக்கம்**

மகாத்மா காந்தி எழுதியது.


தமிழாக்கம்: ரா. வேங்கடராஜுலு

வெளியீடு: காந்திய இலக்கியச்
சங்கம்,
மதுரை 625 020

பக்கம்:135 விலை: ரூ.10

**அ**ண்ணல் காந்தியடிகளின் திறந்த புத்தகம் தான் 'சத்திய சோதனை' என்னும் இந் நூல்.

பிறப்பு, வளர்ப்பு, படிப்பு என்று தொடங்கி, நாட்டுப் பணியில் தம்மை அர்ப்பணித்துக் கொண்டு சோதனைகளிலும், வேதனைகளிலும் பங்கு கொண்டு, வாழ்க்கையென்னும் கடலில் எதிர்நீச்சல் போட்டு வாழ்ந்த நிகழ்வுகளை ஒளிவுமறைவு இன்றிக் கூறுகிறார் அண்ணல் காந்தியடிகள்.



அவரது வாழ்க்கை நமக்கெல்லாம், குறிப்பாக இளைய தலைமுறைக்கு இன்றியமையாத செல்வமாகும். எத்தனைத் தடவை வேண்டுமானாலும் படிக்கலாம், அண்ணலின் வாழ்க்கை ஏட்டின் இந்தப் புனிதப் பக்கங்களை!

**காந்திஜி வாழ்வில் சுவையான நிகழ்ச்சிகள்**

ஆசிரியர்: விஷ்ணு பிரபாகர்
வெளியீடு: காந்திய இலக்கியச்
சங்கம்
மதுரை 625 020
விலை:ரூ 50 பக்:135

**அ**ண்ணல் காந்தியடிகளின் வாழ்க்கையில் நடந்த சுவையான நிகழ்ச்சிகளின் தொகுப்பாக இந் நூல் விளங்குகிறது. சத்தியம், வாய்மை, அகிம்சை முதலான தன்மைகளை வாழ்நாள் முழுவதும் கடைப்பிடித்துத் தூய வாழ்வு வாழ்ந்த அந்தப் புனிதரின் அடிச்சுவட்டைப் பின்பற்றும் வகையிலே கருத்துக்களின் கோவை இந்நூலில் அணி வகுக்கின்றது. பெரியவர், குழந்தைகள் எல்லோரும் இந்த நூலைப் படித்துப் பயன்பெற வேண்டும்.

**உழைப்பு**

ஆசிரியர்: ஜே.சி. குமரப்பா

வெளியீடு: காந்திய இலக்கியச்
சங்கம்,
மதுரை 625 020
பக்கம்:92 விலை ரூ.9

**'உ**ழைப்பு' பற்றி மிக ஆழமான சிந்தனையின் வெளிப்பாடு இந்நூல்.

'உழைப்பின் தத்துவம்' 'முன்னேற்றத்தின் தத்துவம்' 'காந்தியப் பொருளாதாரம்' என்ற மூன்று தலைப்புகளின் கீழ் உழைப்பு பற்றிய சிறந்த ஆய்வே நடத்தி இருக்கிறார் ஆசிரியர்.

-பி.வி. கிரி

---

இத்திட்டத்தை மாநில அரசே ஏற்று நடத்தும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த உயர் கல்விக் கடன் படிப்பு உதவித் திட்டத்திற்கு 25 இலட்ச ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும் என்பதையும் மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

பெருமதிப்பிற்குரிய அன்புச் சகோதரர் திராவிடர் கழகத்தின் பொதுச் செயலாளர் திரு கி. வீரமணி அவர்கள் உரையாற்றுகின்ற போது, ஒரு கோரிக்கையை முன்வைத்தார்கள். சமூக நீதிக்காக, சமூக நீதியைப் பெற்றுத்தரப் பாடுபட்ட மற்ற தலைவர்களின் பெயர்களில் எல்லாம் தமிழக அரசு விருது அளிக்கின்றது. ஆனால், இந்தப் போராட்டத்திற்கு முதன் முதலில் மூல காரணமாக இருந்த தந்தை பெரியார் அவர்களின் பெயரில் ஒரு விருது நிறுவப் படவில்லையே என்று அவர் தெரிவித்து அத்தகைய ஒரு விருதைத் தமிழக அரசு ஏற்படுத்த முன்வர வேண்டும் என்றும் தெரிவித்தார்கள். அன்புச் சகோதரர் திரு வீரமணி அவர்களின் ஆலோசனையை ஏற்று, தந்தை பெரியார் அவர்களின் பெயரில் சமூக நீதிக்காகப் பாடுபட்டவர்களுக்கு ஒரு விருது நிறுவப்படும். அடுத்த ஆண்டு முதல் அது அளிக்கப்படும் என்பதையும் மெத்த மகிழ்ச்சியுடன் உங்களுக்கெல்லாம் தெரிவித்துக் கொள்கிறேன்.

தந்தை பெரியார், பேரறிஞர் பெருந்தகை அண்ணா, இதய தெய்வம் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். ஆகியோரின் இலட்சியங்களைத் துணையாகக் கொண்டு, தமிழகம் மென்மேலும் சிறப்புகளை அடைய, மக்கள் பணியைத் தொடர்ந்து ஆற்றுவோம், என்பதை எடுத்துரைத்து, இந்த விழாவில் என் மீது கொண்டுள்ள, தனிப்பட்ட பாசத்தின் காரணமாகவும், அன்பின் காரணமாகவும், கூறப்பட்ட பாராட்டு மொழிகளை, நன்றி உணர்வுடன் ஏற்றுக் கொண்டு, தமிழக மக்களின் வளமார்ந்த வாழ்விற்கு, நான் எடுக்கின்ற அத்துணை முயற்சிகளுக்கும், நீங்கள் தொடர்ந்து ஆதரவையும், ஒத்துழைப்பையும், நல்க வேண்டும், என்று கேட்டுக்கொண்டு, மீண்டும் என நெஞ்சார்ந்த நன்றியை, உங்கள் அனைவருக்கும் உரித்தாக்கிக் கொள்கிறேன்.



# பைந்தமிழ்க் கவிஞன் பாரதி வசித்த இல்லங்கள்

—ரகமி

பைந்தமிழ்க் கவிஞன் மகாகவி பாரதி எட்டயபுரத்தில் 1882-ஆம் ஆண்டு டிசம்பரில் பிறந்தது முதல், 1921-ஆம் ஆண்டு செப்டம்பரில் சென்னையில் இறுதிக் காலம் வாழ்ந்து மரணம் அடைந்தது வரையிலுள்ள இடைக்காலங்களில் அவர் எந்தெந்த இடங்களில் வாழ்ந்தார் என்பதனை இன்றைய இளந்தலைமுறையினர் அறிய வேண்டியது அவசியமாகும். எனவே, நாமும் கவி பாரதி பிறந்து, வளர்ந்து, வேலை பார்த்து, தனது வாழ்நாளில் அவர் வாழ்ந்த இல்லங்களின் விவரங்களை அறிவோமாக!

### 1882 டிசம்பர் 11 'சுப்பையா' பிறப்பு

ஆங்கில ஆண்டு 1882 டிசம்பர் 11-ந் தேதி தமிழில் ஸ்வஸ்திஸ்ரீ சித்திரபாநு வருடம் கார்த்திகை மாதம் 27-ந் தேதி திங்கட்கிழமை எட்டயபுரத்தில் ஸ்ரீசுந்தரராஜன் (எ) சின்னசாமி ஐயர், லட்சுமி தம்பதியருக்கு சுப்ரமணியன் (எ) 'சுப்பையா' பிறந்தார். எட்டயபுரத்தில் தாய் வழிப் பாட்டனார் ஸ்ரீராமசுவாமி ஐயர் இல்லத்தில் (பெரியமாடி வீடு) பிறந்தார். 1887-இல் எட்டயபுரத்தில் பாரதியின் 5-வது வயதில் தாயார் இலட்சுமி அம்மாள் மரணம். அடுத்து அவரது 15 வயதிற்குள் (1898) தகப்பனார் சின்னசாமி ஐயர் மரணம்.

### 1898 முதல் 1901 வரை காசி வாசி!

தகப்பனார் மறைவிற்குப் பின் கவி பாரதி தனது அத்தை குப்பம்மாளுடன் காசிக்குச் சென்றார். 1898 முதல் 1901 ஜூன் வரை அங்குள்ள 'ஸ்ரீஹநுமான்கட்டம்' சிவமடத்திலுள்ள அத்தையின் கணவர் கிருஷ்ண சிவன் இல்லத்தில் தங்கி, அங்கு "ஜெய் நாராயணப் பள்ளி" மற்றும் அலகாபாத் பல்கலைக்கழக நுழைவுத் தேர்வில் முதல் வகுப்பில் தேர்வு.

### 1901 முதல் 1904 வரை

1901-இல் டெல்லியில் நடந்த "தர்பார் விழா" விற்குச் சென்றிருந்த எட்டயபுரம் ஜமீன்தார், ஊர் திரும்பி வருகையில் காசிக்கு வந்தவர், அங்கு தங்கியிருந்த கவி பாரதியைத் தன்னுடனே அழைத்து வந்து, தமது சமஸ்தானத்தில் 3 ஆண்டுகள் உத்தியோகமும் அளித்தார்.


### 1904 ஆகஸ்டு முதல் நவம்பர் வரை

1904-ஆம் ஆண்டு ஆகஸ்டு 1-ந் தேதி நவம்பர் 10-ந் தேதி வரை மதுரை சேதுபதி உயர்நிலைப் பள்ளியில் தமிழாசிரியராக வேலை பார்த்தபோது அங்கு கட்டுச் செட்டி மண்டபத்தின் அருகே ஓர் மொட்டை மாடி வீட்டில் வசித்து வந்தாராம்.

### 1904 நவம்பர் முதல் 1908 செப்டம்பர் வரை (சென்னைக்கு முதல் விஜயம்)


1904-ஆம் ஆண்டு சென்னைக்கு வந்த கவி பாரதி ஜி. சுப்பிரமணிய ஐயரின் "சுதேசமித்திரன்" நாளிதழில் உதவி ஆசிரியராகச் சேர்ந்

எட்டயபுரத்தில் மகாகவி பாரதியார் பிறந்த வீடு.



தார். சென்னை வந்த அவர் முதலில் மையிலாப்பூர் சித்திரக் குளத்திற்கு அருகேயுள்ள ஒரு குறுகலான வீதியில் ஒரு பெரிய வீட்டில் குடி வந்தார். அப்போது இவருடன் தங்கியிருந்த் தம்பி சி. விசுவநாதய்யர் அங்குள்ள பி.எஸ். உயர்நிலைப் பள்ளியில் படித்தார்.

அடுத்து, திருவல்லிக்கேணி வீர ராகவ முதலித் தெரு (பெரிய தெரு) மசூதிக்கு எதிர்ப்புறத்திலுள்ள ஓர் தட்டோடு வீட்டிற்கு மாறிக் குடி வந்தார். இதே தெருவின் மற்றொரு பகுதியில் 'ஹிந்து', 'சுதேசிமித்திரன்' பத்திரிகைகளின் ஸ்தாபகரும், ஆசிரியருமான ஜி. சுப்பிரமணிய ஐயரும் தமது சொந்த இல்லத்தில் வசித்து வந்தார். அப்போது கவி பாரதியின் தம்பி, திருவல்லிக் கேணி "ஹிந்து உயர்நிலைப் பள்ளி"யில் சேர்ந்திருந்தார்.




**1920-இல் சென்னை திருவல்லிக்கேணியில் கவி பாரதியார் வாழ்ந்த இல்லத்தின் பழைய தோற்றம்.**

1907 ஏப்ரலில் கவி பாரதி அதே திருவல்லிக்கேணியிலேயே நல்ல தம்பி முதலித் தெரு கிழக்குப் பக்கத்திலுள்ள ஓர் பழைய வீட்டின் (அன்றைய கதவு எண் 32 அல்லது 33) பின் பகுதியில் குடி வந்தார். இந்த வீட்டிலிருந்தபோது தான் கவி பாரதி, தான் இருந்த அந்த பழைய வீட்டைச் சுட்டிக் காட்டியே 'மண்ணுலகம்' என்ற நகைச்சுவைக் கட்டுரையையும் எழுதினார். சுதந்திரப் போராட்டம், மற்றும் சுதேசிய இயக்கங்களில் பெரிதும் ஈடுபட்ட கவி பாரதி அந் நாளைய பிரிட்டிஷ் அரசாங்கத் தின் கெடுபிடிகளின் காரணமாக, 1908 செப்டம்பரில் இந்த வீட்டி லிருந்துதான் புதுவைக்குச் சென்றார்.

### 1908 செப்டம்பர் முதல் 1918 அக்டோபர் வரை (10 ஆண்டுகள் புதுவை வாசி)

புதுவைக்குச் சென்ற கவி பாரதி முதலில் ஈஸ்வரன் தர்மராஜா கோவில் தெருவில் மு. இராஜா பாதரின் வீட்டிற்கு அடுத்துள்ள ஓர் சிறு வீட்டிற்குக் குடிவந்தார். பின்பு அதே தெருவில் 28-ஆம் எண்ணுள்ள மாடிவீட்டிற்கு மாறிக் குடிவந்தார். இந்த வீட்டுச் சொந்தக்காரர் "ஐயாக்கண்ணு செட்டியார்". ஆனால், இவரைக் கவி பாரதி அழைத்ததோ "விளக்கெண்ணைய் செட்டியார்" என்ற நகைச்சுவைப் பெயரில்!

**புதுவையில் பாரதியார் வாழ்ந்த இல்லத் தின் பழைய தோற்றம்.**



### 1919 ஜனவரி முதல் 1920 நவம்பர் வரை

புதுவையினின்று வெளிவந்த கவி பாரதி எட்டயபுரம், கடையம், காரைக்குடி, கானாடுகாத்தான், திருநெல்வேலி, திருவனந்தபுரம் மற்றும் சிற்சில இடங்களிலெல் லாம் தங்கிச் சஞ்சாரம் செய்தார்.

### 1920 நவம்பர் முதல் 1921 செப்டம்பர் வரை (மீண்டும் சென்னை வாசி)

1920-ஆம் ஆண்டு நவம்பரில் மீண்டும் சென்னைக்கு வந்த கவி பாரதி, மீண்டும் 'சுதேசமித்திரன்' ஆசிரியர் ஏ. அரங்கசாமி ஐயங்கார் காலத்தில் ஆசிரியர் குழுவில் பணிக்குச் சேர்ந்தார். சென்னைக்கு

வந்த சில நாட்கள் மட்டுமே சைதாப்பேட்டையில் "டேங் ஸ்கொயர் தெரு"வில் ஓர் வீட்டில் தங்கியிருந்தார். பின்னர் ஜார்ஜ் டவுன் தம்புச் செட்டித் தெருவில் ஸ்ரீகாளிகாம்பாள் கோவில் எதிர்ப் புற வரிசையில் ஓர் இல்லத்தில் குடியிருந்தார். அதே வீட்டில் சென்னை பிரசிடென்சி போஸ்ட் மாஸ்டர் ஜெனரல் திரு, நாராயண னும் குடியிருந்தார்.

அத்தெருவில் 154-ஆம் எண் இல்லத்தில் (சாந்தாச்ரமம்) ஸ்ரீவத்ஸ வே. ஸோமதேவசர்மா வசித்து வந் தார். இவர் நடத்திய "அமரகலா விலாசனி சபா"வில் கவி பாரதி யார் கௌரவ அங்கத்தினராக இருக்கவே, அன்றாடம் சுதேச மித்திரனில் வேலை முடிந்ததும் பெரும்பாலும் அவர் இங்கேயே தங்கி தமது எழுத்துப் பணியில் ஈடு பட்டார்.

பின்பு முத்தியாலுப்பேட்டை ராமசாமி தெருவில் (பழைய கதவு எண் 89) ஓர் வீட்டில் தங்கி இருந்த போதுதான், புதுவையிலிருந்த கவி பாரதியின் ஆப்த நண்பரான "குள்ளச்சாமி" சென்னை வந்து கவி பாரதியைச் சந்தித்தார். அடுத்து, கவி பாரதி, மைலாப்பூரி லுள்ள தமது நெருங்கிய நண்ப ரான கிருஷ்ணாபுரம் ஹரிஹர சர்மா வீட்டிலும் சில நாட்களே தங்கினார்.

அடுத்து, அவர் தனது ஆப்த நண்பரான ஸ்ரீசுரேந்திரநாத் ஆர்யா — இவருடைய மனைவி 'ஒகிலி' அம்மையார் தம்பதியர் — வேண்டுகோளுக்கு இணங்கி தமது குடும்பத்தோடு வேப்பேரி ரண் டல்ஸ் ரோடிலுள்ள 'ஆர்யா'வின் பெரிய பங்களாவின் ஓர் போர்ஷ னில் குடியேறினார்.

கடைசியாக, பாரதியின் புதுவை நண்பர் குவளை கிருஷ்ணமாச் சாரியார் என்னும் 'குவளைக் கண்ணன்' அப்போது திருவல்லிக் கேணியில் வசித்துவந்தார். திரு வல்லிக்கேணி துளசிங்கப்பெரு மாள் கோவில் தெருவிலுள்ள (அன்றைய கதவு எண் 67) வீட்டிற் குக் குடிவரும்படி பாரதியை அழைத்து வந்தார். இந்த வீடு அந்நாளில் பிரபல ஹைகோர்ட்




பாரதி இல்லத்தில்
பதிக்கப்பட்ட பெயர்ப் பலகை.

வக்கீலும் திவானுமாகிய "தும்மன பள்ளி ராஜாராமராவ்" என்பவ ருக்குச் சொந்தமானது. திவான் ராமராவ் சுதந்திரப் போராட்ட வீராங்கனை ருக்மிணி லட்சுமி பதியின் தாய்வழிப் பாட்டனா ராவார்.

இந்த வீட்டில் வாழந்தபோது மகாகவி பாரதிக்குச் சிறிதுகாலம் உடல்நலமின்றி 1921-ஆம் ஆண்டு செப்டம்பர் 12-ந் தேதி திங்கட் கிழமை அதிகாலை 1.30 மணிக்குக் காலமானார். அப்போது அவருக்கு வயது 39.

### மகாகவி பாரதியார் வாழ்ந்த இல்லம் நினைவாலயமாக மாறியது

மகாகவி பாரதியார் காலமான பின் நீண்டகாலமாகவே திரு வல்லிக்கேணி துளசிங்கப்பெரு மாள் கோவில் தெருவில் அவர் வாழ்ந்த இல்லம் (புதிய கதவு எண் 75) எவ்வித மாறுதலுமின்றிபழைய பாணியிலேயே இருந்தது. கவி பாரதியின் பெயரை நினைவு கூரும் வகையில் "சென்னை பாரதி இளைஞர் சங்கத்தாரால்" 1965-ஆம் ஆண்டு டிசம்பர் 11-ந் தேதி "மகாகவி பாரதியார் 1882, 1921 வாழ்ந்த இல்லம்" என்ற பெயர்ப் பலகையை அவ்வீட்டின் முன் பகுதியில் பதித்தும் வைத்தனர்.

இந்த இல்லத்தை நஞ்சுண்டரா விடமிருந்து 1975-ஆம் ஆண்டு ஏப்ரல் 26-இல் சென்னைப் பிர முகர்களான எஸ். சோகன்ராஜ், எம். மிஸ்ரிலால் என்ற இரு சகோதரர்கள் விலை கொடுத்து வாங்கினர். பின்னர் சென்னை கார்ப்பொரேஷன் முன் அனுமதி பெற்று அவர்கள் அவ்வீட்டின் முன் பகுதித் தோற்றத்தையும், பின் தோற்றத்தையும் மாற்றி நவீன பாணியில் சீரமைத்து "சன்செட்டி பவன்" (Sanchèti Bhavan) எனப் பெயரிட்டு அவ்வீட்டின் மேல் தளத்தை ஓர் பிரபல வங்கிக்கு வாடகைக்கு விட்டதோடு, கீழ்ப் போர்ஷனில் வீட்டின் சொந்தக் காரரும் குடியிருந்தார்.

உலகம் போற்றும் மகாகவி பாரதி சென்னையில் வசித்து கடைசியில் உயிர்நீத்த அந்தப்

**சன்செட்டி பவன் இல்லத்தின் தோற்றம்**



பெருமை வாய்ந்த இல்லத்தை ஓர் நினைவாலயமாக்க வேண்டுமென பொதுமக்களிடையே எழுந்த வேண்டுகோள் தமிழக அரசின் கவனத்திற்கு எட்டியது. 1976-ஆம் ஆண்டு, செப்டம்பரில் அப்பகுதி தாசில்தார் மூலம், அந்த வீட்டின் சொந்தக்காரருக்கு அரசு ஒரு நோட்டீஸ் கொடுத்தது. அதில், "அந்த இடத்தைக் கவி பாரதியாரின் நினைவாக வாங்கி, மக்களின் சொத்தாக ஆக்க அரசு விரும்பு வதாகவும் அந்த இடத்தில் ஓர் நினைவுச் சின்னம் ஏற்படுத்த விரும்புவதாலும், மேற்படி நிலத்தில் எவ்வித மாற்றமும் செய்யக் கூடாதென்றும்" தெரிவித்தது.



தமிழக அரசு மாற்றியமைத்த கவி பாரதியின் இல்லத்தின் பழைய தோற்றம்.

இதனை எதிர்த்து அந்த வீட்டின் சொந்தக்காரர்கள் இருவரும் சென்னை உயர்நீதிமன்றத்தில் ஓர் "ரிட்மனு" தாக்கல் செய்தனர். இதனை நீதிபதி பத்மநாபன் தீவிரமாக விசாரித்து, "பொது நோக்குடன் இதுவிஷயமாக அரசு எடுத்துள்ள நடவடிக்கை செல்லத் தக்கதே என்றும் இதனை யாரும் ஆட்சேபிக்க முடியாது. எனவே, மகாகவி பாரதியார் வசித்த வீட்டைப் பொதுச்சொத்தாக ஆக்கத் தமிழக அரசு எடுத்துக் கொண்ட நடவடிக்கைகள் செல் லத்தக்கதே!" என 1983-ஆம் ஆண்டு பிப்ரவரி இறுதியில் தீர்ப்பளித்தார். தீர்ப்பிற்குப் பின்னரே அவ் வீட்டைத் "தமிழக அரசு" தன் வசம் கையகப்படுத்தியது. பாரதியார் வாழ்ந்த காலத்தில் அவ்வீடு எப்படி இருந்ததோ, அதுபோலவே மீண்டும் உருமாற்றி அமைக்கும் பணியைத் தமிழகப் பொதுப் பணித் துறையினர் மேற்கொண்டனர். ரூ.5.70 இலட்சம் செலவில், கையகபபடுத் தப்பட்ட அவ்வீட்டைப் புதுப்பிக்க மேலும் ரூ.5 இலட்சம் நிதி ஒதுக்கி யுள்ளதாக அரசு தெரிவித்தது.

சென்ற 1992-ஆம் ஆண்டு மத்தியில், நவீன பாணியிலிருந்த "சன்செட்டி பவன் மீண்டும் அந்நாளில் (1920-21) கவி பாரதியார் வாழ்ந்த காலத்தில் எப்படி இருந் ததோ, அதே உருவில் கைதேர்ந்த ஸ்தபதிகளையும், கட்டடக் கலை வல்லுநர்களையும் கொண்டு புதுப் பித்து அதில் "மகாகவி சுப்பிர மணிய பாரதியார் நினைவு இல்லம்" என்ற எழுத்துக்களோடு பெருமையாகக் காட்சியளிக்கும் இந்நினைவாலயத்தை, மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், 1993-ஆம் ஆண்டு அக்டோபர் 2-ந் தேதி காந்தியடிகளின் பிறந்த தினத் தன்று திறந்துவைத்தது, தமிழக வரலாற்றிலேயே ஓர் புனித நிகழ்ச்சியாகும்!

---

## பொன்மொழிகள்

நீங்கள் எதைச் செய்தாலும் சரி; உலகத்திற்கும் உள்ளத்திற்கும் உண்மையாகவே நடந்து கொள்ளுங்கள்.

— காந்தியடிகள்

**எரிகிற நெருப்பை நீரினால் அணைப்பதைப் போல மனதில் எழுகின்ற கோபத்தைப் புத்தியினால் அடக்குகிறவனே மகாத்மா.**

**—ராமாயணம்**

**தனது உள்ளத்தில் மனிதன் கட்டும் மாளிகைக்குத் தூய்மை, நல்லறிவு, இரக்கம் அன்பு ஆகிய நான்கும் நான்கு சுவர்களாக அமைகின்றன.**

தாயுமானவர்

தூரத்தில் உள்ளதை எதிர்பார்த்து அருகில் இருப்பதை அலட்சியம் செய்யாதே.

— ஆஸ்கார் ஒயில்டு

அறிவாளி தன்னுடைய வாழ்க்கையில் சிறப்பாக இருக்கத் தேர்ந்தெடுப்பது அடக்கத்தைத் தான்

- திருவள்ளுவர்

பேச்சு சிறந்ததுதான்; ஆனால் அதைவிட மௌனம் மிகவும் சிறந்தது.

— தாமஸ் கார்லைல்

அழகு பெண்களுக்குப் பெருமையைத் தருகிறது. அடக்கம் அவர்களுக்கு அளவற்ற மகிமையைத் தருகிறது. கற்பு அவர்களைத் தெய்வம் ஆக்குகிறது.

- சேக்ஸ்பியர்



என்ற பெயரையும், புகழையும் தன்னகத்தே பெற்ற, இந்த வட ஆர்க்காடு அம்பேத்கார் மாவட்ட வளர்ச்சிக்கு, உங்கள் அன்புச் சகோதரி, 126 கோடி ரூபாய்க்கான புதிய திட்டங்களுடன், இன்று உங்களைக் காண வந்துள்ளேன். 59 கோடி ரூபாய்க்கான முடிவுற்ற திட்டங்களை, இன்று நான் துவக்கி வைத்து 40 கோடி ரூபாய்க்கான புதிய திட்டங்களுக்கு, அடிக்கல் நாட்டியுள்ளேன். மேலும் 27 கோடி ரூபாய் செலவில், 54000-க்கும் மேற்பட்ட பயனாளிகளுக்கு, அரசின் பல்வேறு நலத்திட்ட உதவிகளை, வழங்கப் போவதிலும், நான் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

1991 ஆம் ஆண்டு நவம்பர் மாதம், இம்மாவட்டத்தில், அறிவொளி இயக்கத்தின் முதல் கட்டம் தொடங்கப்பட்டு, 3 இலட்சம் பேருக்கு எழுத்தறிவுக் கல்வி போதிக்கப்பட்டுள்ளது. எனவே, இந்த மாவட்டத்தை, "முழு எழுத்தறிவு பெற்ற மாவட்டமாக'', இன்று அறிவிப்பதில், நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன். இந்த மாபெரும் சேவையில், தங்களை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டு செயலாற்றிய, 50,000 தன்னார்வத் தொண்டர்களுக்கும், அரசு அலுவலர்களுக்கும், என்து நெஞ்சார்ந்த நன்றியை உரித்தாக்கிக் கொள்கிறேன். கடந்த ஆண்டு நான் துவக்கிவைத்த, அறிவொளி இயக்கத்தின் இரண்டாவது கட்டப் பணியையும், அதே ஆர்வத்துடன், நிறைவேற்றி முடிக்க வேண்டும் என்று, நான் கேட்டுக் கொள்கிறேன்.

உங்கள் அன்புச் சகோதரியின் ஆட்சி அமைந்த பின்பு தான், இந்த மாவட்டத்தின் தொழில் வளர்ச்சி, ஒரு புதிய உத்வேகத்தைப் பெற்றுள்ளது என்பது, நிதர்சனமான உண்மை, இராணிப்பேட்டையில் அமைந்துள்ள, தொழிற்பேட்டைகளின் பங்கு, இதில் மிகக் கணிசமானது.

இம்மாவட்டத்தில் அமைந்துள்ள, 493 தோல் பதனிடும் தொழிற்சாலைகளில் இருந்து வெளியேற்றப்படும் கழிவு நீரில் உள்ள 'மாசு,' பாலாற்றையும், இத்தொழிற்சாலைகளைச் சுற்றி உள்ள நிலத்தடி நீரையும், வெகுவாகப் பாதித்துள்ளதையும் இதன் காரணமாக, 35,000 எக்டேர் நிலப்பரப்பு, தரிசாகக் கிடப்பதையும், எங்கள் அரசு அறிந்திருந்த காரணத்தினால்தான் இந்தத் தொழிற்சாலைகளில் இருந்து, வெளியாகும் கழிவு நீரைச் சுத்தம் செய்த பின்பு, பாலாற்றில் விடுவதற்காக, பொதுக் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையங் (Common Effluent Treatment Plants) களை அமைக்கக், கொள்கை முடிவெடுத்து அதைச் செயல்படுத்தியும் வருகின்றது. வாணியம்பாடி. ஆம்பூர், பேரணாம்பட்டு மற்றும் இராணிப்பேட்டை ஆகிய இடங்களில் அமைந்துள்ள, தோல் பதனிடும் தொழிற்சாலைகளிலிருந்து வெளியேற்றப்படும் கழிவு நீரைச் சுத்திகரிப்பு செய்து, சுற்றுப்புறச் சூழலைப் பாதுகாக்க தமிழ்நாடு தோல் வளர்ச்சி நிறுவனம் 4 பொதுச் சுத்திகரிப்பு நிலையங்களை உருவாக்கி வருகின்றது என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். தோல் பதனிடும் தொழிற்சாலைகள், இம்மாவட்டத்தின் பொருளாதார வளர்ச்சிக்கும், வேலை வாய்ப்பிற்கும், அடிப்படையாக அமைந்திருப்பதால், அந்தத் தொழிற்சாலைகளின் வளர்ச்சிக்கு, வழி வகுக்கும் அதே நேரத்தில், சுற்றுப்புறச் சூழலைப் பாதுகாப்பதும், நமது கடமை ஆகும். எனவே தான், இந்தியாவில் வேறு எந்த ஒரு மாநிலத்திலும், செயல்படுத்தாத ஒரு திட்டம் ஒரே மாதிரியான தொழிற்சாலைகளுக்கான, கழிவு நீரைச் சுத்திகரிப்பு செய்யும், "பொதுக் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் முதன் முதலில், தமிழ்நாட்டில் தான், அதுவும் இந்த மாவட்டத்தில் தான், செயல்படுத்தப்பட்டுள்ளது என்பதைப் பெருமிதத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

கிட்டதட்ட, 100 தோல் பதனிடும் தொழிற்சாலைகளைக் கொண்டுள்ள, வாணியம்பாடிப் பகுதியில், இந்தத் தொழிற்சாலைகள் அனைத்

திலும் இருந்து, வெளியேற்றப்படும் கழிவு நீரை, சுத்திகரிப்புச் செய்வதற்காக, மூன்று கோடியே 37 இலட்சம் ரூபாய் செலவில், "பொதுக் கழிவுநீர்ச் சுத்திகரிப்பு நிலையம்'' ஒன்று கட்டி முடிக்கப்பட்டுள்ளது. இன்று, இந்த நிலையத்தைத் திறந்து வைத்ததில், நான் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன். இந்தியாவிலேயே, இது போன்ற முதன் முயற்சி, வெற்றிகரமான முயற்சி, "வாணியம்பாடி கழிவு நீர்ப் பொதுச் சுத்திகரிப்பு நிலையம்'' தான், என்பதைத் தெரிவிப்பதில், நான் மிக்க மகிழ்ச்சி அடைகின்றேன்.

சுற்றுப்புறச் சூழலைப் பாதுகாக்கவும் நிலத்தடி நீரைத் தூய்மையாக வைத்திருக்கவும் விவசாயத்திற்கு ஏற்பட்டுள்ள குந்தகங்களைச், சீர் செய்யவும் அதே நேரத்தில், தொழிற்சாலைகள் நசுங்கிவிடாமல் பாதுகாக்கவும் உங்கள் சகோதரியின் தலைமையில் அமைந்து உள்ள இந்த அரசு - உங்கள் அரசு மிக்க உறுதியுடனும், ஆத்மார்ந்த ஈடுபாட்டுடனும், செயல்பட்டு வருகின்றது என்பதற்கு, இந்தச் சுத்திகரிப்பு நிலையம், ஒரு எடுத்துக்காட்டு என்பதில் ஐயமில்லை.

கழிவு நீர்ப் பிரச்சினையினால் பாதிக்கப்பட்டுள்ள, 35,000 எக்டேர் நிலப்பரப்பைச் சீர்திருத்தி, மண் வளத்தை அதிகரித்து மீண்டும் பழைய நிலைமைக்குக் கொண்டு வருவதற்காக இந்த அரசு, "தொழில்நுட்ப வல்லுநர் குழு" ஒன்றை, ஏற்படுத்தி உள்ளது என்பதையும் இக்குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில், நிவாரணப் பணிகள், விரைவில் மேற்கொள்ளப்படும் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், பாதிப்பிற்கு உள்ளான நிலங்களில், சாகுபடியே செய்ய முடியாமல், தரிசாகக் கிடக்கின்ற நிலங்களுக்கான, நில வரித் தொகை முழுவதையும், ரத்து செய்து, ஆணை பிறப்பித்துள்ளேன் என்பதை, மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

இரண்டு இலட்சம் எக்டேர் வனப் பகுதியைத், தன்னகத்தே கொண்டுள்ள இம்மாவட்டத்தில், சந்தன மரங்களைக், கொடியவர்களின் கைகளில் இருந்து பாதுகாக்க, உங்கள் அன்புச் சகோதரியின் அரசு உங்கள் அரசு பல ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. வனங்களை அழிக்கும் தீயவர்களையும் கடத்தலில் ஈடுபடும், சமூக விரோதச் சக்திகளையும் எதிர்கொள்ள, வனத்துறை அலுவலர்களுக்கு, வாகன வசதிகளும், அதி நவீன துப்பாக்கிகளும், தொலைத் தொடர்புச் சாதனங்களும் வழங்கப்பட்டுள்ளதோடு, சந்தன மரக் கடத்தலில் ஈடுபடும், வாகனங்களைப் பறிமுதல் செய்யவும், வனத்துறை அலுவலர்களுக்கு, 1992 ஆம் ஆண்டு, அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. சந்தனக் கடத்தல் தொழிலில் ஈடுபட்டு வந்த, 310 பேர், குண்டர் சட்டத்தின் கீழ், கைது செய்யப்பட்டுள்ளனர் என்பதிலிருந்து, நாங்கள் எடுத்த நடவடிக்கைகளின் தீவிரத்தை, உங்களால் புரிந்துகொள்ள முடியும், என்று கருதுகிறேன். சந்தன மரக் கடத்தல் வழக்குகளை, விரைவாக விசாரிப்பதற்கு, ஒரு தனி நீதிமன்றத்தை, 1992 இல் ஏற்படுத்தினோம். இந்த அதிரடி நடவடிக்கைகளின் காரணமாக, இம்மாவட்டத்தில், சந்தன மரக் கடத்தலில் ஈடுபட்டு வந்த, சமூக விரோத சக்திகளின் நடமாட்டம், வெகுவாக ஒடுக்கப்பட்டுள்ளதால், வழக்குகளின் எண்ணிக்கையும் குறைந்துள்ளது என்பதை, மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழ்நாட்டிலுள்ள வனங்களைக் காப்பதற்காக, வனத்துறை அலுவலர்களுக்குத் தேவையான ஆயுதங்களையும், வாகனங்களையும், வசதிகளையும், கூடுதல் பயிற்சியையும், அளித்து வருகின்ற எங்கள் அரசு, இந்த ஆண்டு முதல், சிறப்பாகப் பணியாற்றி, சாதனை புரியும் வனத்துறை அலுவலர்களுக்கு, முதலமைச்சரின் தங்கப் பதக்கம் வழங்க முடிவு செய்து உள்ளது என்பதை, மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

இம்மாவட்டத்தில் கிட்டத்தட்ட 16,000, ஓய்வூதியம் பெறுகின்ற முன்னாள் ராணுவத்தினராகவோ, அல்லது இராணுவத்தினரின் குடும்பத்தினராகவோ இருக்கின்றார்கள். தாயகத்தைக் காக்கின்ற பணியில், 1948 ஆம் ஆண்டு முதல், இன்று வரை, உயிர் நீத்த 45 இராணுவ வீரர்களின் குடும்பங்களும், இம்மாவட்டத்தில் வசித்து வருகின்றன. போர்க்களத்தில் உயிர் நீத்த, இராணுவ வீரர்களின் வாரிசுதாரர்களுக்குத், தமிழக அரசுப் பணியில், கருணையின் அடிப்படையில், பணியிடம் வழங்க வேண்டும் என்ற கோரிக்கை இருந்து வருவதை, நான் நன்கறிவேன். இந்தக் கோரிக்கையை ஆய்வு செய்து, விரைவில் இது குறித்து, தக்க ஆணைகள் வழங்கப்படும் என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல, போர்க்களத்தில் காயம் அடைந்த வீரர்கள், மற்றும் அவர்தம் குடும்பங்களின் நலம் காக்க, இந்த அரசு நல்ல திட்டங்களைத் தீட்டிச் செயல்படுத்தும்



என்பதைத் தெரிவித்துக்கொள் கிறேன்.

காங்கேயநல்லூரில் பிறந்த, திரு முருக கிருபானந்த வாரியாருக்கு, ஒரு நினைவு மண்டபம் அமைக்க வேண்டும் என்று, ஆன்மீக மனம் படைத்த பலர் விரும்புவதை நான் அறிவேன். மக்கள் எண்ணம் அறிந்து செயல்படுகின்ற அரசு இந்த அரசு. எனவே, இம்மாவட்ட மக்களின் மனம் மகிழும் வண் ணம், திருமுருக கிருபானந்த வாரி யார் அவர்களுக்கு, நினைவு மண்டபம் ஒன்று, தமிழக அரசின் சார்பில் எழுப்பப்படும் என்பதை, மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதற்கான ஆயத்தப் பணிகள், விரைவில் மேற்கொள் ளப்படும்.

ஒரு மாநிலத்தின் ஒட்டுமொத்த வளர்ச்சி, அந்த மாநிலம் ஒவ் வொரு ஆண்டும், வளர்ச்சிப் பணி களுக்கு என, ஒதுக்கீடு செய்யும் அளவைக் கொண்டும் அந்தத் திட்டங்கள் எந்த அளவிற்குச் செம்மையாகச் செயல்படுத்தப் படுகின்றன, என்பதைக் கொண் டும் தான், தீர்மானிக்க முடியும். நாங்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றபோது, தமிழகத்தின் வளர்ச் சிப் பணிகளுக்கு ஒதுக்கப்பட்ட நிதி, 1300 கோடி ரூபாய் மட்டுமே. ஆனால் அந்த நிலைமையை மாற்றி, 3 ஆண்டுகளில், வளர்ச்சிப் பணிகளுக்கான நிதி ஒதுக்கீட்டை, இரண்டு மடங்குக்கும் மேலாக்கி, இந்த ஆண்டு, 2,750 கோடி ரூபாய் அளவிற்குத், திட்டப் பணிகளுக்கு என, ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்பதைப் பெருமிதத்துடன் சுட் டிக் காட்ட விரும்புகிறேன். தமிழ் நாட்டில் வளர்ச்சிப் பணிகள், கிட்டத்தட்ட 200 சதவிகிதம் அதி கரித்துள்ளன என்பதைத் தான் இது காட்டுகிறது. அந்த வகையில், இந்த மாவட்டத்தின் விரைவான வளர்ச்சிக்கு, இன்று, 126 கோடி மதிப்பில், திட்டங்கள் அர்ப்பணிக் கப்பட்டுள்ளன.

ஆதிதிராவிடப் பெருங்குடி மக்க ளின் நல்வாழ்விற்குப் பல சீரிய திட்டங்களைத் தீட்டி, முனைப் புடன் செயலாற்றும், உங்கள் அன்புச் சகோதரியின் அரசு இம் மாவட்டத்தில் மட்டும், இந்த ஆண்டு 5 கோடி ரூபாய் மதிப்பில், 2402 தொகுப்பு வீடுகள் கட்டி, ஆதிதிராவிடப் பெருமக்களுக்கு, இலவசமாக வழங்கும் என்பதை, மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள் கிறேன். அதேபோலப் பள்ளிக் கூடங்கள், சமுதாயக் கூடங்கள், கசிவு நீர்க் குட்டைகள், போன்ற அடிப்படை வசதிகளை, 4 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் அமைப்பதற்காக, இன்று நான் அடிக்கல் நாட்டியுள்ளேன். 44 இலட்சம் ரூபாய் செலவில், ராணிப்பேட்டை நகரில் தங்கும் விடுதி, மற்றும் வணிக வளாகம் அமைப்பதற்கும் 29 இலட்சம் ரூபாய் செலவில், வாணியம்பாடி நகரில் சாலைகளை மேம்படுத்து வதற்கும் பூங்குளம் சாலையில், 25 இலட்சம் ரூபாய் செலவில், மேம் பாலம் ஒன்றை அமைப்பதற்கும், இன்று அடிக்கல் நாட்டியதில், நான் மகிழ்ச்சி அடைகின்றேன்.

இம்மாவட்டத்தின் குடிநீர்த் தேவையைக் கருத்தில் கொண்டு, 2 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில், 55 இடங்களில், மேல் நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளைக் கட்டுவதற்கு, அடிக்கல் நாட்டியதி லும் 6 கோடியே 63 இலட்சம் ரூபாய் செலவில், 161 புதிய மேல் நிலை நீர்த்தேக்கத் தொட்டி களைத், திறந்து வைத்ததிலும், நான் மகிழ்ச்சி அடைகின்றேன்.

இம்மாநிலத்தின் மிகப் பழமை யான நகராட்சி, என்ற சிறப்பைப் பெற்ற வாலாஜாப் பேட்டையில், குடிநீர்த் தட்டுப்பாடு இருந்து வருவதை, நான் நன்கு அறிவேன். இந்தக் குறையைப் போக்கு வதற்காக, இன்று, 23 இலட்சம் ரூபாய் செலவில், புதிதாக அமைக்கப்பட்டுள்ள, குடிநீர் அபி விருத்தித் திட்டத்தைத் திறந்து வைத்ததில், நான் மன நிறைவு அடைகின்றேன்.

சமுதாயத்தில் அனைத்துத் தரப்பு மக்களுக்கும், வீட்டு வசதிகளை உருவாக்கித் தர வேண்டும் என்பதில், அக்கறை கொண்டுள்ள எங்கள் அரசு, இம் மாவட்டத்தின் தேவையைக் கருத் தில் கொண்டு, 21 கோடியே 20 இலட்சம் ரூபாய் செலவில், 2511 வீடுகளும், குடியிருப்புகளும் கட்டப்படும் என்பதை, நான் பெருமகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும், 12 கோடி ரூபாய் செலவில், 2860 வீட்டு மனைகள், இம்மாவட்டத்து மக்க ளின் தேவைக்கேற்ப, உருவாக்கப் பட்டுள்ளதையும் சுட்டிக் காட்டு வதில், நான் மகிழ்ச்சி அடை கின்றேன்.

பட்டுக்கோட்டை அழகிரி போக்குவரத்துக் கழகத்தின் சார் பில், 18 புதிய வழித் தடங்களையும், 5 கோடி ரூபாய் மதிப்பில், பழைய பேருந்துகளுக்குப் பதிலாக, 81 புதிய பேருந்துகளை வாங்கி வழங்குவதிலும், நான் மகிழ்ச்சி அடைகின்றேன்.

சென்ற ஆண்டு, இராணிப் பேட்டையில் நடைபெற்ற, அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில், நான் அடிக்கல் நாட்



டிய பல்வேறு திட்டப் பணிகள், இன்றைய அளவில் நிறைவு பெற்றுள்ளன. அந்த வகையில், 25 கோடி ரூபாய் மதிப்பில், கிட்டத்தட்ட 4464 கட்டடங்களும், திட்டங்களும், நிறைவேற்றப்பட்டுள்ளன என்பதை நினைத்துப் பார்க்கும்போது, உண்மையில் என் மனம் மகிழ்ச்சி அடைகின்றது.

ஏற்கெனவே பெரிய தொழிற்சாலைகளைத் தன்னகத்தே கொண்ட, இம்மாவட்டத்தின் தொழில் வளர்ச்சிக்கு, சிறப்புச் சேர்க்கும் வண்ணம், 45 இலட்சம் ரூபாய் செலவில், 10 புதிய தொழில் கூடங்களையும், இன்று நான் துவக்கி வைத்துள்ளேன்.

மாவட்டத்தின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்குப் பல கோடி ரூபாய் மதிப்பில், வளர்ச்சித் திட்டங்களைச் செயல்படுத்தி வருகின்ற அதே நேரத்தில் சமுதாயத்தின் நலிவடைந்த பிரிவினருக்கு, அதன் பயன்கள் சென்றடைய வேண்டும் என்ற எண்ணத்தின் அடிப்படையில், பல்லாயிரக்கணக்கான பேருக்கு, அரசின் நலத்திட்ட உதவிகளை, வழங்கி வருகின்றேன். இம்மாவட்டத்தைச் சேர்ந்த 54,000 பேருக்கு, 27 கோடி ரூபாய் செலவில், அரசின் நலத்திட்ட உதவிகள், இன்று, இங்கே, வழங்கப்படவுள்ளன. பயனாளிகள் ஒவ்வொருவருக்கும், இந்த உதவிகளை, நானே நேரிடையாகச் சென்று வழங்க வேண்டும் என்று விரும்பினாலும், நேரத்தின் அருமையைக் கருதி, ஒரு சில பயனாளிகளுக்கு மட்டும், இதே மேடையில் உதவிகளை வழங்க உள்ளேன். மற்ற பயனாளிகளுக்கு மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், பயனாளிகள் இருக்கின்ற இடத்திற்கே சென்று உதவிகளை வழங்குவார்கள் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

அரசின் உதவிகளைப் பெறும் பயனாளிகள் அனைவரும், அவற்றை ஒரு ஆதாரமாகக் கொண்டு, தங்கள் உழைப்பால் உயர்ந்து பொருளாதார முன்னேற்றம் அடைய வேண்டும் என்ற, எனது நெஞ்சார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



தீய எண்ணங்கள் உள்ளே நுழையாதபடி மனக்கதவைப் பூட்டும் சாவி மனிதனிடம் இருக்கிறது.

தமிழ்நாட்டில் மகளிரும் மழலையரும் ஏற்றம் காண்பதற்காகப் பல்வேறு நலத் திட்டங்களை, முனைப்புடன் செயல்படுத்தி வருகிறது உங்கள் அரசு. இந்தியாவில், வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத அளவிற்கு, முதன் முறையாக, பெண்களின் வளர்ச்சிக்கு என, ஒரு கொள்கையையும் குழந்தைகளின் வளர்ச்சிக்கு என, 15 அம்சக் குழந்தைகள் நலத் திட்டத்தையும் தீட்டிச் செயல்படுத்தி வருகின்ற ஒரே மாநிலம், தமிழ்நாடு தான் என்பதைப் பெருமிதத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோல, மகளிரின் மேம்பாட்டிற்குப் பெண்கள் ஆணையம் Women's Commission ஒன்றையும் அமைத்துள்ளோம். சமுதாயத்தில் சரிபாதியாக, எண்ணிக்கையில் மட்டுமின்றி, உரிமையிலும், உணர்விலும், மகளிர் விளங்க வேண்டும் என்பதற்காகப் பல்வேறு சமூக நலத் திட்டங்களை, நாங்கள் ஆத்மார்ந்த ஈடுபாட்டுடன் மேற்கொண்டுள்ளோம். அரசு தொட்டில் குழந்தைகள் திட்டம், பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டம் போன்றவை, சமுதாயத்தில் ஒரு மாபெரும் மாறுதலையும், எழுச்சியையும் உண்டாக்கி வருவதை, நான் கண்கூடாகக் கண்டு வருகிறேன்.

மகளிரின் பிரச்சினைகளைச் சட்ட ரீதியாக அணுகி, தீர்வு காண்பதற்காக, மாவட்டந்தோறும், 'அனைத்து மகளிர் காவல் நிலையங்கள்', எனது நேரடிப் பார்வையில், அமைக்கப்பட்டு வருகின்றன. 20 ஆம் நூற்றாண்டின் இறுதியில், நாம் வாழ்ந்து வருகின்ற சூழ்நிலையில் கூட, சட்ட ரீதியான தீர்வுகளை, மகளிர் பெறுகின்ற ஒரு தனி அமைப்பை, இன்று வரை நாம் ஏற்படுத்திக் கொடுக்கவில்லை. எனவே தான், மகளிரின் சமுதாய வளர்ச்சிக்கு, அத்தகைய அமைப்புகளை உண்டாக்கித் தருவதில், உங்கள் அன்புச் சகோதரியாகிய நான், மிகுந்த தீவிரம் காட்டி வருகின்றேன்.

இத்தகைய காவல் நிலையங்களை, நாடி வருகின்ற மனுதாரர்கள், படிக்காதவர்களாகவும், பாமரர்களாகவும் இருக்கக் கூடும் என்பதால், அவர்களைச் சகோதரிகளாக, தாய்மார்களாகக் கருதி அவர்களின் பிரச்சினைகளைக் கேட்டறிந்து அன்பாகவும், ஆதரவாகவும் நடத்த வேண்டும் என்று, அனைத்து மகளிர் காவல் நிலையப் பெண் ஆய்வாளர்களையும், பெண் காவலர்களையும், கேட்டுக் கொண்டு வருகிறேன். தற்போது செயலாற்றி வருகின்ற, அனைத்து மகளிர் காவல் நிலையங்கள், அத்தகைய ஒரு சேவை மனப்பான்மையுடன் செயல்பட்டு வருவதைப் பலர் என்னிடம் நேரில் எடுத்துரைத்திருக்கிறார்கள். அத்தகைய ஒரு 'அனைத்து மகளிர் காவல் நிலையத்தை', இன்று மதியம், வேலூர் நகரத்தில், இம்மாவட்டத்து மகளிரின் வளர்ச்சிக்காக அர்ப்பணித்து வைப்பதில், நான் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.


அதே போல, இன்று பிற்பகல் வேலூர் நகரில் 75,000 ரூபாய் செலவில், காவல் துறையினரால், காவலர்களின் நலத்திட்டத்தின் கீழ், தனிப்பட்ட முறையில் கட்டப்பட்டுள்ள, காவலர்கள் ஓய்வு இல்லத்தையும், திறந்து வைக்க உள்ளேன் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். வேலூர் காவல் துறையின் இந்த முயற்சிக்கு, எனது மனமார்ந்த பாராட்டுக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த விழாவை, ஒரு மாநாடு போலப் பிரம்மாண்டமான முறையில் ஏற்பாடு செய்துள்ள, இம்மாவட்டத்து அமைச்சர், அன்புச் சகோதரி திருமதி ஆர். இந்திர

குமாரி அவர்கள், ஒரு பெண் மணியாக இருந்தாலும், ஆண்களுக்கு இணையாக, இன்னும் சொல்லப் போனால், ஆண்களைவிட ஒரு படி மேலாக, அத்தனைச் சீரோடும் சிறப்போடும், இந்த விழாவை ஏற்பாடு செய்திருக்கிறார். அவருக்கு எனது பாராட்டுக்கள்.

ஆரம்ப காலத்தில் இருந்தே, இயக்கத்தில் தன்னை முழுமையாக இணைத்துக் கொண்டு, மிகுந்த ஈடுபாட்டுடன் கழகப் பணி ஆற்றி வருபவர், அன்புச் சகோதரி இந்திர குமாரி அவர்கள். கழகத்தில் பல்வேறு முக்கியப் பொறுப்புகளை ஏற்றுக் கொண்டு, நன்முறையில் செயலாற்றி வருபவர், திருமதி இந்திரகுமாரி அவர்கள். மடை திறந்த வெள்ளம் போல, உணர்ச்சிப் பெருக்கோடு, கருத்துச் செரிவோடு, கேட்பவர்கள் அனைவரும், அதிசயிக்கத் தக்க பேச்சாற்றல் படைத்தவர். எத்தனையோ பேர், புலவர் என்று பெயரைச் சூட்டிக் கொண்டு இருந்தாலும், சகோதரி இந்திர குமாரி அவர்கள், புலவர் என்ற பட்டத்திற்கு, எல்லா வகையிலும் தகுதி உடையவர் என்பதை, நான் நிச்சயமாக எடுத்துச் சொல்ல முடியும்.

பொதுத் தேர்தலாக இருந்தாலும் சரி, இடைத் தேர்தலாக இருந்தாலும் சரி; தேர்தல் காலங்களில் இவரது பங்கு, எப்போதுமே கணிசமாக இருக்கும். இந்த மாபெரும் இயக்கத்திற்கு, நான் தலைமை ஏற்ற பின்பு, நடைபெற்ற ஒவ்வொரு தேர்தலிலும், இவர் மிகுந்த ஈடுபாட்டுடன், மகளிர் அணியை ஒன்று திரட்டி, ஊண் உறக்கமின்றி, வீடு வீடாகச் சென்று, தேர்தல் பணி ஆற்றியதை, என்னால் நிச்சயமாக மறக்க முடியாது எடுத்த பணி எதுவாக இருந்தாலும், அதை விரைவாகவும், திறமையாகவும், முடிக்கின்ற, மன உறுதியும், ஆற்றலும், அவரிடம் இயற்கையாகவே இருக்கின்றது. இருப்பினும், பார்ப்பதற்கு எளியவராகவும், பழகுவதற்கு இனியவராகவும், மெய் வருத்தம் பாராமல், சலிக்காமல், உழைக்கக் கூடிய பக்குவத்தையும் பெற்ற ஒரு



வல்லவர். படிப்படியாக இயக்கத்தில் உயர்வு பெற்று, இன்று மகளிர் அணி செயலாளராகவும், நாட்ராம்பள்ளி தொகுதியின் சட்டமன்ற உறுப்பினராகவும், சமூக நலத் துறை அமைச்சராகவும், திறம்பட, நமது அனைவரது பாராட்டையும் பெற்று, செயலாற்றி வருகின்றார். தான் பொறுப்பேற்றுள்ள துறையின் அத்துணை விவரங்களையும், விரல் நுனியில் வைத்து இருக்கும், நிர்வாகத் திறமை படைத்தவர் அன்புச் சகோதரி இந்திர குமாரி அவர்கள். இவரது நிர்வாகத்தின் கீழ், தமிழகத்தின் சமூக நலத் துறை, நடைமுறைப்படுத்தி வரும் திட்டங்கள், மற்ற மாநிலங்களுக்கு, முன்னோடித் திட்டங்களாக அமைந்துள்ளன.

கொண்ட கொள்கையில் உறுதியும், ஏற்றுக் கொண்ட தலைமையின் மீது விசுவாசமும், அசைக்க முடியாத நம்பிக்கையும் கொண்டு உள்ள இவர், தான் எடுத்த முடிவில், எந்த விதமான தடுமாற்றமும், சஞ்சலமும் இன்றி, உறுதியுடன் நிற்கக் கூடியவர். அத்தகைய உறுதியும், கடுமையான உழைப்பும்தான், இன்று அவரை இந்த உயர்ந்த நிலைக்குக் கொண்டு வந்துள்ளது.

மாவட்டம் தோறும், அரசு நலத் திட்ட உதவிகள் வழங்குகின்ற விழாவை, அந்த மாவட்டத்தின் அமைச்சர்கள், சிறப்புறச் செய்வது வழக்கம். ஆனால் இதுவரை ஆண் அமைச்சர்கள் மட்டுமே, இது போன்ற மிகப் பெரிய விழாக்களை, ஏற்பாடு செய்து உள்ளார்கள். இன்று இந்த மாவட்டத்தில், தமிழக அமைச்சரவையில், என்னைத் தவிர உள்ள ஒரே பெண் அமைச்சரான, அன்புச் சகோதரி இந்திர குமாரி அவர்கள், இந்த விழாவை இத்தனைச் சிறப்பாக ஏற்பாடு செய்து, ஒரு பெண், ஒரு ஆணுக்கு, எந்த வகையிலும் குறைந்தவர் அல்ல என்பதை, நிரூபித்துக் காட்டி இருக்கிறார், என்பதை நினைக்கும் போது, ஒரு பெண் முதலமைச்சர் என்ற முறையில், என் மனம் ஆனந்தப் பூரிப்பு அடைகின்றது. அவரது பணி மேலும் சிறக்க, எனது மனமார்ந்த நல்வாழ்த்துக்கள்.

இந்த விழாவை, இத்துணைச் சீரோடும், சிறப்போடும் ஏற்பாடு செய்த, சகோதரி இந்திர குமாரி அவர்களுக்கும், அவருக்கு ஒத்துழைப்பை நல்கிய, மாண்புமிகு அமைச்சர் பெருமக்களுக்கும், அரசு அலுவலர்களுக்கும், காவல் துறை அலுவலர்களுக்கும், எனது பாராட்டுக்களையும், நெஞ்சார்ந்த நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த மாவட்டத்திற்கு வருகை தந்த என்னை, ஒரு புதிய எழுச்சியுடன் வரவேற்ற, இம்மாவட்ட வாழ் மக்கள் அனைவர்க்கும், என் நெஞ்சார்ந்த நன்றியை உரித்தாக்கிக் கொள்கிறேன். நீங்கள் அனைவரும், எல்லா வளங்களும், நலன்களும் பெற்று, பல்லாண்டு வாழ வேண்டும் என்ற, எனது நெஞ்சத்து நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

### தமிழ் வளர்த்த பெரியார்:

# பேரறிஞர் அண்ணா



எண்ணற்ற எழுத்தோவியங்களால் சொல்லோவியங்களால் எல்லாருடைய இதயங்களிலும் குடியிருப்பவர் -

'தம்பிக்குக் கடிதம்' எழுதி, தமிழ்-தமிழர்-தமிழ்நாடு உயரவும், இளைஞர்கள் எழுச்சிபெறவும், தூங்கிக் கிடந்த தமிழர்களைத் தட்டி எழுப்பி விழிப்புணர்ச்சியூட்டியும், காலமெல்லாம் தம் எழுத்துக்களைப் பயன்படுத்தியவர்-

மேடைப் பேச்சுக்கு இலக்கணம் வகுத்து, மேதினி மேன்மையுறக் கருத்து மழை பொழிந்தவர்-

சிந்தனையாலும், செயலாலும் செயற்கரிய செயல்களைச் செய்து செகமிசை வாழ்வாங்கு வாழ்ந்தவர்-

அவர்தான், பேரும் புகழும் பெற்ற பேரறிஞர் அண்ணா அவர்கள்.

அண்ணாவின் வாழ்க்கை, கடல் போன்று பரந்துபட்டது. அந்தக் கடலிலிருந்து ஒரு சில துளிகளை மட்டும் இப்போது பார்ப்போம்.

பேரறிஞர் அண்ணா அவர்கள் *1909*-ஆம் ஆண்டு, செப்டம்பர் திங்கள் 15-ஆம் நாள் காஞ்சிபுரத்தில் ஒரு ஏழைக் குடும்பத்தில் பிறந்தார். பெற்றோர் நடராசன், பங்காரு அம்மையார். இவரை வளர்த்து ஆளாக்கியவர் பங்காரு அம்மையாரின் தங்கை இராசாமணி அம்மையார். அண்ணா தம் சிற்றன்னையைத் 'தொத்தா' என்று அழைத்துவந்தார்.

முதலில் அண்ணா, காஞ்சிபுரம் உயர்நிலைப் பள்ளியில் பயின்றார். *1928*-இல் சென்னை பச்சையப்பன் கல்லூரியில் பயின்று எம்.ஏ., பட்டம் பெற்றார். கல்லூரியில் படிக்கும் காலத்திலேயே அவர் புத்தகங்களை நிறையப் படித்தார். நூலகங்களைத் தேடிச் சென்றார்.

கல்லூரிக் காலத்திலேயே எழுத்திலும், பேச்சிலும் வல்லமை பெற்று விளங்கினார் அண்ணா.

*1930*-இல் அண்ணாவுக்குத் திருமணம் நடந்தது. துணைவியார் ராணி அம்மையார்.

*1935*-இல் சென்னை கோவிந்தப்ப நாயக்கர் நடுத்தரப் பள்ளியில் ஆசிரியராகப் பொறுப்பேற்றார். இதே ஆண்டில் தந்தை பெரியார் அவர்களை முதன்முதலாகத்திருப்பூரில் நடைபெற்ற செங்குந்தர் மாநாட்டில் சந்தித்தார்.

நீதிக் கட்சியின் கொள்கைகள் அண்ணாவைப் பெரிதும் கவர்ந்தன. கல்லூரியில் படித்துக் கொண்டிருக்கும்போதே இந்தக் கட்சி, திராவிடர்களுக்கு ஆற்றி வந்த அரும்பணிகள் குறித்து அறிந்திருந்தார் அண்ணா.

அப்போது நடந்த சென்னை நகராண்மைக் கழகத் தேர்தலில் அண்ணா அவர்கள் போட்டியிட்டு வெற்றி வாய்ப்பை இழந்துவிட்டார். என்றாலும், அவர் பணி தொய்வில்லாமல் தொடர்ந்தது. அண்ணாவின் எழுத்துக்களிலும், பேச்சுக்களிலும் ஈர்க்கப்பெற்ற எண்ணற்ற இளைஞர்கள், அண்ணா வழியை ஆர்வமுடன் பின்பற்றத் தொடங்கினர்.

'தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவும் வகை செய்தல் வேண்டும்' என்ற பாரதியின் வாக்கிற்கிணங்க அண்ணாவின்



உருவத்தில் தமிழன்; உயர்குணத்தில் தமிழன்; அன்பு எனும் பண்பில் தமிழன் அடக்கத்தில் தமிழன்; ஆண்மையில் தமிழன் நம் அண்ணா. பரந்த நெற்றி, குறுக்கான மெல்லிய மீசை, விசாலமான முகம், கட்டுமஸ்தான உடற்கட்டு, பந்தயக் குதிரைபோன்று விறுவிறுப்பான நடை, பணிவான நடவடிக்கை, வீர உள்ளம் எல்லாம் ஒருங்கே அமையப் பெற்றவர் தோழர் அண்ணாதுரை.

—கலைவாணர் என்.எஸ். கிருஷ்ணன்.

எழுத்தும் பேச்சும் வளர்ந்தது.

1937-இல் 'நவயுகம்' என்னும் திங்கள் இதழின் ஆசிரியர் ஆனார் அண்ணா.

1938-இல் இந்தி மொழி தமிழ் நாட்டில் கட்டாயமாகத் திணிக் கப்பட்டது. அதை எதிர்த்து முதல் இந்தி எதிர்ப்புப் போராட்டம் நடந்தது. அந்தப் போராட்டத்தில் கலந்துகொண்டதற்காக அண்ணா 4 மாதச் சிறைத் தண்டனைப் பெற்றார். இதற்குப் பிறகு அதாவது 1939-இல், தந்தை பெரியாரோடு அண்ணா நெருங்கியத் தொடர்பு கொண்டிருந்தார். இதே ஆண்டில் அண்ணா, நீதிக் கட்சியின் பொதுச் செயலாளராக நியமிக் கப்பட்டார்.

1940-இல் அண்ணாவின் முதல் புதினம் 'குமாஸ்தாவின் பெண் அல்லது கொலையாளியின் குறிப் புகள்' என்னும் நூல் வெளிவந்தது.

1942-இல், 'திராவிட நாடு' என்னும் திங்களிதழை அண்ணா தொடங்கினார். இந்த இதழில் அண்ணாவின் எழுத்தோவியங்கள் அனைவரையும் கவர்ந்தன. சமு தாயச் சீர்திருத்தக் கருத்துக்கள் பொதிந்த கட்டுரைகள், சிந்தனைச் சிதறல்கள் முதலியன இளை ஞர்கள் மத்தியில் எழுச்சியை உண்டாக்கின. அரசியல் தெளிவு பெறத் தக்க அற்புதமான கட்டு ரைகள் இதழ்தோறும் இடம் பெற்றன.

1943-இல், அண்ணாவின் முதல் நாடகம் 'சந்திரோதயம்' அரங் கேறியது. அந்த நாடகத்தில் அண்ணாவும் நடித்திருந்தார் என் பது குறிப்பிடத்தக்கது.

1944 இல், சேலத்தில் நடைபெற்ற நீதிக் கட்சி மாநாட்டில் கட்சியின் பெயரை 'திராவிட கழகம்' என்ற தீர்மானத்தை அண்ணா முன் மொழிந்தார். மீண்டும் 1948-இல் பள்ளிகளில் இந்தி கட்டாயப் பாடமாக ஆக்கப்பட்டது. இதை எதிர்த்து அண்ணா சிறை சென்றார்.

1949 இல் தனியே ஓர் இயக்கம் அண்ணா அவர்களால் தொடங் கப்பட்டது;

1950-இல், 'ஆரிய மாயை' என் னும் நூலை எழுதியதற்காக அண்ணா அவர்களுக்குச் சிறைத் தண்டனை விதிக்கப்பபட்டது. 1959-இல் அண்ணா காஞ்சிபுரம் தொகுதியிலிருந்து சட்டமன்றத் திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

1962-இல் நாடாளுமன்றத்தில் அண்ணாவின் குரல் ஒலித்தது. அதைக் கேட்டு அந்த அவையே கலகலப்படைந்தது. - கருத்து மழையிலே நனைந்தது.

விலைவாசி உயர்வுப் போராட்டம், இந்தி எதிர்ப்புப் போராட்டம் என்று பல போராட் டங்களில் தீவிரமாகப் பங்கேற்று சிறை புகுந்தச் செம்மல் அண்ணா.

1967 மார்ச்சுத் திங்கள் 6-ஆம் நாள் தமிழ்த் தாயின் தலைமகன் தமிழ்நாட்டின் முதலமைச்சரான பொன்னாள்! அண்ணா, குறுகிய காலமே ஆட்சிப் பீடத்திலே இருந்தார் என்றாலும், அளப்பரிய செயல்களைச் செய்தார். ஏழை எளிய மக்களின் துயர் போக்கும் திட்டங்களைத் தீட்டினார். படி அரிசித் திட்டத்தை – அதாவது ரூபாய்க்கு ஒரு படி அரிசித் திட்டத்தைக் கொண்டு வந்தார். கல்லூரிகளில் புகுமுக வகுப்பு களில் இலவசக் கல்வி வழங்கவும், நிலமற்ற ஏழைகளுக்கு நிலம் வழங்கவும் தக்க ஏற்பாடுகள் செய்தார். தொழிலாளர் தினமான மே நாளை அரசு விடுமுறையாக அறிவித்தார்.

எல்லாவற்றிற்கும் மேலாக, 1968 டிசம்பர் திங்களில் – தமிழ் நாட்டிற்குத் 'தமிழ்நாடு' எனப் பெயர் சூட்டியது, தமிழக வர லாற்றிலேயே பொன்னெழுத்துக் களால் பொறிக்கத்தக்க நிகழ்ச்சி யாக அமைந்தது.

ஆம், 'தமிழ்நாடு' பெயர் சூட்டும் விழா சென்னையிலேயே சீரும் சிறப்புமாக நடைபெற்றது. அண்ணா அவ்விழாவில் கலந்து கொள்ள வேண்டும் ஆனால், அந்தச் சமயத்திலே அண்ணா நோய்வாய்ப் பட்டிருக்கிறார். அவர் எண்ணம் எல்லாம் அந்த விழாவையே சுற்றிக்கொண் டிருக்கிறது. ஆனால், மருத்துவர் களோ விழாவில் கலந்துகொள்ள வேண்டாம் என்றும், முழு ஓய்வு தேவை என்றும் வற்புறுத் தினார்கள். ஆனால், அண்ணாவோ இந்த விழாவில் கலந்துகொள்ளாத உடம்பில் உயிர் இருந்தால் என்ன! போனால் என்ன!" என்று கூறி, 'தமிழ்நாடு' பெயர் சூட்டு விழா வில் கலந்துகொண்டு பேருரை ஆற்றியது தமிழகத்தையே தலை நிமிரவைத்தது.

1968-ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 3-ஆம் நாள் சென்னை மாநகரில் 'இரண்டாம் உலகத் தமிழ் மாநாட்'டை அண்ணா மிகச் சிறப்பாக நடத்தியதை, தமிழ் உலகமே பாராட்டியது.

இந்த மாநாட்டின் தொடக்க விழாவில் பேரறிஞர் அண்ணா ஆற்றிய உரையில் குறிப்பிட்டார்: "தமிழ்ப் பண்பாடு உலகத்தில் எல்லா மனிதர்களையும் சகோதரர் களாகவும், தோழர்களாகவும் ஏற்றுக்கொள்ளும். தன்னிடம் வரு பவர்களை வாழ்த்தி வரவேற்கும். எந்த மொழியையும் உரிய முறை



**சமுதாயத்தின் அடித்தளத்து மக்களின் மேம்பாட்டுக்காகச் செயல்படும் அரசு, இந்த அரசு. 'ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம்' என்ற அண்ணாவின் எண்ணங்களுக்கு, உருக்கொடுக்கும் அரசு; அவரது கொள்கைகளை நெஞ்சில் சுமந்து செயலாற்றும் அரசு.**

யில் மதிக்கும். அறிவுச் செல்வம் உலகின் எந்தக் கோடியில் இருந்தாலும் தேடிச் சென்று எடுத்து வரும். ஆனால், தமிழர்கள் தமக்கென்று உள்ளதை ஒருக்காலும் இழக்கச் சம்மதிக்கமாட்டார்கள்" என்று தமிழ்ப் பண்பாட்டின் சிறப்பை இதைவிட வேறு யாரால் சொல்ல முடியும்.

*1968*-ஏப்ரல் *15*-இல் அமெரிக்க ஏல் பல்கலைக்கழகம் அண்ணாவிற்கு 'பெல்லோசிப்'— வழங்கி மகிழ்ந்தது.

தமிழுக்கும், தமிழர் நல்வாழ்விற்கும் காலமெல்லாம் உழைத்த அண்ணாவைக் கடுமையான புற்று நோய் பற்றியது. சிகிச்சைக்காக அண்ணா அமெரிக்கா சென்றார். வெற்றியுடன் அறுவைச் சிகிச்சை முடிந்து சென்னை, திரும்பினார்.

*1969*-இல் ஜனவரித் திங்கள் *14*-ஆம் நாள், கலைவாணர் திருவுருவச் சிலைத் திறப்பு விழாவில் அண்ணா கலந்து கொண்டார்.. இதுவே அண்ணா கலந்துகொண்ட கடைசி நிகழ்ச்சியாகும். இதே ஆண்டு ஜனவரி *20*-இல் புற்றுநோய் முற்றியதன் காரணமாக அடையாறு மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டார் அண்ணா. அமெரிக்க மருத்துவர் மில்லர் இரண்டாம் முறையாக அண்ணாவிற்கு அறுவைச் சிகிச்சை செய்தார். ஆனால், சிகிச்சை பலனளிக்காமல், *1969* பிப்ரவரி *2*-இல் பேரறிஞர் அண்ணா, நம்மையெல்லாம் விட்டுப் பிரிந்தார். யாருக்காக அண்ணா கண்ணீர் விட்டுக் காலமெல்லாம் உழைத்தாரோ, அவர்களெல்லாம் அண்ணாவின் பிரிவைத் தாங்காது கதறி அழுதார்கள்.

அண்ணா நம்மைவிட்டுப் பிரிந்தாலும், அவர் விட்டுச் சென்ற அழியாச் செல்வங்களான கருத்து மணிகள் நம் காதுகளில் ஒலித்துக்கொண்டிருக்கின்றன.

பேரறிஞர் அண்ணா மிகச் சிறந்த அரசியல்வாதியாக, தத்துவமேதையாக, மனிதநேய மாமனிதராாக, மக்கள் போற்றும் தலைவராக, தலைசிறந்த சிந்தனையாளராக, சீர்திருத்தவாதியாக விளங்கி, தமிழுக்கும், தமிழ்நாட்டிற்கும் பெருமை சேர்த்தார். அவரால் தமிழ் தழைத்தது. அவரது வாழ்வு தமிழ் வாழ்வாகவே மலர்ந்து மணம் வீசியது.

பேரறிஞர் அண்ணா அவர்கள் மாற்றாரை மதிக்கும் பண்பு உடையவர். 'மாற்றான் தோட்டத்து மல்லிகைக்கும் மணம் உண்டு' என்று அவர் கூறிய வார்த்தைகளுக்கு அர்த்தமுண்டு.

அண்ணா அவர்கள், நாட்டு மக்களுக்கு நற்கருத்துக்களை வழங்கிட ஒரு சிறந்த கருவியாகப் பத்திரிகைகளைப் பயன்படுத்தினார். பால பாரதி, நவயுவன், திரவிட நாடு, நம்நாடு, காஞ்சி, Home Land, Home Rule ஆகிய இதழ்களின் ஆசிரியராகப் பணி ஆற்றினார்.

பத்திரிகைகளில் தலையங்கம் தீட்டுவது என்பது அவ்வளவு எளிதான செயலல்ல. அதற்குச் சிந்தனைத் திறனும் செயல் திறனும் மிகமிக முக்கியமான தாகும்:

அண்ணா அவர்கள் எழுதிய தலையங்கங்கள்தலையங்கம் எழுதுவதற்கு முன்மாதிரியாக மட்டுமல்ல, தலையெழுத்தையே மாற்றி அமைக்கும் வகையிலும் அமைந்திருந்தது என்றால் அது மிகை அல்ல.

அண்ணா அவர்கள் ஏராளமான படைப்புகளை இந்தத் தமிழகத்திற்கு வழங்கியுள்ளார்கள். செவ்வாழை, காதல் ஜோதி, இன்ப ஒளி, பித்தளையல்ல பொன்னேதான், வெள்ளை மாளிகையில், ரோமாபுரி ராணிகள், சந்திரமோகன், வண்டிக்காரன் மகன், ஓர் இரவு, சந்திரோதயம், ரங்கோன் ராதா, வேலைக்காரி இப்படி அவரது எழுத்தோவியங்களைப் பட்டியல் போட்டுச் சொல்லலாம்.

இவற்றுள் ஓர் இரவு ஒரே இரவில் எழுதி முடித்த நாடகமாகும்.

தமிழ் தமிழ் என்று கூறுகின்றோம். ஆனால், அந்தத் தமிழை எப்படிப் பயன்படுத்த வேண்டும்? என்பதற்கு அண்ணா அவர்கள் ஓர் அருமையான விளக்கத்தைத் தந்திருக்கிறார்:

"தமிழர் வாழ்வு தழைக்க, தமிழ் மணம் நாடெங்கும் செழித்துக் கொழிக்க, தமிழர் தமிழராய் வாழ, தன்மானத்துடன் வாழ, தமிழன் தன்னைத் தான் உணர்ந்து தன்னம்பிக்கை பெற்று—தன்னையும், தன்னைச் சுற்றிலுமுள்ள சமுதாயத்தின் சூழ்நிலையைத் தெரிந்து புரிந்து-தெளிந்து-வாழும் நிலைக்கான வகையில்-வழியில்-முறையில், முத்தமிழ் விளங்க வேண்டும்; பயன்பட வேண்டும்; பயன்படுத்தப்பட வேண்டும்".

அண்ணா அவர்கள், மற்றவர்களின் திறமையை மதித்தார். அவ்வாறு மதிப்பதுதான் பண்பு என்றும் கூறிவந்தார். அதுமட்டுமல்ல; நம்முடைய திறமை நமக்காக அல்ல, நாட்டுக்காகப் பயன்பட வேண்டும் என்று கூறினார்.

பெண் கல்வி குறித்துப் பல பெரியவர்கள் பேசியிருக்கிறார்கள். அண்ணா அவர்கள், "பெண் கல்வி நாட்டில் எந்த அளவிற்கு உயருகின்றதோ, அந்த அளவிற்கு நாடு மேம்பாடு அடைகின்றது என்று பொருள்" என்று இரத்தினச் சுருக்கமாக உணர்த்தினார்.

இவ்வாறு அண்ணாவின் கருத்து முத்துக்கள், அலை அலையாய் வந்தன. அவையாவும் கடல் அலைப் போலக் காலமெல்லாம் நிலைத்து நிற்கும் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

— பி.வி. கிரி



தந்தை பெரியார் அவர்களின் 116-வது பிறந்த நாளையொட்டி சென்னை, அண்ணா மேம்பாலம் அருகே அமைந்துள்ள அவரது திருவுருவச் சிலைக்கு, மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், மற்றும் வாரியத் தலைவர்கள் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்கள்—17.9.1994.

## படமும் - செய்தியும்

பேரறிஞர் அண்ணா அவர்களின் 86-வது பிறந்த நாளையொட்டி தஞ்சாவூர், நெடுஞ்சாலையில் அமைந்துள்ள அவரது திருவுருவச் சிலைக்கு, மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் மாலையணிவித்து மரியாதை செலுத்தினார். மாண்புமிகு அமைச்சர்பெருமக்களும், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களும் மாலையணிவித்து மரியாதை செலுத்தினார்கள்-15.9.1994.



## மாணவர் பக்கம்



# மகாத்மா காந்தி

**–கலைப்பொழிலன்**

அன்பும் பண்பும் ஒன்றாக
அமைந்த மனிதர் காந்தி!
குன்று போலே புகழ்நிற்க
கொள்கை கண்டவர் காந்தி!

தீண்டா மையெனும் கொடுமையை
வேண்டாம் என்றவர் காந்தி!
ஆண்டான் அடிமை வேற்றுமையை
அகற்றச் சொன்னவர் காந்தி!

கண்ணன் சொன்ன கீதைவழி
கடமை செய்தவர் காந்தி!
உண்மை ஒன்றே கடவுளென
உணர்த்தி வாழ்ந்தவர் காந்தி!

இந்திய நாட்டின் தந்தையென
இசைக்கப் படுபவர் காந்தி!
முந்தைய பெருமை அத்தனைக்கும்
முடிமணி மகாத்மா காந்தி!



**வீட்டிலும் வெளியிலும் தனிமையிலும் கூட்டத்திலும்–எதிலும் எப்போதும் நேர்மை இருக்க வேண்டும், உண்மையிருக்க வேண்டும்.**

## அறிவுச்சுடர்

தொலைபேசியைக் கண்டு பிடித்தவர்– அலெக்சாந்தர் கிரகாம் பெல்.

ரயில் இஞ்சினைக் கண்டு பிடித்தவர்– ஸ்டீபென்சன்.

காடுகள் அதிகமுள்ள மாநிலம்– திரிபுரா.

அம்மைத் தடுப்பு மருந்து கண்டவர்– எட்வர்ட் ஜென்னர்.

நோபல் பரிசு பெற்ற முதல் இந்தியர்– கவியரசர் தாகூர்.

கம்பளம் அதிகமாக உற்பத்தியாகும் நாடு– ஈரான்.

சாரணர் இயக்கத்தை ஏற்படுத்தியவர்– பேடன் பௌல்.

சந்தனமரங்கள் அதிகமாகக் கிடைக்குமிடம்– கர்நாடகம்.

தென் மாநிலங்களில் அதிகம் பயிராகும் உணவு– ராகி.

ஜூடோ குத்துச் சண்டையின் பிறப்பிடம்– ஜப்பான்.

சிகப்பு ரோஜா நகரம்– ஜெய்ப்பூர்.

"கும்பமேளா" நடைபெறும் இடம்– ஹரித்துவார்.

ஆயுள் காப்பீட்டுக் கழகம் தொடங்கிய ஆண்டு– செப்டம்பர் 1 - 1956

உலகின் மிகப் பெரிய நூலகம்– வாஷிங்டனில் உள்ளது.

# இராமநாதபுரம் கட்டட மையம்

## சீர்மிகு பணிகள்

மனிதன் வசிப்பதற்கு வீடு மிகவும் அவசியம். வீடு கட்டுவது தற்காலத்தில் கடினமான காரியம். 'வீடு கட்டிப்பார், கல்யாணம் பண்ணிப்பார்' என்பார்கள். சிரமப்பட்டு வீடு கட்டினாலும் அதைப் பராமரிக்கும் செலவு ஆண்டுதோறும் கூடிக்கொண்டே போகிறது. "யானை அசைந்து தின்னும். வீடு அசையாமல் தின்னும்" என்கிற பழமொழி இதைப் புலப்படுத்தும் . அவரவர் தன்னிடம் இருக்கும் நிதி நிலைமைக்கு ஏற்ப வீடு கட்டிக் கொள்ள வேண்டும். வீடு கட்டுவதில் சிக்கனத்தைக் கடைப் பிடித்து குறைந்த செலவில் நிறைந்த வசதிகளுடன் புதிய தொழில் நுட்பத்தைக் கையாள வேண்டும். இந்தப் புதிய சிக்கனமான தொழில்நுட்பத்தை "ஹட்கோ" இந்திய அரசு மற்றும் தமிழ்நாடு அரசு உதவியுடன் பொது மக்களுக்கு அறிமுகப் படுத்துவதில், இராமநாதபுரம் மாவட்டக் கட்டட மையம் வெகு சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது.

இராமநாதபுரம் மாவட்டக் கட்டட மையமாவது 'ஹட்கோ' இந்திய அரசு தமிழ்நாடு அரசு உதவியுடன் இராமநாதபுரம் மாவட்ட வளர்ச்சி முகமையின் மூலம் இயங்கிவருகிறது.

இளைஞர்களுக்கு - குறிப்பாக கட்டடத் தொழிலாளிகளுக்குப் பயிற்சி அளிக்கிறது. முதலில் இராமநாதபுரம் அருகிலுள்ள கிராமப்புற இளைஞர்களைத் தூண்டி 'டிரைசம்' திட்டம் மூலம் பயிற்சி அளித்துள்ளது. பயிற்சி பெற்றவர்கள் தனியாய்த் தொழில் செய்கிறார்கள். அதையறிந்து தற்போது நிறையப்பேர் பயிற்சி பெற முன்வருகிறார்கள். இங்கு பயிற்சி பெறும் கட்டடத் தொழிலாளிகளைப் பயன்படுத்தியே கட்டட மைய வளாகத்தில் டிரைசம் உள்ளமைப்பு வசதிக்கான கட்டங்கள் குறைந்த செலவிலான தொழில் நுட்பங்களைப் பயன்படுத்தி கட்டப்பட்டு வருகின்றன. அவை முடிவடையும் தறுவாயில் உள்ளது.

ஏற்றி வைத்த ஒரு விளக்கு தொடர்ந்து அணையா விளக்காக எரிந்து ஒளிவீச ஒருவர் எண்ணெய் ஊற்றித் திரியைத் தூண்டிவிடுதல் அவசியம். அதுபோல் இராமநாதபுரம் மாவட்டக் கட்டட மையம் என்னும் விளக்கை முன்னாள் இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு எஸ். ஆதிசேஷய்யா, இ.ஆ.ப. அவர்கள் ஏற்றி வைத்து, அதை அடுத்து வந்த முன்னாள் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு எஸ். ஜனார்தன், இ.ஆ.ப. அவர்கள் தூண்டி வளர்த்ததைத் தொடர்ந்து தற்போது இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவரும் கட்டட மையத்தின் பெருந்தலைவருமான திரு இல. கிருட்டிணன், இ.ஆ.ப. அவர்கள் கட்டட மையத்தின் ஒவ்வொரு வெற்றிக்கும் முழு முதற்காரணமாக இருந்து ஊக்குவித்து வளர்க்கும் அருந்தலைவராயிருக்கிறார்.

ஆரம்ப நிலையில் இக்கட்டட மையத்தில் திட்டப் பணிகள் வெற்றிகரமாகச் செயல்படாமைக்குக் காரணம் சில ஒன்றியப் பொறியாளர்கள் மற்றும் கட்டுமானப் பணியாளர்கள் குறைந்த செலவிலான சிறந்த தொழில்நுட்ப முறைகளில் போதிய ஆர்வம் காட்டி ஒத்துழைக்காததும், சில தவிர்க்க முடியாத சூழ்நிலைகளாலும் தான்.

ஆனால், தற்போது மாவட்ட ஆட்சியர் மற்றும் திட்ட இயக்குநர் அவர்கள் இடையறாத தூண்டுதலின் பேரில் நன்முறையில் மேற்கூறிய குறைகளின்றி நல்ல நிலையில் செயற்பட்டு வருகிறது.

ஆரம்ப நிலையில் வளர்ந்து வரும் கட்டட மையத்தில் மிகக் குறைந்த ஊழியர்களுடன் செயல்பட்டு வருவதால் அவ்வளவு பணிகளையும் மையமே ஏற்று நடத்துதல் அரிது. சமீபத்தில் கட்டட மையத்தில் பெரிரோ சிமெண்ட் கதவுகள் [redacted]ரிக்கும் முறையைப் பயிற்றுவிக்கும் நோக்கத்துடன், இராமநாதபுரம் மாவட்டத்தில் அனைத்து ஒன்றியப் பொறியாளர்களுக்கும், ஒன்றிய மேற்பார்வையாளருக்கும் ஒரு நாள் பயிற்சி முகாம் நடத்தப்பட்டது. இதனால், மரக்கதவுகள் பயன்படுத்துவது தவிர்க்கப்பட்டு காடுகள் அழிவதும் தவிர்க்கப்படும்.

குறைந்த செலவிலான நவீன தொழில்நுட்ப முறைகளை வீடுகள் கட்டுவதில் அறிமுகப்படுத்தும் வகையில் ஆராய்ச்சி மற்றும் முன்னேற்றத்துறையின் உதவி (Research & Development) பெரிதும் துணையாய் உள்ளது. ஆனால், அவை பொதுவான வீடுகட்டும் முகமை அளவிலோ (Public Housing Agency Level) தனியார் அளவிலோ பெரும் பயன் விளைவிக்கவில்லை.

இதனைக் கருத்திற் கொண்டும் இந்திய அரசு, தேசிய அளவிலான கட்டட மையங்கள் அமைப்பை நாட்டின் பல மாவட்டத் தலைமை இடங்களில் நிறுவியது. அதன் விளைவாக நமது தமிழ்நாட்டில் இராமநாதபுரம் மாவட்டக் கட்டட மையம் உருவாக்கப்பட்டது.

1. குறைந்த செலவிலான சிறந்த தொழில்நுட்ப முறைகளை நடைமுறைக்குக் கொண்டு வருவது.

2. கட்டடத் தொழிலாளிகளின் திறனை வளர்ப்பது, கட்டடத்

தொழிலாளி அல்லாத மற்றவர்களுக்குக் குறைந்த செலவிலான கட்டடத் தொழில் நுட்பங்கள் பற்றிய பயிற்சி அளிக்கப்படுவது.

3. குறைந்த செலவிலான தொழில்நுட்பப் பொருட்கள் தயாரித்து நியாயவிலையில் விற்பனை செய்வது.

4. கட்டுமான முகமையாக இயங்கி அரசு மற்றும் அரசு அல்லாத கட்டுமானப் பணிகளை மேற்கொள்வது.

5. குறைந்த செலவிலான புதிய கட்டுமானத் தொழில் நுட்பங்களைப் பயிற்சியின் மூலம் கற்றறிந்த பயிற்சியாளர்களுக்கு இயன்றவரை வேலை வாய்ப்பு அளிப்பது.

## ஹட்கோ/ இந்திய அரசு நிதியுதவி

இந்திய அரசின் சார்பாக ஹட்கோ நிறுவனம் ஒத்துழைத்து, குறைந்த செலவிலான தொழில் நுட்பத்திற்கான விவரங்களை அளிப்பதிலும் உறுதுணையாகச் செயல்படுகிறது. மையத்திற்கான நிதியுதவியாக முதலில் ரூ.2/ இலட்சம் வழங்க ஹட்கோ/ இந்திய அரசு அனுமதி அளித்தது. இம்மையம் 1991-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 18-ஆம் தேதி சொசைட்டிப்பதிவுச் சட்டத்தின் மூலம் பதிவு செய்யப்பட்டது. இம்மையத்தின் செயல்முறைகளை வளர்க்க இதன் பெருந்தலைவராக இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியரும், உறுப்பினர் செயலாளராக இராமநாதபுரம் மாவட்ட வளர்ச்சி முகமை திட்ட இயக்குநரும்,நிர்வாகச் செயலாளராக மையத்தின் திட்டப் பொறியாளரும் உள்ளனர். இராமநாதபுரம் கீழக்கரை சாலையில் அமைந்துள்ள இராஜசூரியமடை கிராமத்தில் 2 ஏக்கர் நிலத்தில் அமைக்கப்பட்டது. 9.8.1991 இல் செல்வி ம.ரா.கேந்திராதேவி திட்டப் பொறியாளராக நியமிக்கப்பட்டதைத் தொடர்ந்து, மையம் செயல்பாட்டுக்கு கொண்டுவரப் பட்டது. திட்டப் பொறியாளர் செப்டம்பர் 1991- இல் கேரளாவில் உள்ள கொல்லம், திருச்சூர், பாண்டிச்சேரி ஆரோவில் ஆகிய இடங்களில் பயிற்சி பெற்றார். அந்த இடங்களுக்குத் தலைமைக் கொத்தனாரும் அனுப்பப்பட்டு பயிற்சி பெற்றார்.

இராஜசூரியமடை கிராமத்தில் அமைந்துள்ள கட்டட மையத்திற்கான நிலத்தில் ஒரு சிறிய 3மீ 6மீ 18 சதுர மீட்டர் அளவிலான அறையும் 50 ச.மீ. வார்ப்புத்தளம் ஒன்றும் அமைக்கப்பட்டன. இந்தக் கட்டட வேலையைக் கட்டட மையமே ரேட் டிரப் இணைப்பு முதலான குறைந்த செலவிலான தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தி கட்டி, முடித்து 4- இல் ஒரு பங்குச் செலவைச் சேமித்தது.அங்கு 6.1.1992 லிருந்து டிரைசம் திட்டத்தின் கீழ், கிராமப்புற இளைஞர்களுக்கான பயிற்சி நடைபெற்றது.

## முதல் திட்டப்பணி

சுந்தரமுடையான் மாதிரி தோட்டக்கலைப்பண்ணையில் ஒரு பண்டக அறையும், பணிக்கூடம் ஒன்றும் கட்டும் கட்டுமானப் பணி முதல் திட்டப்பணியாக ஏற்கப்பட்டு நடத்தப்பட்டது. இதில் 20 சதவீதம் சிக்கனம் அமைந்தது. இத்திட்டப்பணிகளில் இம்மையத்தில் பயிற்சி பெற்ற பெண்களே கலந்து கொண்டு பணியாற்றி வந்தது சிறப்பிற்குரியது.

## மாவட்ட ஆட்சியர் வளாகத்தில் பிரதான மையம்

இராஜசூரியமடை கிராமத்தில் அமைந்த 2 ஏக்கர் நிலத்தில் தண்ணீர் வசதி இல்லாததால் மையம் இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் வளாகத்தில் அரசு விருந்தினர் இல்லம் அருகே 0.75 ஏக்கர் நிலத்திற்கு மாற்றப்பட்டது. இந்நிலம் பிரதான மையமாகக் கருத்தில் கொள்ளப்பட்டது. இராஜசூரியமடை கிராமத்தில் உள்ள நிலமானது கட்டட மையத்தில் கிராம உப மையமாக்கப்பட்டிருக்கிறது. தற்போது அந்தச் சிறு அறை கிராம நிர்வாக அலுவலருக்குச் சாவடியாக ரூ.50/ மாத வாடகையில் பயன்படுத்த அனுமதிக்கப்பட்டிருக்கிறது.

## கட்டட மையத்தின் முதன்மை உள்ளமைப்பு வசதிகள்

கட்டடமைய உள்ளமைப்பு வசதிகளுக்கான கட்டடங்கள்



கட்டுமானப் பணிகளைத் தொடங்க மாவட்ட ஆட்சியர் அவர்களால் அடிக்கல் நாட்டப் பட்டது. இம்மையத்திற்கு டிரைசம் மற்றும் நேரு வேலை வாய்ப்புத் திட்டத்தின் மூலமாக உள் அமைப்பு வசதிகள் உருவாக் கப்பட்டு வருகின்றன. அதன் விபரம் பின்வருமாறு:

## டிரைசெம் உள்ளமைப்பு நிதிமூலம்

1. ஒரு அலுவலக அறை 2. ஒரு வகுப்பு அறை 3. தண்ணீர் தொட்டி 4.ஆர்.சி.சி. வட்டக் கிணறு 5. வார்ப்புத்தளம் 6. பண்டக அறைகள் 7. பயிற்சி யாளர்கள் தங்கும் அறைகள்.

## அரசுப் பல்துறைப்பணி விளக்க முகாம்

இம்முகாமில் குறைந்த செல விலான கட்டடத் தொழில் நுட்ப முறைகளான ரேட் டிரப் இணைப்பு, வளைவுகள், பெர்ரோ சிமிண்ட் கதவு முதலானவற்றின் மாதிரிகள் பொதுமக்களின் காட்சிக்கு அமைக்கப்பட்டன. மேலும் தலைப்பு விரிவுரைகள் மூலமாகவும் குறைந்த செல விலான கட்டடத் தொழில் நுட்பக்குறிப்புகள் என்ற சிறு புத்தகம் வெளியிடப்பட்டு மக் களுக்கு விளக்கியது.

## இந்தியக் கான்கிரிட் இன்ஸ்டிடியூட் உதவியுடன் பயிற்சி முகாம்

18.3.1994 அன்று இந்தியன் கான்கிரீட் இன்ஸ்டிடியூட் உதவி யுடன்கட்டடத் தொழிலாளி களுக்குக் குறைந்த செலவிலான கட்டடத் தொழில் நுட்படங்களில் பயிற்சி நடத்தியது. சுமார் 49 கட்டடத் தொழிலாளர்கள் இதில் கலந்து கொண்டனர். திரு.டி.சீனி வாசன், செயல் மேலாளர், இந்தியன் கான்கிரீட் இன்ஸ்டி டியூட், டாக்டர் திரு ஏ.ஆர் சாந்தகுமார் பேராசிரியர், அண்ணா பல்கலைக்கழகம் மற்றும் திரு எம். நீலமேகம் விஞ்ஞானி கட்டுமானத் தொழில் நுட்ப ஆராய்ச்சி மையம், சென்னை 2 - ஆகியோர் கலந்து கொண்டு பயிற்சியை நடத்தி னார்கள்.

> ✯ ஒருவரின் செயலானது மற்றொருவரின் மனதை நிறைவு செய்வதாக இருக்க வேண்டும்; அப்படி இருக்குமானால், அதுவே அந்தச் செயலுக்குக் கிடைத்த கடமையின் பரிசு ஆகும்.
>
> சியார்ஜ் எலியட்

இராமநாதபுரம் மாவட்ட ஆட சித்தலைவர் மற்றும் இராமநாத புரம் கட்டட மையத்தின் பெருந் தலைவரும், கட்டட மையத்தின் செயலாளரான இராமநாதபுரம் மாவட்ட வளர்ச்சித்திட்ட இயக் குநரும் கலந்து கொண்டு வாழ்த்தினார்கள். விவசாயிகள் பலர் கட்டட மையத்தில் இருந்த மாதிரிகளைப் பார்த்து விவரம் அறிந்தார்கள்.

## தொழில் நுட்ப ஆலோசனை மையமாகச் செயல்படல்

பெரட்டகவயல், பண்டிக் கணோய், மணிகண்டி ஆகிய இடங்களில் ஜவகர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் மூலம் கட்டப்படும் சில கட்டடங்களுக்கு, குறைந்த செலவிலான தொழில் நுட்ப ஆலோசனை அளித்து அந்தந்த ஒன்றியங்கள் மூலம் கட்டப்பட்டு வருகிறது.

## 1994-95-ஆம் ஆண்டிற்கான திட்டங்கள்

பொது விநியோகக் கட்டடங்கள் இந்த ஆண்டில் இராமநாதபுரம், திருப்புல்லாணி, பரமக்குடி, முது குளத்தூர், கடலாடி, நயினார் கோவில் ஆகிய ஒன்றியங்களில் கட்டட மையத்தின் ஆலோ சனையுடன் குறைந்த செலவிலான தொழில் நுட்ப முறைகளான ரேட் டிரப் செங்கல் இணைப்பு ஆர்.சி.சி. பில்லர் ஸ்லாப் போன்றவற்றைப் பயன்படுத்திக் கட்டுவதற்கு முடி வெடுக்கப்பட்டது.

மேலும், அனைத்து ஒன்றியத் திட்டப் பணிகளில் 30% சதவீத பணிகளைக் குறைந்த செலவிலான கட்டுமானத் தொழில் நுட்பங்கள் பயன்படுத்தி முடிக்க மாவட்ட ஆட்சியர் / பெருந்தலைவர் அவர் களால் ஆணையிடப்பட்டது.

## "தானே இயங்கல்" நிறுவனம்


இக்கட்டட மையமான திட்டப் பணிகளிலும், குறைந்த செல விலான கட்டுமானப் பொருட் களை விற்பனை செய்தும், நியாயமான கட்டணம் விலை வைத்து அதிலிருந்து வரும் வரு மானத்தைக் கொண்டு தானே செயற்பட்டு இயங்குகிறது.

இதற்காக மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தலைமையில் 20.5.1994 அன்று நடைபெற்ற கட்டட மைய செயற்குழுக் கூட்டத்தில் கட்டடமைய ஆலோ சனையில் எடுக்கும் கட்டடங் களில் மதிப்பீட்டுத் தொகையில் 3 சதவீதம் மேற்பார்வைக் கட்டண மாகவும் (SUPERVISION CHARGES) ஆலோசனை மதிப் பீட்டுத் தொகையாக ரூ. 50-ம் கட்டட மையமே நிறைவேற்றும் கட்டுமானத் திட்டப் பணிகளுக்கு மதிப்பீட்டுத் தொகையில் 12.50 சதவீதத் தொகையும் நிர்ணயிக் கப்பட்டன. மீன் வளத்துறையின் அதிகாரிகளுக்கான கட்டடங்கள் கட்டும் கட்டுமானப் பணிக்கான மதிப்பீடு தயார் செய்யப்பட்டு அரசுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது.

## விற்பனை மையமாக இயங்கல்:

இந்த ஆண்டில் விற்பனை மையமாகவும் செயல்பட்டு மீன் வளத்துறை மற்றும் இராமநாதபுரம் நகராட்சிக்கு பெர்ரோ சிமின்ட் தொட்டி, கதவு, ஆர்.சி.சி. நிலை போன்ற பொருள்கள் மையத்தில் தயாரித்து விற்பனை செய்யத் திட்டமிடப்பட்டிருக்கிறது. இது சம்பந்தமாகப் பணி உத்தரவு எதிர்பார்க்கப்படுகிறது.

## "குறைந்த செலவில் கட்டடத் தொழில் நுட்பக் குறிப்புகள்:



ரேட் டிரப் செங்கல் இணைப்பு என்பது சாதரணமாக அமைக்கும் இணைப்பைச் சற்று மாற்றி அமைக்கும் முறையாகும். செங் கல்லைக் குத்துக்கல் வரிசையில் அடுக்கிச் சுவர் நடுவில் இடை வெளிஇருப்பதுபோல் கட்டுவது தான் இம்முறை. இவ்வாறு கட்டினால் நமக்கு 20%முதல் 25% வரை செங்கல் மற்றும் சிமின்ட் மிச்சமாகும். இவ்வாறு கட்டும் சுவர் உறுதியாகவும் வெப்பக்கசிவு, மிதமாகவும் இருக்கும். இச்சுவரில் குழாய் மற்றும் மின்சாரக் கம்பிகள் உட்புறமாக எளிதாகப் பொருத்தி வரலாம்.

## நிரப்பிய கான்கிரிட் (பில்லர் கிலாப்)

வீடு கட்டுவதில் அதிகச் செலவாகும் இடம் மேற் கூரையாகும். அதை நிவர்த்தி செய்ய ஒரு புதிய முறையை நாம் கையாளலாம். தற்போது கான் கிரீட் தேவையில்லாத இடங்களில் குறைந்த எடையுள்ள ஓடுகள் அல்லது செங்கல் வைத்து கான்கிரீட் கூரையை அமைக் கலாம். இம்முறையில் சாதாரண கான்கிரீட் கூரை அமைப்பது போல் பலகையை அடித்து, இரண்டு மங்களூர் ஓடுகளை ஒன்றோடு ஒன்று இணைத்து, இரும்புக் கம்பிகளுக்கிடையில் வைக்க வேண்டும். இதனால் விலை குறைந்த ஓடுகள் இருக்கும் பகுதியில் உள்ள விலை உயர்ந்த கான்கிரீட்டை மிச்சப்படுத்த முடியும் மற்றும் கனமான கான்கிரீட்டைக் குறைப்பதால் கூரை அமைக்க தேவையான இரும்புக் கம்பிகளை மிச்சப் படுத்தலாம். ஓடுகளுக்கு இடையில் வெற்றிடம் இருப்பதால் கோடை காலத்தில் மிதமான சீதோஷ் ணத்தை உணரமுடியாது.

## இரும்பாலான சிமிண்ட் கதவு

மரத்தில் விலை அதிகரிக்கும் இக் காலத்தில் மரத்திற்குப் பதிலாக இரும்பாலாகிய சிமிண்ட் கலவை கொண்டு கதவு தயாரிக்கலாம். இவ்வாறு செய்யும் கதவில் சிமிண்ட் கலவை 1:11/2 (சிமிண்ட் ஒரு பங்கு, மணல் ஒன்றரை பங்கு) வீதத்தில் கலவையை எடுத்துக் கொள்ளவும். 22 கேஜ் கோழி வலையை வேண்டிய அளவுக்கு வெட்டி நான்கு அடுக்காக வைத்து சிமிண்ட் கலவையை மெத்திவிட வேண்டும். பிறகு கதவை ஒரு நாள் உலரவிட்டு ஒரு வாரத்திற்கு மேல் தண்ணீரில் மூழ்கவிட்டு உறுதிப் படுத்திய பின் வேண்டிய இடங்களில் துளைபோடும் இயந் திரத்தைக் கொண்டு துளை போட்டு - தாழ்ப்பாள், கீழ்சட்டம் போன்றவற்றைப் பொருத்தலாம். இவ்வாறு தயார் செய்யப்பட்ட கதவானது மரக்கதவுகளைவிடச் செலவு குறைவாகவும் அதிக நாட்கள் நீடித்தும் இருக்கும்.

## ஜன்னல் அல்லது வாயிற்படியின் மேல் உத்திரம்

பொதுவாக ஜன்னல் கதவு போன்ற இடைவெளிகளில் கான் கிரீட் லிண்டல்கள் அதிகமாகப் பயன்படுத்தப்படுகின்றன. லிண் டல் ஒரு எளிய முக்கோண வடிவிலான செங்கல் சுவரைத் தாங்க மட்டுமே பயன்படுகிறது என்பதை நாம் கருத்தில் கொள்வதில்லை. எனவே, அதிகச் செலவினத்தைக் கொண்ட லிண் டல் அமைப்பதைத் தவிர்க்கலாம். அதற்கு மாறாக இடைவெளிகளில் மேல் அரைவட்ட வடிவம் அமைந்த செங்கல் வளைவுகள் அல்லது படி போன்ற செங்கல் வளைவுகளை அமைக்கலாம். பொதுவாக 4 அடிக்குக் குறை வான இடைவெளி இருப்பின் அவ்விடங்களில் லிண்டல் அமைப் பதற்குப் பதிலாகச் செங்கற்களைக் குத்துக்கல் வரிசையில் அடுக்கி அமைக்கலாம். இடைவெளி அதிக மாக உள்ள இடங்களில் லிண்டல் அமைக்க வேண்டியிருப்பின் குறை வான கான்கிரீட்டைக் கொண்டு அமைக்கலாம்.

இவ்வாறாகக் கட்டட மையம் இராமநாதபுரத்தில், இராமநாத புரம் மாவட்ட வளர்ச்சி முகமைத் திட்ட இயக்குநர் திரு பொ. நெல்லையப்பன் அவர்களின் சீரிய முயற்சியில் இயங்கிவருகிறது.

**துரை . ராஜ் குமார்**
**செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்**
**இராமநாதபுரம் மாவட்டம்**

# கண்ணைக் கவரும் வண்ணப் பொம்மைகள்!



## காதி கிராப்ட்

**ந**வராத்திரி என்றதுமே, பொம்மைக் கொலு நம் நினைவுக்கு வரும்.

இல்லங்களிலெல்லாம் கண்ணைக் கவரும் வண்ணப் பொம்மைகள் இடம் பெறும்.

விதவிதமான பொம்மைகளை வாங்க, பொம்மைக் கண்காட்சிகளுக்கு ஆடவர், மகளிர், குழந்தைகள் எனத் திரளாக வருவதுண்டு.

நகரில் பல இடங்களில் பொம்மைக் கண்காட்சிகள் நடைபெறுவதுண்டு. அந்த வகையில், காதி கிராப்ட்டும், காதிகிராமோத்யோக் பவனும் சிறப்பாக இந்தக் கண்காட்சிகளை நடத்தி வருகின்றன.

பாரம்பரியமிக்க நம் கலாச்சாரம், கலைத்திறன் ஆகியவற்றைப் பன்னெடுங் காலமாகப் பாதுகாத்து வரும் தொழில்களில் மட்பாண்டத் தொழில் மிகவும் தொன்மை வாய்ந்ததாகும்.

மிக அற்புதமான கற்பனை வடிவங்களைக் கைகளின் மூலம், மண் பொம்மைகளிலும், மட்பாண்டங்களின் வடிவிலும் படைத்துத் தரும் நம் தமிழ்நாட்டில் மட்பாண்டத் தொழிலாளர்களின் திறமை போற்றுதலுக்குரியதாகும். வேகமாக மாறிவரும் இந்த நாகரிக உலகத்தில் நமது தொன்மையான கலாச்சாரமிக்க மட்பாண்டத் தொழில் நசிந்துவிடாமல் பாதுகாத்து, அத்தொழிலில் ஈடுபட்டுள்ள ஆயிரக்கணக்கான கிராமப்புற ஏழை மட்பாண்டத் தொழிலாளர்களுக்குப் போதிய வேலை வாய்ப்பு அளித்து, வாழ்க்கைக்குத் தேவையான ஊதியம் வழங்கி அவர்களைப் பாதுகாக்கும் தலையாய பணியில் தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் கடந்த 34 ஆண்டுகளாகத் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டுள்ளது.

வாரியத்தின் 5 அலகுகள் மூலமாகவும், 125 தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாகவும், மட்பாண்டத் தொழில் திட்டங்களை வாரியம் திறம்படச் செயல்படுத்தி வருகிறது. 1993-94-ஆம் ஆண்டில் மட்பாண்டத் தொழிலாளர்களின் மூலம் தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் உற்பத்தி ரூபாய் 1,720.50 இலட்சமாகும். 14,245 மட்பாண்டக் கைவினைஞர்கள் சொந்தமாகத் தொழில் செய்ய வாரியம் நேரிடையாக நிதி உதவி அளித்துள்ளது. 1,12,864 மட்பாண்டக் கைவினைஞர்கள் வாரியத்தின் மூலம் வேலை வாய்ப்புப் பெற்று வருகின்றனர். இதில் 45,710 பேர் மகளிர் என்பது குறிப்பிடத்தக்கது. இவர்களில் பெரும்பாலோர் கிராமப்புறங்களில் வாழும் நலிந்த பிரிவைச் சேர்ந்தவர்கள் ஆவர்.

மட்பாண்டத் தொழிலாளர்கள் உற்பத்தி செய்யும் கலைநயமிக்க பொம்மைகளை நவராத்திரிக் காலங்களில், இக்குறளகம் கதர்

அங்காடியில் வைத்து விற்பனை செய்து அவர்கள் நல்ல பயனடையத் தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் ஏற்பாடு செய்துள்ளது. தமிழ்நாட்டின் விருத்தாசலம், வீரபெருமாநல்லூர், திண்டிவனம், கடலூர், காஞ்சிபுரம், சென்னை கொசப்பேட்டை ஆகிய இடங்களிலிருந்து தயாரிக்கப்பட்ட கலைநயமிக்க பொம்மைகள் இக்குறளகம் கதர் அங்காடியில் பெருமளவில் விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளன. இது தவிர, மாவட்டத் தலைநகரங்களில் உள்ள கதர் அங்காடிகளிலும் பொம்மைகள் ஏராளமாக விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளன.

பொம்மை தயாரிக்கும் தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களின் திறமைகளுக்கேற்ப பொம்மைகளின் தரமும், கலை வேலைப்பாடுகளும் இன்று அதிகரித்து உள்ளன.

களிமண் போன்ற பல்வேறு மண்வகைகளில் செய்யப்படும் பொம்மைகள், காகிதக்கூழ் பொம்மைகள், மெருகேற்றப்பட்ட பலவண்ண மண்பொம்மைகள், செம்பு, கறுப்பு, வெள்ளை உலோகத்தில் தயாரிக்கப்பட்ட பொம்மைகள், சந்தன மரம், ரோஸ்வுட், நெட்டி, கொம்புகள், கண்ணாடிக் குச்சிகள் ஆகியவற்றில் தயாரிக்கப்பட்டுள்ள ஏராளமான பொம்மைகள் பல்வேறு வண்ணங்களில் இக்காதி கிராப்டில் விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளன.

இவ்வாண்டு, புதுப்புது வடிவங்களில் பொம்மைகள் கதர் அங்காடியில் விற்பனைக்காகத் தயார் நிலையில் உள்ளன.

ஒவ்வொரு ஆண்டும் பொம்மைகள் விற்பனை பன்மடங்கு அதிகரித்து வருவதே இதற்குச் சான்றாகும். கடந்த 2 ஆண்டுகளில் நவராத்திரி விழா கொலுக் கண்காட்சிக் காலங்களில் பொம்மைகள் விற்பனை விவரம்—

1992 : ரூ.25 இலட்சங்கள்

1993 : ரூ.28 இலட்சங்கள்

இவ்வாண்டு நவராத்திரிக் கொலு பண்டிகைக் காலத்தில் ரூ.30 இலட்சத்திற்குப் பொம்மைகள் விற்பனை செய்ய இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. இவ்விற்பனை இலக்கினை எய்திட சிறப்பான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## காதி கிராமோத்யோக் பவன்

சென்னை மாநகரத்திலேயே பொம்மைக் கொலுக் கண்காட்சியானது, 1969-ஆம் ஆண்டு, அண்ணாசாலையில் உள்ள காதி பவனில் முதன் முதலில் ஆரம்பிக்கப்பட்டது. சுமார் 25 ஆண்டுகளாக இக்கண்காட்சி நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்கது.

இந்தக் கண்காட்சி வைக்க முக்கிய நோக்கம் என்னவென்றால், பொம்மைகள் செய்யும் கலைஞர்கள் தாங்கள் தயார்செய்த பொம்மைகளைத் தலையில் சுமந்துகொண்டு தெருத்தெருவாக விற்பதையும், பல முக்கியமான இடங்களில் உள்ள தெருக்களில் வைத்து விற்பதையும் கண்டு திறமைமிக்க கலைஞர்கள் கௌரவிக்கப் படவேண்டும் என்ற எண்ணத்தில் இதுபோன்ற கண்காட்சியை அன்று இது தொடங்கியது.

பொம்மை செய்யும் கலைஞர்கள் தயார் செய்யும் பொம்மைகளை, காதி கிராமோத்யோக் பவன் வாங்கி, ஒரு பொம்மைக் கொலுக் கண்காட்சி ஏற்பாடு செய்து, அதன்மூலம் விற்பனை செய்ய, வழிவகுத்தது. அதோடு மட்டும் அல்லாமல் ஆண்டு முழுவதும், பொம்மை செய்யும் கலைஞர்களுக்கு மாதா மாதம் வருமானம் கிடைக்க ஏற்பாடு செய்யவே இந்தக் கண்காட்சி அமைக்கப்பட்டது.

பொம்மை செய்யும் கலைஞர்கள் தாங்கள் செய்யும் பொம்மைகளை, காதி பவனுக்குக் கொண்டு வந்து கொடுத்து பயன் அடைந்து வந்தார்கள். கைவினைக் கலைஞர்கள் கௌரவிக்கப்பட வேண்டும் என்ற காந்தியடிகளின் கனவை, காதி பவன் ஒரு குறிக்கோளாகக் கொண்டும், காந்தியடிகளின் விருப்பமான வாடிக்கையாளர்கள் மதிக்கப் படவேண்டியவர்கள் என்ற கொள்கைப்படி நியாயமான விலையில் வாடிக்கையாளர்களுக்குப் பொம்மைகள் கிடைக்கவும், இந்தக் கண்காட்சி தொடங்கப்பட்டது.

இந்தியாவில் உள்ள அனைத்து மாநிலங்களில் செய்யப்படும் பொம்மைகள் — அதாவது, மகாராஷ்டிராவில் உள்ள கோலாப்பூர் மற்றும் ஆக்ரா, கொண்டபள்ளி, லக்னோ, கல்கத்தா, பண்ருட்டி, பாண்டிச்சேரி, காஞ்சிபுரம், மீஞ்சூர் ஆகிய ஊர்களிலிருந்து வரவழைக்கப்பட்ட பொம்மைகள் காட்சியில் இடம் பெற்றுள்ளன.

இங்கு இடம்பெற்றுள்ள பொம்மைகள், மண், காகிதக்கூழ், உலோகம், மரம், கருங்கல், பீங்கான், துணி முதலானவைகளால் தயார் செய்யப்பட்டவை.

கரக செட், கரடி வித்தை செட், நால்வர் செட், ராமேஸ்வரம் ராமர் பூஜை செட், பழனி காவடி, காமாட்சி தங்க ரதம், பழனி தங்க ரதம், பிரதோஷ பூஜை செட் ஆகியவை இவ்வாண்டு இடம் பெறும் புதிய ரகங்களாகும்.

ரூ.3லிருந்து ரூ.6,000 வரை விலையுள்ள பொம்மைகள் காட்சியில் இடம் பெற்றிருக்கின்றன.

கடந்த ஆண்டு பொம்மை விற்பனை ரூ.6 இலட்சம் என இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. இவ்வாண்டு ரூ.7 இலட்சம் என இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. பொதுவாக, இந்தக் கண்காட்சிகள் அக்டோபர் 13 ஆம் நாள் வரை நடைபெறும். அதுமட்டுமன்று, பொதுவாக பொம்மைகள் இங்கு எப்போதும் கிடைக்கும்.

—பி.வி.ஜி.



ஆசிரியரும் வெளியிடுபவரும்: இரா. சம்பத், இ.ஆ.ப., தமிழ்நாடு அரசு செய்தி-மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002. தொலைபேசி எண்: 568926, 568927



தூய
பட்டு

தூய
சரிகை



ராஜகம்பீரமான ஊதா...
செந்தூரப்பூபோல் சிகப்பு...
மங்களகரமான மஞ்சள்...
வான்வெளிபோல் நீலம்...
கற்பனைக் கடங்கா
அற்புத வண்ணங்களில்
நேர்த்தியான பட்டு,
நல்குவது கோ-ஆப்டெக்ஸ்.

கோ-ஆப்டெக்ஸ்
தமிழ் நாடு கைத்தறி

பதிவு எண். M. 8676
Licence No.TN/MS(C)/PP-23

